# ஞானொலி ஆண்டு மலர் 1966


முரசொலி
அண்ணா மலர்
24.9.66,



# பொதிகை மலைத் தென்றலே!

ஆ. சி. தொண்டைமான்

"பொதிகைமலைத் தென்றலே!
போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின்
புதுமணமே!
பதிகத்துத் திருவே!
பழந்தமிழர் புறப் பாட்டே! வாழ்க!
வாழ்க!!"

திக்கெல்லாம் தேன் வாழ்த்து பொங்கி யெழ அண்ணன் பிறந்த நாள் திருவிழா, எழிற் கோலம்-எழுச்சிக் கோலம்-காட்டுகின்ற காட்சிகண்டோம்.

வாழ்த்து கீதம் கேட்டதாலே வயப் பட்டுப் போவார் அண்ணன் என எண்ணி இருந்திடாதே எந்தன் தோழா!

வன்கணாளர் கொடுமை ஆட்சி, தூள்தூளாய்—துளிமண்ணுப் ஆகும் வரை, அறவழியில் நீ நின்று அயர்வின்றி நேர்மையுடன் பாடுபட்டால் ஆயிரங் கோடி வாழ்த்துக்கள் தருகின்ற இன்பத் தைப் பெறுவார் அண்ணன்.

இல்லையெனில் நின் வாழ்த்துப் பயன் இல்லை யென நான் சொல்வேன்.

மாலை தொடுக்கின்ற மலர் அளவு நாட்கள் கூட இடையில் இல்லை.

கல்லூரி வாழ்வில் 'அண்ணா'

மலையளவு வேலைகள் காத்திருக்கும் நிலை காண்பாய்! மாற்றார், அரண் புதுக்கிப் பலம் சேர்க்கப் பணங் குவித்துப் பணியாற்றும் வேகம் காண்பாய்! தோற்றார் தொகை தொகையாய்ப் பணங் கொட்டி எதிர்த்து நின்றார்; எனச் சேதி வருமாறு ஏற்றார் நம் தோழர் சூளுரையை என்றுமட்டும் சொன்னால் போதாது நண்பா; பண அரணை ஊடுருவிப் பாளம் பாளமாய்ப் பிளக்கின்ற கடமைக் கணைகளை நீ ஏவ வேண்டும், இன்று முதல்!

இது தான் நீ அண்ணனுக்கு வழங்குகின்ற பிறந்த நாள் வாழ்த்து!

அண்ணன் ஏற்கின்ற வாழ்த்து! அஃதன்றி நாடதிர முழங்கிப் பயனில்லை. ஏடு கொள்ளாது எழுதிப் பயனில்லை. எத்தனையோ செய்தோம் என எண்ணி இருந்திடாதே. முத்தனைய உன்செயல்கள் முழுமை பெற இடையறாது பணியாற்ற இன்றே உறுதி கொள்க!

"எனக்கென்ன பங்கு?" எனக் கேட்கின்ற கூட்டத்தின் கூடாரம் இன்றைய ஆளுங்கட்சி யென்போம். தனக்கென்று வாழாமல் பிறர்க்கென்றும் கட்சி நலனுக்கென்றும் வாழ்கின்ற உள்ளம் நம் உள்ளம் எனச் சொல்லி மெய்ப்பிப்போம். எடுத்துக் காட்டாய் இருந்திடுவோம்.

இச்செயல்தான் பொதிகைமலைத் தென்றல்போல்; பூங்காற்றின் மென்மை போல் அண்ணன் அகங்குளிர வைக்கின்ற அன்பு வாழ்த்து!

அண்ணன் பிறந்த நாளில் அந்த வாழ்த்து வழங்கிடுவோம்! செயல் புரிவோம்! வெற்றி காண்போம்!

மு. கருணாநிதி.

# பிரதமர் வாழ்த்து

प्रधान मंत्री सचिवालय
PRIME MINISTER'S SECRETARIAT

No. 69/...

नई दिल्ली-११
New Delhi 11, the September 12, 1966

செப்டம்பர் 2ம் தேதியிட்ட தங்கள் அன்பான கடிதத்திற்கு பிரதமமந்திரி நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

செப்டம்பர் 15ம் நாள் திரு அண்ணாதுரை 58 வயதடைவது கேட்டு மகிழ்ச்சியடைகிறார். அவர் நீண்ட நாள் வாழவேண்டும் என்று (பிரதமர்) வாழ்த்துகிறார்.

பிறந்த நாள் வெளியீடுகளிலோ-சிறப்பிதழ்களிலோ-வெளியிட வாழ்த்துச் செய்தி அனுப்பாமலிருப்பது அவரது வழக்கமாயிருக்கிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

எச். ஒய் சாரதாபிரசாத்
பிரதமரின் துணைத்தகவல்
ஆலோசனையாளர்.





# குடியரசுத் துணைத் தலைவர் வாழ்த்து



सत्यमेव जयते

No. VP(II) 4839.

उपराष्ट्रपति, भारत
नई देहली
VICE-PRESIDENT
INDIA
NEW DELHI

September 7, 1966.

அன்புள்ள திரு. கருணாநிதி.

2ம் தேதியிட்டு எழுதிய தங்கள் கடிதத்திற்கு நன்றி கூறுகிறேன்.

திரு. சி. என். அண்ணாதுரையின் 58வது பிறந்த நாளையொட்டி நீங்கள் முரசொலி சிறப்பிதழ் கொண்டு வருவது குறித்து நான் மகிழ்வடைகிறேன். இவருக்கு இந்நாள்போன்ற மகிழ்ச்சிகரமான நாட்கள் திரும்பத் திரும்ப வரவேண்டும் என நான் விரும்புகிறேன்.

Yours sincerely,

Zakir Husain

# ஆழ்ந்த அறிவு + சிறந்த சிந்தனை + பொறுமை:

# அண்ணா!

எஸ். செல்லபாண்டியன்,
பி.ஏ., பி.எல்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9

அன்புடையீர்,

அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி முரசொலி சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆழ்ந்த அறிவும், சிறந்த சிந்தனையும், பொறுமையும், மற்றும் பல பண்புகளையும் கொண்ட அண்ணா அவர்கள், தேசம், நாடு, சமுதாயம் இவற்றின் முன்னேற்றத்திற்காக இன்னும் பல்லாண்டுகள் சேவை செய்யவல்ல திறமையையும் ஆரோக்கியத்தையும் அருளவேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள்,

6-9-1966. (Sd.) செல்லப்பாண்டியன்.





# ராமமூர்த்தி வாழ்த்து

தோழர் அண்ணாதுரை நீடூழி வாழ்ந்து தமிழக மக்களுக்கும் பாரத மக்களுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்று வாழ்த்துக் கூறுகிறேன்.

தி. மு. க.—தோழர் அண்ணாதுரையின் தலைமையில் பல்வேறு திருப்பங்களைத் தாண்டிச் சென்று இன்று தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியாக வளர்ந்துள்ளது. தி.மு.க—இந்த நாட்டில் பெரு முதலாளிகளின் ஆதிக்கத்திலுள்ள முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கு எதிராகத் திரண்டுவரும் ஜனநாயக அணியில் முக்கியமானதோர் பாத்திரத்தை வகுக்கும் முறையில் தோழர் அண்ணாதுரையின் தலைமையில் வளரவேண்டும் என்ற வாழ்த்துரையுடன் இக்கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

அன்பு,

பி. ராமமூர்த்தி





# சொல்லேருழவர்

## நாவலர் இரா. நெடுஞ்செழியன்

இன்றைய தமிழகத்தின், ஏன் இந்தியாவின் ஈடும் எடுப்பும் அற்ற தலை சிறந்த சொற்பொழிவாளர் சொல்லேருழவர் அறிஞர் அண்ணா அவர்களே ஆவார்கள் எனில், அது உயர்ந்தோர் அனைவரும் ஒருமித்து ஒப்பும் ஒரு பேருண்மையாகும்.

சொற்களைப் பொழியும் தன்மையும், அந்தச் சொற்களை ஆளும் திறமையும் அறிஞர் அண்ணா அவர்களிடம் அமைந்திருப்பதைப் போல் வேறு யாரிடமும் அமையவில்லை, சொற்களை ஆளுவதில் அண்ணா அவர்கள்தாம் இன்று மன்னர்மன்னராய் விளங்குகிறார்கள். 'சொற்பொழிவாளர்' என்ற சொற்றொடருக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் பெருமை, அறிஞர் அண்ணா அவர்கள் ஒருவருக்கே உரித்தாகும்.

எவ்வளவோ பேர்கள் சொல்லரங்குகளில் ஏறிநின்று, வாயைத் திறந்து, வாயில் வந்தபடி சொற்களை உதிர்த்துப் பார்க்கின்றனர்; ஒவ்வொரு சொல்லாகப் பிடுங்கிப் பிடுங்கிப் போட்டுப் பார்க்கின்றனர். அவர்களெல்லாம் 'சொல்லுபவர்கள்' என்று தான் பெயர் பெறுபவர்களே தவிர, 'சொற்பொழிவாளர்கள்' என்று பெயர் பெறமாட்டார்கள்.

கோடிக்கணக்கான மக்களில் ஒரு சிலரே அரங்கம் ஏறிப் பேசும் ஆற்றல் படைத்தவர்களாகத் திகழ்கிறார்கள்.

அவர்களிலும் மிகமிகச் சிலர் தாம் 'சொற்பொழிவாளர்' என்ற தகுதியைப் பெற்றவராகிறார்கள். அவர்களிலும் மிகமிகச் சிலர் தாம் நீண்ட நேரம் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவராக இருக்கிறார்கள்; அவர்களிலும் மிகச் சிலர் தாம் கவர்ச்சிகரமாகப் பேசுகிறார்கள்; அவர்களிலும் மிகச் சிலர் தாம் ஓசைநயத்தோடு பேசுகிறார்கள்; அவர்களிலும் மிகச் சிலர் தாம் சொல்லழகோடு பேசுகிறார்கள்; அவர்களிலும் ஒரு சிலர் தாம் பொருளாழம் பொதியப் பேசுகிறார்கள்; அவர்களிலும் ஒரு சிலர் தாம் எடுத்துக்கொண்ட பொருள் பற்றிப் பேசுகிறார்கள்; அவர்களிலும் ஒரு சிலர் தாம் தெளிவாகப் பேசுகிறார்கள்; அவர்களிலும் ஒரு சிலர் தாம் கேட்டார் பிணிக்கும் தகைமையோடு பேசுகிறார்கள்; அவர்களிலும் ஒரு சிலர் தாம் கேளாரும் வேட்கை கொள்ளுமாறு பேசுகிறார்கள்; அவர்களிலும் ஒரு சிலர்தாம் இலக்கியச் சுவைகளோடு பேசுகிறார்கள்; அவர்களிலும் ஒரு சிலர் தாம் கடமை யுணர்ச்சிக்குன்றாமல், கட்டுபாடுக் குலையாமல் கண்ணியம் குறையாமல் பேசுகிறார்கள்; அவர்களிலும் ஒரு சிலர் தாம் அரசியல் விடுதலை வீரர்களாய், பொருளாதாரப் புரட்சியாளர்களாய், சமூகச் சீர்திருத்தத் தொண்டர்களாய்த் திகழ்ந்து பேசுகிறார்கள்; இப்படிப்பட்ட அரியவர்களிலெல்லாம்சிறந்த அரியவராக விளங்குபவர் அறிஞர் அண்ணா அவர்களே யாவாகள்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழில் எவ்வளவுஅழகா

## திராவிடத் தலைவர் அண்ணாவைப் பற்றி சிங்கப்பூர் பிரதமர் லீ

தமிழ் மொழி, தமிழ் நாடு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. உங்களுக்குத் தெரியுமா? திராவிடத் தலைவர்,

தமிழ்ச் சொற்பொழிவாளர் திரு. அண்ணாதுரை சிங்கப்பூர் வந்தபோது நானும் ஜாலான் புசார் ஸ்டேடியம் சென்றிருந்தேன். என் ஆயுளில்அதற்குமுன் அவ்வளவு தமிழர்கள் ஒன்றாகக் கூடியிருந் ததை நான் பார்த்தறியேன்.அவர்கள் பிற்பகல் 2 மணி முதல் நள்ளிரவு வரை ஸ்டேடியத்தில் இருந்தனர். திரு. அண்ணாதுரையை ஏற்றிக்கொண்டுவந்த விமானம் மாலை ஐந்து மணிக்குத்தான் வந்தது. மக்கள் இரண்டு மணிக்கே கூடிவிட்டனர்.

கூட்டம் நள்ளிரவு வரை நடந்தது.ஏன்? தமிழ் ஓர் இனிய மொழி; ஒரு தமிழர் தமிழ் மொழியில் ஈடுபட்டால் அவர் தம் உள்ளம் பறிகொடுத்து மகிழ்ச்சியில் திளைக்கிறார்.

கப் பேசுகிறார்களோ அவ்வளவு அழகாக ஆங்கிலத்திலும், ஆங்கிலத்தில் எவ்வளவு பாங்கோடு பேசுகிறார்களோ அவ்வளவு பாங்கோடு தமிழிலும் பேசும் திறமைபெற்றவர்கள் ஆவார்கள். இது அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் அமைந்துள்ள தனிச் சிறப்பாகும்.

அறிஞர் அண்ணாவின் பேச்சிலே அமைந்துளள ஓசை நயத்தால ஈர்க்கப்படாதவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள், அண்ணாவின் பேச்சின் ஓசையிலே இணையற்று நிற்கும் இசை உணர்வுடையோர் அனைவரையும் ஈர்க்கும் தன்மையது. வீணையின் இனிமை, குழலின் குழைவு, நாயனத்தின் பெருமிதம், மகுடியின் மயக்கு ஆகிய நான்கு பண்புகளும் ஒன்று சேர்ந்தொலிக்கும் தன்மையை அணணாவின் பேச்சின் ஓசையிலே காணலாம்.

அண்ணாவின் பேச்சிலே நீர்மடையின் உடைப்பிலே காணப்படும் படபடப்பும் இருக்காது. கமலை ஏற்ற இறைவையிலே காணப்படும் தேங்கித் தேங்கி வரும் தயக்கமும் இருக்காது; தங்கு தடையின்றிச் சீராகச் செல்லும் ஆற்றொழுக்குப் போல சொல்லோட்டம் சென்று கொண்டிருக்கும்.

அண்ணாவின் பேச்சிலே சொற்கள் ஒன்றோடொன்று மோதாமல், முட்டாமல், முந்தாமல் நாணயச் சாலையில் ஒன்றின்பின் ஒன்றாகவந்து விழுந்து கொண்டிருக்கும் நாணயங்களைப் போல் சொற்கள் ஒன்றின்பின் ஒன்றாக வந்து விழுந்து கொண்டே இருக்கும்,

அண்ணாவின பேச்சிலே அழுத்தம் விழவேண்டிய இடத்தில் அழுத்தம் இருக்கும்; குழைவு தவழவேண்டிய இடத்தில் குழைவு தவழும்.

அண்ணாவின் பேச்சிலே எடுப்பு, தொடுப்பு, முடிப்பு ஒழுங்காக அமையும்.

அண்ணாவின் பேச்சிலே தக்க காரணகாரிய விளக்கங்களோடு கூடிய வாதங்கள் ஒன்றின்பின் ஒன்றாக, ஒன்றை ஒன்று வலுவு படுத்துகிற முறையில், அடுக்கடுக்காக வந்துகொண்டேயிருக்கும்.

அண்ணாவின் பேச்சிலே மாற்றார் எழுப்பக்கூடிய வினவும் இருக்கும; அதற்கு அவர் அளிக்கும் விடையும் இருக்கும். வினா-விடையின் மூலம் அண்ணா அவர்கள் அளிக்கும் விளக்கம் தெளிவாக இருக்கும்.

அண்ணாவின் பேச்சிலே மிக உயர்தரமான கேலியும், கிண்டலும், நகைச்சுவையும் கொஞ்சி விளையாடி மகிழும். அண்ணாவின் கேலியும், கிண்டலும் மாற்றாரையும் வாய்விட்டுச் சிரிக்கவைக்கும்.

அண்ணாவின் பேச்சிலே வரலாறு, இலக்கியம், பொருளியல், சமூகவியல் அரசியல், அறிவியல், தத்துவவியல், நாகரிகவியல், பண்பாட்டியல், காதல், கடமை, வீரம், ஈரம் போன்ற எல்லாமும் துள்ளித்துள்ளி விளையாடும்.

அண்ணாவின் பேச்சிலே இறந்தகால நினைவுகளும், நிகழ்ச்சிகளும் அவ்வப்போது புத்துயிர்பெற்று முழுவடிவோடு காட்சியளிக்கும். அறிஞர் அண்ணா அவர்களுக்கு அமைந்துள்ள நினைவுஆற்றல், வேறு யாரிடமும் அவ்வளவாகக் காணப்படமுடியாத ஒன்று.

அண்ணாவின் பேச்சிலே சிறுசிறு கதைகள், பழமொழி விளக்கங்கள், புதிய புதிய உவமைகள்; நல்ல நல்ல எடுத்துக் காட்டுகள் நிரம்பக் காணப்படும் உவமைகளின் மூலம் கருத்து விளக்கஞ் செய்வது, அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் அமைவதைப் போல் அவ்வளவு அருமையாக வேறு யாரிடத்திலும் காணமுடியாது.

அண்ணாவின் பேச்சை எவ்வளவு நேரம் கேட்டுக்கொண்டிருந்தாலும், இன்னும் பேசமாட்டார்களா என்று ஏக்கத்தோடு எதிர்பார்க்கும் நிலையைத்தான் எவருக்கும் உண்டாகும்.

கார்டினல் நியூமன் என்னும் ஆங்கிலப் பேராசிரியர், ரோம நாட்டுப் பெரும் பேச்சாளரான சிசரோவைப் பற்றிக் குறிப்பிடும் போது போது "லிவி, டாசிடெட், செனக்கா, பிளினி. குவின்டிலியன் போன்றவர்களின் எழுத்துக்களிலே லத்தின் மொழியைத்தான் காண்கிறேன், ஆனால சிசரோவின் எழுத்துக்களில் ரோம்நாட்டு மக்களையே காண்கிறேன்" என்று கூறியுள்ளார். அது போன்று, மற்ற தமிழ்ப் பேச்சாளர்களின் பேச்சிலே தமிழ் மொழியைத்தான் காண்கிறோம்; ஆனால் அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சிலே தமிழ்நாட்டு மக்களையே காண்கிறோம் என்று சொல்லிக் கொள்வதிலேபூரிப்பும் பெருமையும் ஏற்படுகின்றன.

ஐம்பத்தெட்டாவது ஆண்டை அடைந்திருக்கும் அறிஞர் அண்ணா அவர்கள் நலம் பல பெற்று, வளம் பல பெற்று பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு வாழ்வார்களாக!

நாட்டின் அறிவுப்பசியைப் போக்கும் அருந்திறன், கருத்துப் பயிர் வளர்க்கும் சொல்லேருழவர் அறிஞர் அண்ணா அவர்களிடமே இருக்கிறது. வாழ்க அத்திறன்!

# தப்பிப் பிறந்தவர்



முத்துக்கிருஷ்ணன்

'ஒருவனது பெருமையை அளவிட வேண்டுமானால் அவன்மீது பகைக்கக்குவோர் -பொறாமைப் படுவோர், அடக்க நினைப்போர்— அழிக்கத் துடிப்போர்ஆகியோரைக் கணக்கிட்டால் போதும்!

—என்று பழைய சாக்சன் இனத்துக்காரர்கள் சொல்லுவார்களாம். அறிஞர் அண்ணா அவர்களைப் பொறுத்தவரை அது நூற்றுக்கு நூறு உண்மை. வாளுங் கேடயமும் கொண்டு போர்க்களத்தில் ஆற்றல் காட்டி எதிரிகளை அழித்தொழிக்கும் பேரரசர்பற்றிக்கேள்விப்பட்டிருக்கிறோம். அறிவெனும போர் வாளோடுஉத்திஉபாயங்கள்என்னும்கேடயங்களைக் கொண்டு அரசியல் களத்தில ஊடாடி,எதிரணியில் உள்ளவர்களை மெல்ல மெல்லத் தம் பின்னே வந்து நிற்கச் செய்யும் ஆற்றல்மிக்கபேரறிஞரை உலகம் இப்போதுதான் முதல் முறையாகச் சந்திக்கிறது!

அவரைச் சந்திக்கிற முட்டாள்கள் அறிவு பெறுகிறார்கள்! குழம்பிய நெஞ்சத்தார் திடசித்தம் அடைகிறார்கள்! அவரைப் பார்க்காமலே கூடபோற்றுபவர் பலர்! அவரைப் புரிந்தும் புரியாதவர் போல நடிப்பவர் சிலர்!

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குப் பெருக்கல் வாய்ப்பாடு போலே-அறிவியல் அறிஞருக்கு 'லாகரிதம்' போலே —மக்களுக்கு அண்ணா எப்போதும் தேவைப்படுகிறார்! எந்தப் பிரச்னையிலும்: அவர் கருத்தே முற்றமுடிந்ததாக—முழுமையானதாக இருக்கிறது.

'ஆறு தன் கரைகளைத்தானே அமைத்துக் கொள்

கிறது; அதுபோல ஒவ்வொரு தூய சிந்தனையும் தனக்கென ஒரு வழி வகுத்துக் கொள்கிறது. அந்த வழி நடக்க படையைத் தயார் செய்து கொள்கிறது; அந்தப் படைக்குத் கருவிகளை உருவாக்கித் தருகிறது! என்று ஞானி எமர்சன் சொன்ன கருத்தின் பிரதிபலிப்பை அறிஞர் அண்ணாவின் வாழ்வில் முழுக்கக் காணலாம்.

உண்மையான கலைஞன் வானத்துக் கோள்கள் தன் காலடியில் கிடக்கக் காண்கிறான். ஆண்டு பல நடந்து அகிலஞ் சுற்றிய மனிதன், உலகம் தன் காலடி எல்லைக்குள் குறுகி இருப்பதாக உணர்கிறான். அது போலத் அறிஞர் அண்ணாவுக்கு இன்றைய அரசியல் இருக்கிறது:

ஊரார் உழைப்பில் உத்தண்டர்களாக வாழ்கிறவர் தொகை ஏராளம். அமெரிக்கா செல்லும் கப்பல் ஒவ்வொன்றும் கொலம்பஸ் காட்டிய பாதையில் தான் செல்வதை நினைவு கூர்கிறதா? நாவல் எழுதுகிற ஒவ்வொருவரும் இளங்கோ தன் மூதாதை என்பதை நினைக்கிறார்களா? அது போலத் தான் தமிழகத்து எழுத்து முறையில்-பேச்சு வன்மையில் -நாடக அமைப்பில்—கதைப் புனைவில்-நடிப்புப் புதுமையில்-வாதத்திறமையில்-கட்சி உருவாக்கியதில் - அதைப் பேணி வளர்ப்பதில்- அனைத்திலும் தமக்கு முன்னோடி-வழிகாட்டி அறிஞர் அண்ணா அவர்கள் தான் என்பதை அனைவரும் உணரும் காலம் வந்து கொண்டிருக்கிறது.

'எதிரியுடன் எப்போதும் போராடிக் கொண்டிருக்கக் கூடாது. இருந்தால் உன்னுடைய போர்த் தந்திரங்கள் அனைத்தையும் உன் எதிரி வெகு எளிதில் புரிந்து கொள்ளுவான்' என்று நெப்போலியன் சொன்ன மாதிரி, அறிஞர் அண்ணா அவர்கள் அரசியலில் அடிக்கடி போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பதில்லை. வகையாக வந்து மாட்டிக்கொள்ளும் பிரச்சினைகளை விட்டுவிடுவதும் இல்லை.

'ஏ அப்பா! அவர் பேய் போலப்பயங்கரமாக உழைப்பவர் ஆயிற்றே!'

என்று சர் வால்டர் ராலே பற்றி சிசில் ஒருமுறை சொன்ன வாசகங்களை அண்ணாவை எண்ணும் போது நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டி இருக்கிறது!

சாதாரண மனிதனுக்கு மலைப்புத் தருகிற அனைத்தும் அறிஞருக்கு வாடிக்கைச் செயல்கள்! அந்த அபார ஞாபக சக்தி, அந்த அதீதமான அறிவாற்றல், அந்தச் சமயோசித புத்தி, எளிதில் எதையும் புரிந்து கொள்ளும் அந்த ஆற்றல், எதிலும் அந்த ஒருமுனைப்பாடு, எதிலும் தீர்ந்த ஒரு தெளிவு- இவையெல்லாம் சாதாரண மனிதர்களுக்குப் பெரிய விஷயங்கள் தானே!

அவர் மென்மையில் மென்மையானவர்!

தன்மையில் தண்மையானவர்! ஆனால் தம்மைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களிடம் அவர் மூட்டி விடும் உணர்ச்சித் தீ பலருடன் இரும்பை உருக்கும் வல்லமை உள்ளது! அதே போல் தீ நாக்குகளோடு கொழுந்து விட்டு எரியும் உணர்ச்சித் தீயைத் தணித்து அணைக்கும் ஆற்றலும் அவருக்குக் கை வந்த ஒன்று!

முன்னதற்கு எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் ஜி.டி. நாயுடு ஏற்பாடு செய்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அவர்பேசிய பேச்சையும், பின்னதற்குப் பிரிந்துபோனவர்கள் இருந்த போது கோடம்பாக்கம் அண்ணா நகரில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் அவர் பேசிய பேச்சையும் எடுத்துக் காட்டலாம்.

அவர் ஞாபகச் சக்திக்குச் சின்னதொரு எடுத்துக் காட்டு:

திருப்பரங்குன்றத்தில் மாநாடு! வெள்ளம் போல் மக்கள் கூட்டம்! பெரிய காஞ்சிபுரத்திலிருந்து அறிஞர் அண்ணா அவர்களுக்கு உற்ற நண்பர் ஒருவரும் வந்திருந்தார். அவருக்குகொஞ்ச காலத்துக்கு முன், கை எலும்பு முறிந்து அப்போது முற்றும் நலமாகி இருந்தது. அவர் திருப்பரங்குன்றம் வந்திருந்தார். பகைவர் கதி கலங்கும்வண்ணம்தோழர்கள் வழி நடந்த அந்த ஊர்வலத்தில் அண்ணா அவர்கள் வண்ண மலர்த் தேரில் அமர்ந்து வருகிறார். அந்தக் கூட்டத்தில் எப்படியோ அந்த நண்பரை பார்த்துவிட்டார் அண்ணா!

எத்தனையோ நினைவலைகளுக் கூடே அவர் அந்த நணபரை நோக்கித் தம் முன் கையை நீட்டிச் சைகை மூலம் 'கை உடைந்ததே, இப்போது எப்படி இருக்கிறது?' என்று மௌன மொழியில் கேட்கிறார். 'நலமே' என்று சொல்லிவிட்டு பொங்கிவரும் கண்ணீரைத் துண்டால் துடைக்கிறார் நண்பர்.

எவ்வளவு பெரிய இடத்தில் உள்ளவர்! எத்தனை இலட்சம் இதயங்களுக்குச் சொந்தக்காரர்! எவ்வளவு பிரச்சினைகளைத் தீர்வு காண்பதற்காக ஆய்ந்து கொண்டிருக்கிறது அவர் நெஞ்சம! அத்தனைக்கும் ஊடே இதையும் ஞாபகம் வைத்திருந்து என்னைக் கேட்கிறாரே!'

என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தார் நண்பர்.

தமிழகத்தில் தப்பிப் பிறந்து விட்ட இந்த மேதையைத் தமிழர்கள் இனம் புரிந்து கொண்டனர். இனி அவர்கள் எதிர்காலம் வளம் மிக்க ஒன்றாகவே இருக்கும்!



# ஒரே ஒரு தலைவர்

ஆயிரம் மலர்களிலே-அத்தனையும் ஆண்டவனின் பூஜைக்கு உரிய மலர்களாகி விடுவதில்லை! உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் பிறக்கின்றார்கள். எல்லோருமே மனிதசமுதாயத்திற்கு சேவை செய்யும் பண்பாளராகி விடுவதில்லை!

பிறக்கின்றார்கள் பெரும்புகழும் செல்வாக்கும் இருக்க வேண்டுமென்றுதான் பலர் விரும்பி காரியங்களைச் செய்கிறார்கள், ஆனால் பிறந்த மண்ணுக்கு—பெற்ற திருநாட்டுக்கு, உற்ற சகோதரர்களுக்கு நன்மையை செய்வதில்லை!

எத்தனையோ தலைவர்கள்! தலைவர்களாகி விட வேண்டுமே என்பதற்காககூடுவிட்டுகூடுபாய்ந்தவர்கள்! அந்ததிடீர் தலைவர்களை நாம் கண்ணெதிரே காண்கிறோம்; அந்தத் தலைவர்கட்கு சமுதாயத்தில் எத்தகைய மதிப்பு தரப்படுகிறது மக்களால் என்பதையும் கண்ணெதிரேகாண்கிறோம்!

உலகத்து இன்பங்களையெல்லாம் ஒருங்கேதானே அனுபவிக்க வேண்டுமென்ற பேராசை படைத்த பல தலைவர்கள் இருக்கின்றார்கள்.

இத்தகைய ஆசைகட்கு அப்பாற்பட்ட தலைவர்-பண்பின் பெட்டகம்; கண்ணியத்தின் உறைவிடம், பாசத்தின் இருப்பிடம், அறிஞர்க்கு அறிஞர் பெருந்தகை அண்ணா என்றால் மிகை

யாகாது!

தேசவிடுதலைப் போராட்டக்காலத்தில் சுதந்திரஎழுச்சிக்கு வித்தூன்றிய கலைஞர்களைக்கூட இந்த சமுதாயம் கூத்தாடிகள் என்ற இழி பெயரை சூட்டி தலைகுனிய வைத்தது! அந்தக் காலத்தில் ராஜபார்ட், ஸ்ரீபார்ட் என்ற அடைமொழியோடு தான் ஒவ்வொரு கலைஞனும்அழைக்கப்பட்டான்!

அத்தகைய இழி பெயரை- மாற்றி உண்மையான மனிதத்தன்மையோடு கலைஞர்கள் என்னும் புதுப் பெருமையைத் தேடிக் கொடுத்தார் அறிஞர் அண்ணா!

அறிஞர் அவர்கள் கலைஞர்களுக்கு அளித்தபெருமையை உணர்ந்த பின்னர்தான் அரசு கலைஞர்களுக்கு கௌரவத்தை அளிக்கத்தொடங்கியது,

கலைஞனும் மனிதன்தான்! அவனுக்கும் அரசியலிலே பங்கு உண்டு என்பதை எடுத்துக்காட்டப்பட்டது.வடக்கே உள்ள நடிகர் பிருதவி ராஜ் கபூர் பாராளுமன்ற மேலவை உறுப்பிரானார்! அதேபோல் பழம்பெரும நாடகக் கலைஞர் கே.பி. சுந்தராம்பாள் தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினரானார்! அத்தகைய கௌரவத்தை இந்திய அரசு துணிந்து கொடுத்தது என்றால் அதற்கு காரணகர்த்தா தென்னகத்தின் ஈடு இணையற்ற தலைவர்-இலட்சோப இலட்ச இதயங்கவர்ந்த தலைவர் அறிஞர் அண்ணா!

அரசியல் உலகிலே அவர் காட்டிய வழி உண்மையான ஜனநாயகததை மலரச் செய்ய காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது!

கலை உலகிலே அவர் காட்டிய வழி-நாளுக்குநாள் புதுமைக் கருத்துக்கள் மலர்ந்துகொண்டே இருக்கின்றன!

மலர்கின்ற புதுமைக் கருத்துக்களை மாலையாகத் தொடுத்து-அந்த பெருந்தகையின் பாதங்களிலே வைத்து வணங்கும் நாள்தான் அண்ணாவின் பிறந்த நாள்.

மனிதன் எப்படி வாழ வேண்டும்-எப்படிப் பிறரிடம் அன்பு காட்டவேண்டும்-எப்படி வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டவேண்டும் என்பதற்கு ஒருபெரும் எடுத்துகாட்டாய் ஒருபெரும் தலைவராய்த் திகழ்பவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

'அண்ணனே-ஆற்றலே—குளிர்புனலே—தென்றலே! அறிவின் இமயமே! அன்பின் ஆழகே! என்று திருநாட்டில உள்ள திண்தோள் தம்பியர் பலர் புகழாரம் சூட்டி மகிழ்கின்றனர்!

அநதப் புகழாரம் மட்டும் தானா-அண்ணனுக்கு நாம் செய்யும் கடமை!

இல்லவே இல்லை! அண்ணாவின் உள்ளத்திலே உண்மையான மகிழச்சி ஊற்றுபெருக்கெடுக்க வேண்டுமானால் வருகின்ற பொதுத் தேர்தலில் வெற்றிவாகை சூடிக் காட்டவேண்டும்!

'அண்ணா அவர்களே! இதோ; ஆட்சியைப் பிடித்து விட்டோம்; ஜனநாயகத்தின் பேருருவே! இதோ உங்கள் அரியாசனம்!" என்றுகாட்டிடுதல் வேண்டும்!

அதற்கான உறுதியினை இன்று அறிஞர் அண்ணாவின் பேராலே வீரசபதம் ஏற்க வேண்டும்!

கடமை பெரிது-உரிமை பெரிது. உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டும் செயல் பெரிது!

அந்த செயலினை வெற்றியுடன் செய்து முடிக்க இன்றே சூளுரைத்து-

பொதிகை தென்றலே-

பூவின் மணமே-

காஞ்சி தந்த செல்வமே
கருத்துக் கருவூலமே
அறிஞர் பெருந்தகையே
அண்ணாவே வாழ்க,
வாழ்க என்று

வாழ்த்துவோமாக! வாழ்க அண்ணா!! வெல்க உதய சூரியன்!!!

## இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்

கவிதை

# பாசத்தைப் பயிரிட்ட உழவன்!

அறிஞரண்ணா தொல்லுலகம் கண்ட மேதை!
அதோஅந்த வான்புகழைக் கொண்டோன்! அன்பு
நெறித்தலைவன்! நிலாக்குளிர்ச்சி நெஞ்சன்! பொன்னி
நதிப்பெருக்குப் பேச்சாளன்! எழுத்து வேந்தன்!
குறிவைத்து மாற்றாரை குணத்தை மாற்றிக்
கைகூப்பி வணங்கவைத்த நெடிய சக்தி!
முறியடிக்கும் பொறிபறக்கும் பேச்சில் கூட
முனையொடியா நாகரிகம் சேர்த்த அண்ணன்

பகையுணர்ச்சி அரசியலில் உறவை நட்டுப்
பாசத்தைப் பயிரிட்ட உழவன்! என்றும்
நகையவிழ்க்கும் முகப்பொலிவால் நாட்டை, வீட்டை
நரம்பணிந்த வீணையாக ஆக்கும் பாணன்!
தகைமைக்குப் பொதுமைக்கும் அவன்தான் சாட்சி!
தாழம்பூ வால்வைத்தக் கிளியின் பேச்சால்
வகையாகத் தமிழ்த்தேனை வடிப்பான், உண்டோர்
வண்டாகக் கிறுகிறுத்துச் சுருண்டு வீழ்வார்!

எழுத்தெண்ணி எழுதுகின்ற "தம்பி" எல்லாம்
எழுத்துலகின் நிலாக்காலம் வசந்த காலம்
பழச்சாற்றை எப்படியோ சொல்லாய் ஆக்கிப்
படம்பிடிக்கும் பக்குவத்தைப் பார்க்கும் போது
எழுத்துக்குத் தந்தையெனல் மிகையே இல்லை
இகழ்வாரை அவன்செமிக்கும் விதமே வேறு
மழுவாகக் கூர்கொண்ட சொல்லைக் கூட
மலர்விளிம்பாய் மணத்தோடும் அனுப்பி வைப்பார்.

உதிர்கின்ற கருத்தெல்லாம் பவழக் கொத்து!
ஒவ்வொன்றும் சுடர்தெரிக்கும் மாணிக்கங்கள்!
முதிர்ந்தமுத்து! பொற்பிழம்பு! ஞான தீபம்!
மூப்பழிக்கும் சூரணங்கள்! அமுத வெள்ளம்!
கதிரறிவின் பெரும்புதையல்! கமழும் தாது!
கண்ணிறைந்த பிள்ளைமொழி! மாற்றார் நெஞ்சின்
கொதிப்படக்கிக் குளிரவைக்கும் நிலாக்க ருத்து!
கொய்தெடுத்துக் கொள்வதற்கே விளைந்த முல்லை!

மரணத்தை அறிதற்குப் பிறந்த மாந்தர்
மணமேடை, மாணிக்கத் தொட்டில், பாடை
இராப்பகலாய் வருகின்ற இன்ப துன்பம்
இவையெல்லாம் இடையினிலே சந்திக் கின்றார்
சுரப்பெடுக்கும் கண்ணீரைத் துடைத்தே இன்பச்
சூழ்நிலையை ஏற்படுத்த அவ்வப் போது
பிறப்பெடுத்து வருகின்றார் அண்ணா போன்றார்
பிழைப்பதெல்லாம் இவ்வுலகம் அதனால் தானே!

—குடியரசு

# தலைவர்கள் பார்வையில் அண்ணா!



அற்புதம் சூழ் மாலுமி அண்ணா
திரு. வி. க.



இவரே நாவலர்!
-நாவலர் சோமசுந்தர பாரதியார்

...சிறந்த அறிவாளி - மிகச்சிறந்த
...சாலி! _ மகாகனம் சாஸ்திரியார்

மதி நலம் வாய்ந்த மருத்துவர்
- ரா. பி. சேதுப்பிள்ளை


இதோ ஒரு பெர்னாட்ஷா
- கல்கி
அண்ணாவின் தமிழைக் கற்கும்,
மாணவர்களில் ஒருவன் நான்!
— முன்னாள் சபாநாயகர் யு.கிருஷ்ணாராவ்
அண்ணா என்ற வார்த்தைக்கு ஒரு
மந்திர சக்தி உண்டு
—என்.எஸ்.கே
அண்ணாவை வாலிபர்கள் ம
வர்கள் விரும்பிச் சேர்ந்தன
—ஜீவானந்த


பக்தவத்சலம் பார்வையில்... (முன்பு)
அண்ணாவின் புகழ்
அண்ணாவின் புகழ் அவரது வயதுக்கு மேற்பட்டது!
ராசாசர் பார்வையில் அண்ணா!
சமூகத் தொண்டர்
காயிதே மில்லத் பார்வையில்...
மக்கள் இதயத்தில் வீற்றிருப்ப வர்
மபொ.சி. பார்வையில்...
தி.மு.க.
அரசியல் போட்டியில் தி.மு. கழகத்திற்கு வெற்றித் தேடித் தந்தவர்

பெரியார் பார்வையில்...
என் பெட்டிச்சாவியைப் பெறத்
தக்கவர்
இலங்கைப் பெரியார் பார்வையில்...
தமிழர்
நல் வாழ்வு
தமிழரை தமிழராக்கிய
வழிகாட்டி செல்வநாயகம்
சிங்கப்பூர் பிரதமர் லிகுவான்யூ
பார்வையில்...
திராவிடத் தலைவர்
ரங்கா பார்வையில்...
தமிழ்ச் சமுதாயம்
சமுதாயச் சிற்பி


இலக்குவனார் பார்வையில்...
மக்களாட்சி
மக்களாட்சிக் காவலர்
கி.ஆ.பெ.பார்வையில்...
பற்று இல்லாதவரையும் பற்றுகொள்
ளச் செய்யும் பேச்சு!
என் ஆங்கிலப்பேச்சின் வாரிசு
அண்ணா
—சர்.ஏ.ராமசாமி
அவர் தமிழைநான் கற்றேன்!
—தனிநாயகம் அடிகள்

கவிதை

# தேன் கொண்ட பொன் மலர்!



அறியாமை எனுமிருளில் தமிழ ரெல்லாம்
ஆழ்ந்திருக்க அதைநீக்கும் பரிதி ஆனாய்!
வறியாராய் வாழ்கின்ற மக்கள் காணும்
வாழ்வுக்கோர் விடிவெள்ளி ஆனாய்! என்றும்
குறியாக அரசியலாம் வானில், தண்மை
கொடுக்கின்ற வெண்ணிலவாய் ஆனாய்! நாளும்
செறிவாக நறுமணமே பரப்பும் நல்ல
தேன்கொண்ட பொன்மலராய் ஆனாய் வாழ்க!

மாற்றார்கள் மதித்துணரா இயல்பு கொண்ட
மன்னுகின்ற மாமலையாய் ஆனாய்! உன்னை
ஏற்றார்க்கோ தன்வளத்தை எடுத்து நல்கும்
எழில்பெற்ற பொழில்சூழ்ந்த மலையும் ஆனாய்!
ஊற்றாக ஊறுகின்ற அறிவின் ஊற்றே!
உன்னுள்ளப் பரப்புக்கும் ஆழத் திற்கும்
காற்றாடும் அலைகடலே நாணும்; உன்பால்
கனிந்துவரும் தமிழ்ப்பேச்சில் மயங்குந் தென்றல்.

'இந்தியிந்தத் தமிழ்நாட்டிற் புகுவதென்றால்
என்பிணத்தைத் தாண்டிப்பின் புகுதல்வேண்டும்'
இந்தவிதம் முன்னொருநாள் சொன்ன சொற்கள்
இன்னுமெங்கள் செவிகளிலே ஒலித்தே நிற்கும்;
செந்தமிழின் மீதாணை! அண்ணா உன்றன்
திருவடியின் மீதாணை! தாய்மே லாணை!
எந்துரையே! நீபிறந்த திருநாள் தன்னில்
எங்களுடைச் சூளுரையை ஏற்று வாழ்த்து!

உருவாக்கி நீவளர்த்துக் கட்டிக் காக்கும்
உறுதியொடும் உண்மைமிகுந் தம்பி யர்தம்
செருவாற்றல் பொருபடையைக் கடந்தா லன்றோ
தீஇந்தி ஆதிக்கஞ் செலுத்து மிங்கே?
'தருவாகத் தழைத்தோங்கி வளர்ந்து நிற்கும்
தமிழுக்கே இன்னல்தரும் இந்தி தன்னை
எருவாக்கிப் போட்டிடுவோம்! தலைவா உன்னை
இழந்துவிடத் துணியோம்காண்? சூளு ரைத்தோம்!

வலிமைமிகுந் தம்பியரை வாழத்து தற்கு
வாய்சான்ற அண்ணாநீ வாழ்க நன்றே!
புலியனைய போராற்றல் மறவர் கோட்டைப்
புதுக்கோட்டை யாகவென்றும் பொலிய வாழ்க!
நலிவடையும் சமுதாய மக்க ளெல்லாம்
நல்வாழ்வு காணவழி காண்பாய் வாழி!
பொலிவடையத் தமிழாட்சித் தமிழ ராட்சிப்
புத்தாட்சி காணவரும் அண்ணா வாழி!

—கவிஞர் முத்தன்

# செங்கதிர் நன்றி கூறும்!

பன்னீர்க்கு மணமுண்டு! வானம் சிந்தும்
பனிநீர்க்குத் தனிக்கவர்ச்சி உண்டு! பானைத்
தண்ணீர்க்குக் குளிர்ச்சியுண்டு! இளநீர் என்னும்
தனிநீர்க்குச் சுவையுண்டு! குளிக்கும் நல்ல
வெந்நீர்க்கு உடலசதி போக்கு கின்ற
வெதவெதப்பும் கதகதப்பும் உண்டு! மக்கள்
கண்ணீர்க்கோ அறிஞர்களைத் தோன்ற வைக்கும்
கலைத்திறமை—தனித்திறமை என்றும் உண்டு!

முத்துதரும் தமிழகத்தார் கண்ணில் கண்ணீர்
முத்துதிரும் நிலைகண்டு வாட்டம் கொண்டு
அத்தனைபேர் துயரும்தன் நெஞ்சில் ஏந்தி
ஆறுதலைத் தருபவர்தான் அறிஞர் அண்ணா!
நித்திரைக்கு நேரம்ஏது? இரவு! அந்த
நேரத்தும் விழிப்புணர்ச்சி கொண்ட மேதை!
புத்திக்கோ முதலாளி! தேசத் தொண்டு
புரிவதிலோ தொழிலாளி! கருணை வேந்தர்!

செங்கமலம் இவர்சிரிப்பை இரவல் கேட்கும்!
செந்தேனோ இவர் பேச்சின் இனிப்பைக் கேட்கும்!
சங்கீதக் குயில்குரலில் பொறாமை கொள்ளும்!
சரித்திரமோ வரவேற்று வணங்கி நிற்கும்!
செங்கதிரோ தனைக்கட்சிச் சின்ன மாக்கிச்
சிறப்பித்த செயல்எண்ணி நன்றி சொல்லும்!
எங்களைப்போல் தமிழ்படித்த புலவர் கூட்டம்
இவரிடத்தில் தமிழ்கற்கத் தவம்கி டக்கும்!

அரும்புமுகம் குறும்புமுகம் அல்ல; நெற்றி
அகன்றமுகம்; மலர்ந்தமுகம்; மக்கள் நெஞ்சம்
விரும்புமுகம்; வெற்றிமுகம்; வீரம் காட்டும்
மீசைமுகம்; ஆசைமுகம் கொண்ட மேதை!
நரம்புகளை இரும்பாக்கும் கொள்கைப் பாதை
நமக்கமைத்தார்! ஆள்பவர்க்கோ மமதைப் போதை!
வரும்விரைவில் இவர்ஆட்சி! இவரோ ஞானி!
வளர்ந்துவரும் பலர்க்கிவர்தான் உயர்த்தும் ஏணி!

தேரோட்டம் நடந்துவந்த—பஜனைக் கும்பல்!
திரிந்துவந்த வீதியெல்லாம் கொள்கை வெல்லப்
போராட்ட ஊர்வலங்கள் நடத்திப்—பாயும்
புலிநிகர்த்த இளைஞர்களை நடக்க வைத்தார்!
நீரோட்டம் போல்தொடர்ந்து தொடர்ந்து செல்லும்
நிலையான புதுப்பேச்சைப் பேச வைத்தார்!
பாராட்டுப் பாமாலை தொடுப்ப தற்குப்
பைந்தமிழ்ச்சொல் மலர்தேடித் திணறு கின்றேன்!

நாடெல்லாம் சிறந்ததமிழ் நாடா? காணும்
நடையெல்லாம் அன்னத்தின் நடையா? தொங்கும்
கூடெல்லாம் கொம்புத்தேன் கூடா? பாட்டுக்
குரலெல்லாம் இசைக்குயிலின் குரலா? மாற்றார்
ஏடெல்லாம் அண்ணாவின் ஏடா? மற்றோர்
எழுத்தெல்லாம் அண்ணாவின் எழுத்தா? என்றும்
ஈடில்லாப் புகழுக்கும் பேச்சி னுக்கும்
எழுத்துக்கும் இவரேதான் சொந்தக் காரர்!

—புலவர்
பொன்னிவளவன்

படர்ந்துவந்த இருள்விரட்டி ஒளிகொ டுக்கப்
பாய்ந்துவந்த செங்கதிரோ? ஏழை வீட்டில்
தொடர்ந்துவந்த வறுமைதனைத் துரத்து தற்குத்
தோன்றிவிட்ட புதுவைரக் கல்லோ? நெஞ்சின்
இடர்விரட்டிப் புத்திமதி சொல்லி அங்கே
எழுந்துலவும் புதுமதியோ? நெஞ்சில் ஞானச்
சுடர்விளக்காய்த் திகழ்ந்திடும்நம் தலைவ ருக்குச்
சொல்லிடநான் உவமையின்றிக் கலங்கு கின்றேன்!

வாழ்கதமிழ் என்போர்க்கு வாய்இ னிக்கும்
வளர்கதமிழ் என்போர்க்கோ வளர்ச்சி கிட்டும்!
வாழ்கதமிழ்ப் பேரறிஞர் அண்ணா என்று
வாழ்த்துகையில் மெய்சிலிர்க்கும்; வலிவு தோன்றும்!
ஆழ்கடல்சூழ் தாயகத்தார் துயரில் மூழ்கி
ஆழ்ந்தநிலை மாற்றிவழி காட்டி அண்ணா
வாழ்ந்திடுக! பல்லாண்டு வாழ்க! என்று
வாயார வாழ்த்துகின்றேன்! வாழ்க அண்ணா!

## சந்தனமே! மலை மலரே!

சந்தனமே! மலைமலரே! ஆராய்ச் சிப்பெண்
சந்திக்கும் காதலரே! இசைப்பேச் சென்னும்
சிந்துபாடிக் கொண்டும்சிந் தித்துக் கொண்டும்
சிந்தையள்ளிக் கொண்டிருக்கும் அண்ணா! ஈரப்
பந்தலைப்போல் மழைபொழியும் கார்கா லத்தில்
பந்தலிலே பீர்க்கம்பூ மலர்வ தைப்போல்
இந்தநேரம் மலர்கிறது மகிழ்ச்சித் தண்பூ!
இசைஓசைச் செந்தமிழின் இமையே வாழ்க!

மயில்கூட்டம் முட்டையிடும் பாறைபோன்ற
மனவுறுதி படைத்தோரே! கல்விச்சோலைக்
குயில்நீங்கள்! ஆராய்ச்சிக் குரிசில் நீங்கள்!
குலைக்காந்தள் பூங்கொத்து நீங்கள்! மாலை
வெயில்போன்ற மாமருந்து நீங்கள்! கல்வி
வெள்ளத்தைத் தேக்கிவைக்கும் அணைநெஞ் சத்தைப்
பயில்கின்ற போதுபெற்ற மேதை நீங்கள்!
பாராட்டப் படுகின்ற அறிஞர் நீங்கள்!

பூதநாதன் யானையைப்போல் தலைமை தாங்கும்
உயர்பண்பும், ஒப்பற்ற அறிவும், பாரில்
மேதினத்தைப் படைத்திருக்கும் உழைப்பும், கால்கள்
மிதிக்கின்ற நஞ்சைவயல் உரத்தைப் போல
வேதனையை மிதிக்கின்ற வீரப் போக்கும்
வெற்றிக்கு வழிவகுக்கும் என்பார்! உங்கள்
சாதனையைக் கண்டபின்னர் இந்த எண்ணம்
சரியென்று தலையாட்டி ஏற்றுக் கொண்டேன்.

—நா. காமராசன்



# தமிழகமே! வழிகாட்டு!

**என்.வி.நடராசன்**

அன்று! நாடெங்கும், பட்டி தொட்டிகள் உள்பட காந்தி— காங்கிரஸ் என்ற சொற்கள், ஏழை—நடுத்தர மக்களின் இதயங்களிலே இடம்பெற்றிருந்தன. அந்நிய ஆட்சி அகன்று சுதந்திர சுயராஜ்யவாழ்வு மலரும்! வறுமை யொழியும்! வாட்டம் தீரும்! என்று மக்கள் மனமார நம்பியிருந்தனர். காந்தியடிகள் விரும்பிய சுதந்திரமும் அதுவேதான்! வெள்ளையர் ஆட்சி வெளியேறி 20 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆகஸ்டு தோறும் சுதந்திந்திரதினத்தையும் குடியரசு நாளையும் கொண்டாடுவதை காங்கிரஸ் ஆட்சியினரும் தலைவர்களும் மறப்பதில்லை. ஆனல் மக்களுக்கு சுதந்திர வாழ்வு கிடைத்திருக்கிறதா என்பது இன்று கேள்விக் குறியாக எழுப்பப்பட்டுள்ளது. உண்மையிலேயே ஏழை நடுத்தர மக்களின் வறுமை ஒழிந்து வாட்டம் தீர்ந்து வாழ்வில் ஒளி வீசியிருக்குமானல் இந்தக் கேள்விக்கு இடமிருக்காது என்படதை நாணயமான காங்கிரஸ்காரர்களாகிலும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

காந்தியடிகளும் மற்றத் தலைவர்களும், தொண்டர்களும் அந்நிய ஆட்சியை வெளியேற்றச் செய்து ஏழை எளிய மக்களுக்கு உரித்தான சுதந்திர ஆட்சியை உருவாக்க வேண்டும். அந்த ஆட்சியிலிருந்து வெற்றி பெறவேண்டுமென்று மனதார விரும்பி அரும்பாடுபட்டனர். ஆனல் வெள்ளையர் ஆட்சி வெளியேற்றப் பட்டதே யன்றி, காந்தியார் விரும்பிய சுதந்திர வாழ்வு இந்தியத் தலைவர்கள் மத்தியிலுள்ள ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கவில்லை. அவ்வித ஆட்சிமுறை உருவாவதற்குத் தடைக் கல்லாய் இருப்பது யார்? அந்தத் தடைக் கல்தான் இந்தியப் பெரு முதலாளிகள்! தொழிலதிபர்கள்! ஆலை அரசர்கள்!

தேசியப் போராட்டத்தின் போதே இந்தியப் பெரும் முதலாளிகள் வர்க்கம் காங்கிரசுக்குத் துணையாய் நின்று கோடிக் கணக்கான பணத்தை உதவி செய்து வந்திருக்கிருர்கள்! அந்த உதவியை செய்த இந்திய முதலாளிகள் இடைத் தரகர்கள் போலிருந்து அந்நிய ஆட்சியின் பிடிப்பிலிருந்து விடுபட்ட இந்தியத் துணைக்கண்ட அதிகார பீடத்தைத் தங்களின் சொற்படி ஆடும் பதுமையாக ஆக்கிக்கொண்டனர்.

எடுத்துக் காட்டாக ஒன்று கூறுவேன். சர்தார் பட்டேல் இந்திய அரசின் உள்துறை அமைச்சராயிருந்தபொழுது "பெரு முதலாளிகள், வருமான வரியை ஒழுங்காகச்

செலுத்தாமல் ஏமாற்று கின்றனர். இது மக்களுக்குச் செய்யும் துரோகம்'' என்று குறிப்பிட்டு சில முதலாளிகளின் பெயர்ப் பட்டியலேயும் வெளியிட்டார். சர்தார் பட்டேலின் பேச்சுக்கு பதில் அளிக்கும் வகையில் டால்மியா என்ற முதலாளி கூறினர் ''வெள்ளேயர் ஆட்சியின்போது வருமான வரியை எப்படி செலுத்தினேமோ அப்படித்தான் இன்றும் செலுத்துகிறேம். அன்று நாங்கள் தேச பக்தர்களாக—ஏன் தேச பக்தர்களின் பாதுகாவலர்களாகப் போற்றப்பட்டோம். இன்று சர்தார் பட்டேலின் கண்ணேட்டத்தில் இந்திய முதலாளிகள் தேசத் துரோகிகளாக காணப்படுகிறேம். எங்களேப் போன்றவர்களின் பண உதவி இல்லாவிட்டால் காங்கிரஸ் வளர்ந்திருக்க முடியுமா என்று சுடச் சுட பதில் அளித்தார்.

சர்தார் பட்டேல், அந்த முதலாளிகளிடம் பண உதவி பெறவில்லேயென்று தைரியமாகக் கூற முடியவில்லே. டால்மியா காங்கிரசுக்குக் கொடுத்த பணம் எவ்வளவு என்று கூறினல் திருப்பித் தந்துவிடுகிறேம். அதற்காக வருமானவரியை ஒழுங்காகச் செலுத்தாமலிருப்பது நியாயமா என்றுதான் பதில் அளிக்க முடிந்தது. இந்திய முதலாளிகளிடமிருந்து பண உதவியை பெறவில்லே யென்று ஆணைப்பட்ட சர்தார் பட்டேல் அவர்களாலேயே கூற முடியவில்லே.

எனவே நீண்ட பல ஆண்டுகளாக அதாவது வெள்ளேயரின் ஆட்சியின் போதே காங்கிரசுக்கு காவலர்களாக இந்திய முதலாளிகள் இடம் பெற்று வந்துள்ளனர்;. அந்த பாத்யதையையே இன்று வலியுறுத்தும் வகையில் பெரு முதலாளிகள் காட்டும் வழியைப் பின்பற்றி காங்கிரஸ் ஆட்சி நடை போடுகிறது. எனவேதான் காங்கிரஸ் ஆட்சியில் எழைகள் மேலும் ஏழைகளாகி வருகிருர்கள். முதலாளிகள் பெரு முதலாளியாக வளர்ந்து வருகிருர்கள்! இந்த லட்சணத்தில் காங்கிரஸ் ஆட்சியால் ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வில் ஒளிவீசச் செய்ய முடியுமா என்பதை அனேவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

இந்திய அரசின் அமைச்சராயிருந்தவரும் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவருமான தோழர் கே. டி. மாளவியா, இந்த ஆண்டு சூன் திங்களில் சென்னேக் கூட்டமொன்றில் பேசிய போது ''இன்றைய ஆட்சி முதலாளிகள் சொல்வதைப் போல நடைபெற்று வருகிறது. இந்த நிலே மாற வேண்டும். சமதர்ம ஆட்சி முறை ஏற்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டிருக்கிருர். 1947-ம் ஆண்டு சுயராஜ்ய ஆட்சி அமையப் பெற்றது. 1966-ம் ஆண்டு வரை முதலாளிகளின் கைப் பாவையாகவே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது என்று இந்திய அமைச்சராயிருந்த ஒருவரே வெளிப்படையாகக் கூறுகிருரென்ருல் இன்றைய ஆட்சி முதலாளித்துவ வர்க்க ஆட்சி என்பதற்கு வேறு ஆதாரம் வேண்டுமா?

ஆதலால்தான் ஏழை நடுத்தர மக்கள், கொடுமையான சோதனேகளுக்கு ஆளாக்கப் பட்டு. இந்தியத் துணேக் கண்ட அரசியலில் கொந்தளிப்பும் ஏற்பட்டிருக்கிறது. ஆக காங்கிரஸ் ஆட்சியை வெளியேற்றினலன்றி மக்களுக்கு நல்வாழ்வில்லே யென்பது திட்டவட்டமாகத் தெரிகிறது.

நம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரை திராவிட முன்னேற்றக் கழகம் ஏழை —எளிய மக்களின் இயக்கமாக வளர்ந்து வருகிறது. ஏழை மக்கள் தரும் சிறு உதவிகள் மூலமே கழகம் இன்றைய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. கழகத்தின் தனிப் பெருந் தலேவர் அறிஞர் அண்ணு அவர்கள் கழகத்தைத் துவக்கியபோதே சொன்னுர்கள் 'கழக வளர்ச்சிகாக பாடுபட்டுழைக்கும் பாட்டாளிகளிடம்—ஏழை எளியவர்களிடம்தான் உதவியைப் பெறுவேன். முதலாளிகளிடம் பெரும் பணக்காரர்களிடம் கழகத்திற்காக உதவி பெறுவதென்பதை குஷ்டரோகி கையிலே வெண்ணெய் வாங்கி சாப்பிடுவதைப் போல வெறுப்பேன்' என்று கூறினுர்கள். ஆழ்ந்த அரசியல் தெளிவுடனேயே இதை வலியுறுத்தினுர்கள். காங்கிரஸ் தொண்டர்கள் செய்த தியாகம் அனேத்தும் இந்தியப் பெரு முதலாளிகள் தந்த கோடிக் கணக்கான பண உதவியின் முன்பாக மண்டியிடும் நிலே ஏற்பட்டு விட்டது.

அகில இந்திய காங்கிரஸ் தலேவர் காமராஜ் அவர்கள் சனநாயக சோஷலிச ஆட்சி முறையை நிறுவுவோம் என்று எவ்வளவு கூப்பாடு போட்டாலும் அது காட்டுக் கூச்சலாகத்தான் முடியப் போகிறதேயல்லாது நடைமுறையில் வெற்றி யுறப் போவதில்லே. இன்னும் சொல்லப் போனுல் காங்கிரஸ் கூடாரத்தில் பெருகி வரும் முதலாளிகளும் அவர்களின்

ஏவலாளர்களும் காமராசர் போன்றவர்களைக் காங்கிரஸ் கூடாரத்திலிருந்து விரட்டும் படியான நிலைமை ஏற்பட்டால் ஆச்சரியப் படுவதற்கில்லை.

காங்கிரஸ் முகாமை இனி யாரும் திருத்த முடியாத அளவுக்கு சிர்குலைந்து விட்டது. ஆதலால்தான் காந்தியடிகள் அன்றே கூறினர். சுதந்திரம் கிடைத்ததும் காங்கிரசைக் கலைத்து விடுமாறு.

தமிழ் நாட்டில் ஏழை நடுத்தர மக்களுக்கு வாழ்வளிக்கும் இயக்கமாக கழகம் வளர்ந்து வருவதை இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள முக்கிய தலைவர்கள் மனமார உணர்ந்து வருகிறார்கள். அரசியல் துறையில் முக்கிய கட்டங்களில் தமிழ் நாடு வழி காட்டியிருப்பதை எடுத்துக் காட்டும். அதே போன்று காங்கிரஸ் முதலாளித்துவ ஆட்சி முறையால் ஏற்பட்டுள்ள வாழ்க்கை நெருக்கடியைத் தீர்த்து நல்லாட்சியை நிறுவும் பணியிலும் தமிழ் நாடு இந்தியத் துணைக் கண்டத்துக்கு வழி காட்டியாய் விளங்கப் போவது உறுதி.

அவ்வித சிறப்புக்கு உரிய தாய் வளர்ந்துள்ள கழகத்தின் தனிப் பெருந் தலைவராம் நமது அண்ணா அவர்களின் கொள்கை உறுதியும், அரசியல் தூய்மையும், பெருந்தன்மையும் இன்று ஏழை மக்களின் இதயங்களிலே இடம் பெற்று விட்டன. நான் இக் கட்டுரையின் துவக்கத்திலே குறிப்பிட்டிருந்தபடி அன்று காந்தி— காங்கிரஸ் என்று ஏழை நடுத்தர மக்களின் இதயங்களிலே இடம் பெற்றிருந்ததைப் போன்று இன்று தென்னடெங்கும், பட்டி தொட்டிகளிலெல்லாம் மக்களின் இதய கீதமாக அண்ணா —தி. மு. க. என்ற சொற்கள் விளங்குகின்றன. அவ்வித நம்பிக்கையை வைத்துள்ள ஏழை மக்களின் வாழ்வில் ஒளி வீசும்படியான நல்லாட்சியை உருவாக்கி நிலைபெறச் செய்ய கழகம் பாடுபட்டு வருகிறது. கழகத்தின் இலட்சியத்தை விரைவில் வெற்றி பெற செய்யும் வகையில் கழகத் தோழர்கள் அனைவரும் கட்டுக்கோப்பாகத் தொடர்ந்து தொண்டாற்றுவதே நமது அருமை அண்ணா அவர்களுக்கு நாம் செலுத்தும் பிறந்த நாள் காணிக்கையாகும்.

அருமைத் தோழர்களே, அறிஞர் அண்ணா அவர்கள்! கழகத்தைத் துவக்கியபோது கேலி பேசியவர்களெல்லாம் இன்று கழகம் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றி விடுமோ என்று அஞ்சத் தக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. நமது அண்ணாதுரை அவர்களின் நிதானமான ஆனால் உறுதியான தலைமையும் பாசமுமே இவ்வித வளர்ச்சியைத் தந்துள்ளது. எனவே அண்ணா அவர்களின் சிரிய தலைமையில் தொண்டாற்றும் வாய்ப்பு கிடைத்ததே நமக்கு அரசியலில் கிடைத்த சிறப்பு என்று மன நிறைவுடன் தோழமை உணர்வுடன், கட்டுப்பாட்டுணர்ச்சியுடன் கடமையாற்றுவோம். காங்கிரஸ் காட்டாட்சியை வீழ்த்துவோம் நல்லாட்சியை நிறுவுவோம் மக்களை வாழ வைப்போம் என்ற உறுதியை மனமாரக் கொள்வோமாக!

வாழ்க அண்ணா!

வெல்க தி. மு. க.!

## அண்ணாவின் வழியில்

*17-9-1949*, தமிழக அரசியல் வானில் பெரும் புயல் வீசியது ஓய்ந்து ஒரு முடிவு காணப்பட்ட நாள். திராவிட முன்னேற்றக் கழகம் முகிழ்த்த நாள். பெரியாரின் நம்பிக்கைக்கும் அன்புக்குமுரிய தொண்டனயிருந்தவன் நான். அந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்களிடம் பெருமதிப்பும் மற்ற கழக முன்னணியினரிடத்தில் மாற்றுணப் பாசமும் கொண்டிருந்தவன். அதனால் என் நிலைமை கொஞ்ச காலம் மதில்மேற் பூனையாக இருந்தது.

என்னுடைய குழப்ப நிலை தெளிந்து உறுதியான பாதையிற் செல்லுகின்ற வாய்ப்பு பெரியார் அவர்களாலேயே ஏற்பட்டது. நான் அண்ணா அவர்களிடமும் ஏனைய முன்னேற்றக் கழகத் தலைவர்களிடமும் தொடர்பு கொண்டுள்ளேன் என்ற செய்தி பெரியார் அவர்களால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. என்னிடத்தில் அது பற்றிப் பேசி இனி, தன்னிடம் வர வேண்டாமென்றும் தெரிவித்து விட்டார்கள். ஆனல் அதற்கு மாருக அண்ணா அவர்களை நான் சந்தித்தபோதெல்லாம் கனிவாகப் "பெரியாரைப் பார்த்தாயா? என்ன சொன்னர்?" என்றெல்லாம் வினவுவார்கள். இருவரிடத்தும் நெருங்கிப் பழகிய நான் அன்றே பெரியாரை நன்கு புரிந்துகொண்டு அண்ணா வழியிற் செல்லலானேன்.

—கவிஞர் ஆனந்தம்



# காலதேவனே!

காலதேவனே! கால தேவனே!

உன் படைப்பில்—

ஞாலத்தில் கோடானு கோடி பூக்கள் அரும்புகின்றன; மலர்கின்றன; மடிகின்றன.

ஒரே தாடகத்தில் தான் கொட்டி மலரையும் தாமரை மலரையும் பூக்க வைத்தாய்!

ஆனால் கவிஞர்களின் விழியும் எழுதுகோலும் தாமரையையே சுற்றிச் சுழல்வானேன்?

உன் ஆக்கத்தில்—

ஒரே சோலையில்தான் சிட்டையும் மயிலையும் பறந்து திரிய வைத்தாய்!

ஆனால் தோத்தும் சிட்டுக்குப் பிறவாத கவிதைகள் தோகை மயிலுக்கு மட்டும் காட்டாறு போல் ஓடி வருவானேன்?

உன் பணியில்—

ஒரே வானில்தான் உடுக்களையும் ஒய்யார நிலவையும் படைத்து ஒளிர விட்டாய்!

ஆனால் விழுந்தாலும் எழுந்தாலும் உடுக்களைப் பற்றிக் கவலைப் படாமல், தேய்ந்தாலும் காய்ந்தாலும் நிலவைப் பற்றியே இலக்கியங்கள் கவலைப்படுவானேன்?

மாந்தர் குலத்திலே எத்தனை எத்தனையோ உருவங்களைப் படைத்து உலவ விட்டாய்!

ஆனால் வரலாற்று ஏட்டில் மழுங்காத புகழ்ச் சுவட்டைச் செதுக்கி விடும் பெருமை சிலருக்கே சொந்தமாகிறது.

அந்தச் சிலரில் முகப் போவியமாகத் திகழும் காஞ்சித் தலைவனைத் தந்த—

கால தேவனே! காலத் தேவனே! உனக்கு நன்றி. நன்றி ஏன் தெரியுமா?

உன் படைப்புச் சங்கிலித் தொடரில் எத்தனையோ மேதைகள் தோன்றி அற்புதப் பணி புரிந்தார்கள்.

டெமாஸ்தனீஸ்— கிரேக்க மண்ணின் ஈடு எடுப்பற்ற சொல்வலர்! சொல்லென்ற வில்லேற்றி கருத்தென்ற அம்பெய்து, எதிரே இருந்தவர்களின் இதய சிங்காதனங்களை வெற்றி கண்டவர்!

லெனின்— ருஷ்ய மண்ணின் ஒப்புயர்வற்ற புரட்சித் தலைவர்! மேட்டுக் குடிக்கும் தாழ்ந்த குடிக்கும் இருந்த, ஏணி வைத்தும் எட்டாத வேற்றுமையைத் தரைமட்டமாக்கிக் காட்டிய சமதர்மச் சிற்பி!

முஸ்தபா கமால் பாஷா— துருக்கி மண்ணைச் சுடர்விட்டு எரிய வைத்த தூய சீர்திருத்தத் தலைவர்; இருண்ட பழமைப் பேயின் பயங்கரக் கைகளில் சுருண்டு கிடந்த துருக்கியர் சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அடலேறு!

ஆபிரகாம் லிங்கன்—அமெரிக்க மண்ணிலே தோன்றி தோலுக்குத் தோல் வேற்றுமையா? என்று கேட்டு, அடிமைச் சமுதாயத்திற்கு வழக்கறிஞராக மாறிய உரிமைத் தலைவர்; சனநாயகக் கோட்டைக்கு அடிக்கல் நாட்டிய தளநாயகர்!

ரூசோ— ஃபிரஞ்சு நாட்டிலே பிறந்து, கட்டுரைத் திறத்தால் பேனா முனையாலேயே ஆதிக்கக் கோட்டையைத் தகர்த்துக் காட்டிய மாபெரும் எழுத்தாளர்; சிவப்பு இரத்த ஆறு ஓட கருப்பு மையால் தொட்டு எழுதிய தீரச் செம்மல்.

பெர்னாட்ஷா— இங்கிலாந்திலே தோன்றி, தங்கத் தாய் மொழிக்கு கலை இலக்கிய முத்தாரம் படைத்த நல்லறிஞர்; நாடகங்கள் பல எழுதி மொழிக்கும் கலைக்கும் மறுமலர்ச்சி தேடித் தந்தவர்.

காந்தியார்— இந்திய மண்ணிலே பிறந்து, 'எங்கோ இருப்பவன் இந்நாட்டுக் குடுமியைக் கையில் பிடித்திருப்பதா?' என்று வெகுண்டு கேட்ட விடுதலைத் தந்தை;

கவிஞர்

# நன்றி

எதிரியைச் சாடுவதற்கும் அகிம்சைத் தத்துவத்தைக் கடைப்பிடித்த எளிய தலைவர்

இவர்கள் அத்தனை பேரும் ஒவ்வொரு காலத்திலே இந்த உலகத்திலே பிறந்து ஒவ்வொரு துறையிலே வையகம் செழிக்கப் பாடுபட்டவர்கள்!

கால தேவனே!

இந்த மேதைகளின் ஆற்றலை யெல்லாம் ஒன்று திரட்டி ஒரு தலைவனை உண்டாக்க வேண்டும் என்று கற்பனை செய்து, தென்னாட்டிலே அண்ணா என்ற மாமேதையை உருவாக்கினாயே, அதற்காகத் தான் நன்றி!

டெமாஸ்தனீஸ் ஒரு சொல்வலர்; ஆனால் நல்ல நாடகாசிரியர் என்று கேள்விப்பட்டதுண்டா?

லெனின் ஒரு புரட்சித் தலைவர்தான்! ஆனால் மிகப் பெரிய சனநாயகவாதி என்று சொல்லிவிட முடியுமா?

ஷா ஒரு மிகப் பெரிய நாடக ஆசிரியர்தான்; ஆனால் எத்தனை முறை சிறைத் தண்டனை என்றாலும் ஏற்றுக் கொள்ளும் புரட்சி வீரர் என்று கூற முடியுமா?

காந்தியார் ஒரு விடுதலைத் தந்தைதான்! ஆனால் புதுமை பூத்த நாடகங்களை உருவாக்கியதோடு அதில் பங்கேற்று அருமையாக நடித்து அந்தக் கலைக்கே புகழ்தேடித் தந்தார் என்று கூற முடியுமா?

கால தேவனே!

ஆகவேதான் மாமேதை அண்ணா அவர்களை தனித் தனியே யாருடனும் ஒப்பிட்டு விட மனம் ஒப்பவில்லை. அப்படியே கூறினாலும் ஒப்பீட்டு உவமையிலே முழுமை காணப்படவில்லை.

பலாக் கனியின் இனிப்பும், மாங்கனியின் சுவையும், ஆப்பிள் கனியின் வண்ணமும், திராட்சைக் கனியின் மயக்கமும், செவ்வாழைக் கனியின் மென்மையும் ஒருங்கே கலந்த ஒரு கனியை இன்னமும் நீ படைத்ததில்லை.

அமெரிக்க நாட்டின் செல்வச் சிறப்பும், இங்கிலாந்தின் சனநாயகச் சிறப்பும், ருஷ்யாவின் அறிவியற் சிறப்பும், சப்பானின் தொழிற் சிறப்பும், இந்தியாவின் கலைச் சிறப்பும், தமிழ் நாட்டின் பண்பாட்டுச் சிறப்பும் ஒருங்கே இணைந்த ஒரு நாட்டை இன்னமும் நீ உருவாக்கவில்லை.

ஆனால்—

வரலாற்று நாயகர்களாகத் திகழ வேண்டியவர்களின் திறன், சான்றாண்மை, தகுதி, ஆற்றல், மேதமை, உழைப்பு, கண்ணியம், நாட்டுப் பற்று, தலைமைப் பண்பு, மொழியார்வம் ஆகிய அத்தனைப் பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு தலைவரை அண்ணாவின் உருவில், இருபதாம் நூற்றாண்டில் தமிழக மக்களுக்குத் தந்த காலத் தேவனே!

நன்றி, நன்றி.

உனக்கு மேன் மேலும் நன்றி கூறக் காரணம் என்ன தெரியுமா?

அப்படிப்பட்ட மாத்தலைவரின் காலத்திலே எங்களையும் உருவாக்கி, அவரைக் காணவும், கேட்கவும், அவருடைய மாபெரும் அணியில் தொண்டராக இருக்கவும் வாய்ப்பளித்தாயே, அதற்காகத்தான்!

காலத் தேவனே! ஒரு வேண்டுகோள்!

காலத் தேரில் ஏறி, ஐம்பத்தெட்டாம் ஆண்டுக் கல்லை எட்டுகின்ற அத்தென்னாட்டு முடி சூடா வேந்தனின் பேனா முனை ஆண்டாண்டு காலத்திற்கும் ஓயாமல் ஓடிக் கொண்டே இருக்கட்டும்!

நாமுனை தேயாமல் பேசிக் கொண்டே இருக்கட்டும்!

விழிகள் எங்களைச் சுழன்று சுழன்று கனிவோடு பார்த்துக் கொண்டே இருக்கட்டும்!

சுறுசுறுப்பான அந்தக் கால்கள் பயணம் செய்து கொண்டே இருக்கட்டும்!

செழிப்பான சிந்தனை எதிர்காலச் சீர்திருத்தத் திட்டங்களைக் கற்பனை செய்து கொண்டே இருக்கட்டும்!

காலத் தேவனே! காலத் தேவனே!

இந்த அற்புதத்தையும் செய்து காட்டு.

உனக்கு இரட்டிப்பு நன்றி.

**வேழவேந்தன்**

அண்ணா இந்தத் தலை முறையில் நீங்கள் அண்ணாவாக இருப்பது போல, எதிர் கால சந்ததியினருக்கும் அண்ணாவாக இருங்கள்! அறவழித் தெய்வமே, நீங்கள் நூறாண்டுகள் மட்டுமல்ல கடல் நீர் உள்ளளவும், காலம் உள்ளளவும், வானப்பரிதியும் வெண்ணிலவும் உள்ளளவும் நீங்கள் வாழ வேண்டுமென தந்ததின் மூலம் எங்களுக்கெல்லாம் நாணய மிக்க—கண்ணியமிக்க அரசியல் ஆசானாக விளங்குகின்றீர்கள்!

கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு’ என்று உபதேசித்ததின் மூலம் எங்களுக்கு அறவழித் தெய்வமாகக் காட்சி அளிக்கின்றீர்கள்!

‘தம்பி வா, தலைமை ஏற்க வா! உன் ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கிறோம்’—என்று அன்பழைப்பு விடுத்ததின் மூலம் எங்களுக்கு ஜனநாயகத்தின் பண்பாளராகக் காட்சி அளிக்கின்றீர்கள்! மன்னிப்போம்— மறப்போம்—என்று கூறியதின் மூலம்

# அண்ணா—அறவழித் தெய்வம்

நடிகமணி **டி.வி.என்**

அறிவே!

ஒளி முத்தே!

உயர் குணமே!

நடமாடும் பல்கலைக் கழகமே!

நாட்டோர் போற்றும் நல்லறமே!

அறவழித் தெய்வமே!

இதயமே, உயிரே!

உணர்வே, அண்ணாவே!

வாழ்க, வாழ்க என்று வாழ்த்துகின்றோம்! உங்களை வாழ்த்துகின்ற வயது எங்களுக்கு இல்லை. ஆனாலும் அண்ணாவே நீங்கள் நூறாண்டு காலம் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்! ‘நூறாண்டுகள் தானா, அதற்கு மேல் உங்கள் அண்ணன் இருக்க வேண்டாமா?’—என்று எந்த உதிரிகளாவது கேட்கக் கூடும். ஆசைப்படுகிறோம். இந்த இதயத் துடிப்பையே, மகிழ்ச்சியையே உங்களுக்கு ‘வாழ்த்து முத்தாரமாக உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றோம்!

உயிரே, தத்துவமே!

தத்துவத்தின் பெருங்கடலே!

தென்றலின் மென்மையிலே உங்களது மென்மையான இதயத்தைக் காண்கிறோம்!

கடமை உணர்ச்சியிலே உமது கண்ணியத்தைக் காண்கிறோம்!

நீங்கள் நடமாடும் பல்கலைக் கழகம் மட்டுமல்ல. உண்மை ஜனநாயகத்தின் லட்சியத் தீபம்!

அண்ணா நீங்கள் எங்களுக்கு— கடமை கண்ணியம்-கட்டுப்பாடு என்பதை கழகத்தின் மூல மந்திரமாக பெருந்தன்மையின் சிகரமாக விளங்குகின்றீர்கள்!

கலைஞர்கள் சமுதாயத்திலே புறக்கணிக்கப்பட்டு கூத்தாடிகள் என்று ஒதுக்கப்பட்ட நிலைமையை மாற்றி கலைஞர்கள் என்ற புதுப் பெருமையைத் தேடிக் கொடுத்து தலை நிமர வைத்த பெருந்தகையே—பெம்மானே வாழ்க!

இலட்சோப இலட்சத் தம்பிகளின் இதய கீதமே, உணர்வே—அண்ணாவே நீங்கள் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென்று விரும்புகிறோம்!

காலமே, உனது தூய்மையான மனத்தால் எங்கள் அண்ணாவை வாழ்த்து!

நாங்கள் மன நிறைவோடு—எங்கள் உடன் பிறப்பை உணர்வை வாழ்க, வாழ்க என்று வாழ்த்துகிறோம்!

# அவர் அறிஞர் தான்!

**நீல நாராயணன்**

**நா**ஞ்சில் நாடு திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த காலத்தில், கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலை பகுத்தறிவுப் பிரசாரப் பணி புரிவதில் தலைசிறந்து விளங்கியது. 1945-ம் ஆண்டின் முற்பகுதியில் அதன் ஆண்டு விழா நிகழ்ச்சியொன்று வழக்கம் போல் சிறப்பான ஏற்பாடுகளுடன் நடக்க இருந்தது.

அந்த விழாவுக்கான வரவேற்புக் குழு என் தலைமையில் செயல்பட்டது. திராவிட நாடு கொள்கையும் இராமாயண எதிர்ப்புப் பிரசாரமும் உச்சக்கட்டத்திலிருந்த நேரமாகும் அது. அப்போது திராவிட இயக்கத்தின் தளபதியாகவும் வாதத் திறமையில் ஈடும் எடுப்பும் அற்றவராகவும் விளங்கி வந்த அறிஞர் அண்ணா அவர்களைப் பிரதம பேச்சாளராக அழைத்திருந்தோம்; அவர்களும் திருநெல்வேலியிலிருந்து பஸ்ஸில் வருவதாகப் பதில் விடுத்திருந்தார்கள்.

விழா நிகழ்ச்சியன்று அதிகாலையிலேயே, என் தலைமையில் அமைந்திருந்த இளைஞர் பட்டாளத்துடனும், ஏராளமான மலர் மாலைகளுடனும் பேருந்து நிலையம் சென்று காத்திருந்தோம்.

திருநெல்வேலியிலிருந்து, வண்டி வந்து சேர்ந்தது, ‘பெரியார் வாழ்க; அண்ணா வாழ்க’ என்ற முழக்கம் விண்ணை எட்ட, நான் என் மாலை முதல் மாலையாக விழ வேண்டும் என்ற ஆவலுடன் முன்னே சென்று, நாகரீக

மாக உடை யணிந்து வந்த ஒருவர் கழுத்தில் மாலை சூட்டினேன். அவ்வளவுதான் என்னைத் தொடர்ந்து இதர தொண்டர்களும் அவருக்கு மாலைகள் அணிவித்தனர். ஆனால் அவரோ திகைத்துப் போய் "அடடே! என்ன தவறு செய்து விட்டீர்கள்! அண்ணா பின்னால் அல்லவா வருகிறார்!" என்று வருந்திய குரலில் தெரிவித்ததும் எனக்கு எப்படியிருந்திருக்கும்.

ஏமாற்றத்துடன் பின்னால் சென்றேன், மிக மிக எளிய உடைகள்—நீண்ட பயணத்தின் விளைவால் அழுக்கடைந்த நிலையில்—தலையெல்லாம் கலைந்து— சோர்வுடன் காணப்பட்ட அந்த உருவம் தான் அறிஞர் அண்ணா அவர்கள் என்பதை அறிந்து— அவர்களின் அறிவாற்றலைப் பற்றிக் கேள்விப்பட்ட நான் அவர்களை முன்னதாக நேரில் பார்த்தறியாத நான்— வரவேற்கப் போய்— திருநெல்வேலி தமிழர் உணவு விடுதி உரிமையாளரும் நமது இயக்கத்தின் அந்நாள் பிரமுகருமான திரு பிரமநாயகம் அவர்களுக்கு மாலை சூட்டியதை எண்ணி வெட்கப்பட்டேன்.

என்ன செய்வது? என்னிடம் அவ்வமயம் வேறு மாலை இல்லை. அண்ணா அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விழாவுக்கு அழைத்துச் சென்றேன்.

விழா துவங்கியது. இந்த விழாவைச் சிறப்பிக்குமாறு மதுரை தமிழ் சங்கப் புலவர். தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்-சதாவதானி- டாக்டர்—அல்லாமா செய்குத்தம்பிப் பாவலர் அவர்களை அழைத்திருந்தோம். உடல் நலிவுற்ற நிலையிலும் அன்னார் வருகை தந்து மேடையில் வீற்றிருந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள். அவ்வளவுதான், ஏராளமான மாற்றுக் கட்சித் தோழர்கள் கியூ வரிசையில் வந்து நின்று கேள்வித் தாள்களை அளிக்கத் தொடங்கினர்.

அண்ணா அவர்கள் "எப்பொருள் யார், யார் வாய்க் கேட்பினும்" என்ற குறளைக் கூறி, இவ்வளவு தமிழறிவு படைத்த நாஞ்சில் மக்கள் வள்ளுவர் கூறியவாறு கேட்பவர் எந்தக் கருத்து உள்ளவரானாலும், சொல்பவன எந்தக் கருத்தைக் கூறினாலும் அதனைக் கேட்டறிந்து அதிலுள்ள உண்மைப் பொருளை அறிய வேண்டும் என்பதையும் மறந்தீரோ என்று, குறளுக்குப் புது விளக்கம் கூறினார்கள்.

அது ஒன்றை மட்டும் செவிமடுத்த பெரும்புலவர் செய்குத் தம்பிப்பாவலர் அவர்கள் ஆகா இவர் அறிஞர் தான். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போதுமடா. நான் இனி வருகிறேனய்யா" என்று விடை பெற்றுச் சென்று விட்டார்.

சுமார் 3 மணி நேரம் அண்ணா அவர்கள், கேள்விகளுக்கு அடுக்கடுக்காய் பதில் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். கேள்விகளைக் கொண்டே கேட்டவரை மடக்கியும் ஏற்ற பதில்களை உடனடியாய் உரைத்தும் தடைபடாத அவர்கள் சொற்பொழிவைக் கேட்ட அனைவரும் வியப்புக் கடலில் மூழ்கினர்.

அன்று கேட்கப்பட்ட கேள்விகளில் சில இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளன.

ஸ்ரீஜின்னா ஆரியரா திராவிடரா என்று ஒரு கேள்வி. எங்களுக்கெல்லாம் ஒரே திகைப்பு; அண்ணா என்ன பதில் சொல்ல முடியும் என்று.

கேள்வியைப் படித்த மறுகணமே பதில் துள்ளி வந்து விழுந்தது.

ஸ்ரீஜின்னா ஆரியர்

ஜனாப் ஜின்னா முஸ்லீம்

திரு ஜின்னா திராவிடர்.

அப்போது ஏற்பட்ட கையொலி அடங்கப் பத்து நிமிடம் பிடித்தது.

திருக்குறளைச் சட்டமாக இயற்றினால் ஏற்றுக் கொள்வீர்களா? என்பது மற்றொரு வினா,

அதற்கு விடை: மனு நீதியைச் சட்டமாக ஏற்றுக் கொண்டிருக்கிற நாங்கள், திருக்குறளையா சட்டமாக ஏற்க மறுப்போம்? ஆனால் சட்டம் உண்மையான சட்டமாக இருக்க வேண்டும்.

அவ்வளவு கேள்விகளுக்கும் விடையளித்த பிறகே அண்ணா அவர்கள் அன்றைய அரசியல் நிலை பற்றித் தமது சொற்பொழிவைத் தொடங்கினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களை நான் அறிமுகம் செய்து கொண்ட நிகழ்ச்சியை நினைத்தால், இன்னும் என்னையறியாமல் பூரிப்படைகிறேன்.

அண்ணா பற்றி திரு. வி. க.

# 'அண்ணா வாழ்வில் அன்றொரு நாள் ………'

ஈரோட்டில் திராவிடர் கழகத்தின் தனி சிறப்பு மாநாடும் குறள் நெறி மாநாடும் பெரியார் அவர்களால் நடத்தப்பட்டது. அந்த மாநாட்டிற்கு நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார்கள். அந்த மாநாடு முடிந்ததும் மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கவும், மாநாட்டின் சிறப்பினை எடுத்துக் கூறவும் சென்னையில் ஐலண்டு மைதானத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் பெரியார் அவர்களும், தமிழ்க் கடல் திரு. வி. க. அவர்களும் அண்ணா அவர்களும் கலந்து உரையாற்றினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் அன்று ஆற்றிய உரை திரு. வி. க. அவர்களைக் கவர்ந்தது. மெய் மறந்து அவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு திரு. வி. க. தாம் பேசும் போது குறிப்பிட்டார்.

"தமிழகத்தில் திரு. வி. க. நடை" "திரு. வி. க. தமிழ்" "திரு, வி. க. பாணி" "திரு. வி. க. எழுத்து" என்று இன்று நிலவி வருவது மாறி இனி வருங் காலத்தில் "அண்ணாதுரை நடை" "அண்ணாதுரை பாணி" "அண்ணாதுரை எழுத்து" என்றதான் வரப் போகிறது. வருங் காலத்தில் தமிழ் மொழி சிதைந்து அழிந்து விடுமோ அதை யார் காப்பாற்றப் போகிறார்கள் என்று நான் ஐயப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் நான் இனி நிம்மதியாகசாவேன். காரணம் அண்ணாதுரை தமிழின் உயர்விற்கு சேவ்வசெய்வதை என்னால் மறக்க முடியாது. அண்ணாதுரை ஒரு அரசியல்வாதி மட்டும் அல்ல; அவர் தாய் நாட்டையும் தாய் மொழியையும் காக்கும் தமிழர் தளபதி" என்று திரு. வி. க. அவர்கள் கூறியதும் அங்கு கூடி இருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் கையொலி ஒலித்ததும் இன்னும் என் நெஞ்சத்தை விட்டு அகலவில்லை.

*     *     *

கோவை அவிநாசி ரோடில் உள்ள தொழில் மன்னர் ஜி. டி. நாயுடு அவர்கள் கோபால் பாக். இல்லத்தில் தமிழ் நாட்டின் தமிழ் எழுத்தாளர் மாநாடு கூடியது, அந்த மாநாட்டிற்கு காலம் சென்ற திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்.

அன்று தமிழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த அனுமான் பத்திரிகையின் ஆசிரியர் திரு நாராயண ஐயங்கார் பேச எழுந்தார். அவர் பேசும் போது குறிப்பிட்டார்.

'எனக்கு முன் பேசியவர்கள் எல்லாம் தமிழ் நாட்டில் முற்போக்கு கருத்துக்களைக் கொண்ட முறையில் எழுத்துக்கள் வரவில்லை. மேல் நாட்டு எழுத்தாளர்கள் நாட்டுப் பற்றோடும் மொழிப் பற்றோடும் சீர் திருத்தக் கருத்துக்களை பரப்பி வருகிறார்கள் என்று பேசி வருந்தினார்கள். அவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். இன்றும் தமிழகத்தில் எழுத்தில் மறுமலர்ச்சியும் முற்போக்கு கருத்துகளும் சீர் திருத்த கொள்கைகளும் அடிப்படையாகக் கொண்டு மேல் நாட்டு எழுத்தாளர்களும், கண்டுவியக்கும் வண்ணம் ஒருவர் ஈரோட்டில் இருந்து எழுதி வருகிறார். தெரியுமா? அவர்தான் அண்ணாதுரை, அவரை இந்த மாநாட்டிற்கு அழைத்து இருக்க வேண்டும் அந்தக் குறையை நீக்குவதற்கு அடுத்த மாநாட்டிற்காவது அவரை அழைக்க வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு அண்ணாதுரையின் எழுத்து தமிழகத்தின் வாலிபர்களை எல்லாம் கவர்ந்து விட்டது. தமிழ் நாட்டு மேடைகளில் எல்லாம் அவரது பாணி மிளிர்கிறது. தமிழில் பேசுவதற்கு வெட்கப்பட்டவர்கள் எல்லாம் தமிழில் பேசுவதை பெருமையாகஎண்ணுகிறார்கள். அண்ணாதுரையும் அவரைச் சார்ந்தோரும் தமிழுக்காகவும், தமிழ் நாட்டுக்காகவும் செய்து வரும் தொண்டினை மறக்க முடியாது"

—சங்கரய்யா

# காயாகு

மனித வாழ்க்கை செம்மைப்பட வேண்டுமென மேதைகள் கால வரம்பின்றி முயன்று வந்திருக்கிருர்கள். இன்னமும் முயற்சி செய்து கொண்டுதான் வருகிருர்கள். டார்வின் கூற்றுபடி ஆதியில் குரங்கு உருவப்படைத்திருந்த மனிதன் நாளடைவில் இன்றைய உருவம் பெறுகிருன்.

இது போல் மனித வாழ்க்கை சமுதாய அமைப்புகளில் மாறுதலும், முன்னேற்றமும் இத்தகைய மேதைகளின் முயற்சியினுல்தான் என்பதில் சந்தேகமில்லை. இப்படிக் காலத்தால் அவர்கள் செய்த முயற்சியை மனித சமுதாயம் என்றுமே மறக்கமுடியாது.

இன்றும் இத்தகைய முயற்சிகள அவசியம் என்பதை உணர மக்களுக்கு அறிவு விழிப்புணர்ச்சி அவசியமாகும். இல்லா விட்டால் மனிதன் புது மாற்றம்கொள்ளவோ, வளர்ச்சியடையவோ இயலாது.

நம் நாட்டை பொருத்த மட்டில் பிறருக்கு—அடிமையாக இருந்தது. அடிமை நிலையை— உணர்த்தியது மட்டுமல்ல; அதனின்று விடுபட அறிவுரை வழியாகவும், செயல் முறை வழியாகவும் முயற்சித்து வெற்றி கண்ட காந்தியார் வழியில் இன்று நாடு விடுதலை பெற்று தன் முன்னேற்றத்தில் தானே கவனம் கொள்ளும் வகையில் நிற்கிறது. இது போல் சமுதாயத்தில் சாக்கடைத் தன்மையான ஊழல்களை உணர்வித்தும்; அதை அகற்றும் வழியில் அறிவுரைத்தது மான முயற்சியின் மூலமும் இன்று நம்மிடை ஓர் அறிஞர் திகழ்கிருர் என்பதும் அவர் காலத்தில் வாழும் பேறு பெற்ற நாம் பெருமையுடையவர்கள் என்பது என் துணிபு,

அவர் சமுதாயத்தின் சரியில்லாக் கொள்கைகளை சாடுவதோடு நில்லாமல் மக்களையும் தக்கவழி வாழ— மாற்றுக் கொள்கை படைத்தோரிடம் நடந்து காட்டும் விதத்திலேயும் செயல்பட்டு வருகிருர். இதற்கு அறிவு மட்டும் போதாது. பண்பும் தேவையாகிறது. சிலர் இடம்தெரியாமல் தடுமாறி விழுந்து எதிர்பாராமல் தலைமை பீடத்தில் இடம் பெற்று விடுகிருர்கள். ஆனுல், இடத்திற்கு ஏற்ற எழிலோடு அவர்களால்இயங்க முடிவதில்லை.

30 வருடங்களுக்கு முன்பாக நடந்த நாடக நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. கோவையையடுத்த சவுரி பாளையத்தில் நாங்கள் 20 பேராக சேர்ந்து நாடகம் நடத்துவதுவழக்கம். அங்கு வள்ளித் திருமணம் நடத்தி

# கானகத்தே!

நடிப்பிசைப்புலவர்

கே. ஆர். ராமசாமி

னோம். கழுகாசலம் சீன் நடந்ததும் அந்த சீனில் பாடிய ராஜ பார்ட்காரருக்கு எதிர்பாராமல் தொண்டை கட்டிவிட்டது. பாடிப் பாடிப் பார்க்கிறார், குரல் ஆவி ரூபமாக வருகிறதே யல்லாமல் ஒலி வடிவமாய் வரவில்லை, நாங்கள் எல்லோருமே திகைக்கின்றோம். என்ன செய்வது? அடுத்து வேடன் வேஷம் போட்டுக் கொண்டு, தினைப் புனத்தில் போய்ப்பாடவேண்டுமே என்று—அப்பொழுது எங்கள் குழுவில் எல்லா விஷயங்களும் தனக்குத்தான் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருப்பவர். சில சமயங்களில் சண்டையை மூட்டி விடுவது. பிறகு அவரே வந்து சமாதானம் செய்து வைப்பது—தனக்குத் தெரியாத விஷயங்களில் தலையிட்டு முட்டி மோதிக் கொண்டு வெளியே வருவது ஆகியவற்றில் அவர்தான் பெரியவராக விளங்கி வந்தார். என்ன செய்வது என்று திகைத்து நின்ற சமயம் அவர் முன் வந்து என்ன, என்ன?' என்று கேட்டார். நாங்கள் நிலைமையை விளக்கினோம். உடனே அவர் 'ப்பூ! இவ்வளவு தானே! வேடன் வேஷத்தைப் எனக்குப் போடுங்கள்' என்றார். உடன் நாங்கள் பவுடரை முகத்தில் பூசி வேடன் உடையை அணிவித்தோம்.

நீங்கள் பாடியதையே நாங்கள் இதுவரை கேட்டதில்லையே உங்களுக்குப்பாடத் தெரியுமா என்று கேட்ட போது பார்க்கலாம். பார்க்கலாம் முதலில் உடையை மாட்டி விடுங்கள்—என்றார். எல்லாவற்றையும் செய்து தினைப்புனம் சீனுக்கு அனுப்பினோம். சென்று வள்ளியைப் பார்ப்பதற்கு முன் காவல்காரன் நிற்பது வழக்கம். அவன் தடுத்து நீ யார் என்று கேட்க - பார்க்கலாம் பார்க்கலாம் நான் யார் என்பதைஎன்றுசொல்லி அவனைத் தள்ளிவிட்டு, வள்ளியை பார்த்ததும் காயாத கானகத்தே என்று மேல் ஸ்தாயில் 'காயாதகானகத்தே-காயாதே கானகத்தே' என்று 5 நிமிடம்இப்படியே பாடிக்கொண்டிருக்க ஹார்மோனியம் வாசிப்பவர் விதவிதமாக கீழே இறக்குவதற்கு வாசித்துக் காட்டுகிறார். அதையெல்லாம் சட்டை செய்யாமல் கானகத்தே, கானகத்தே என்று கத்திக் கொண்டிருந்தார். நாடகரசிகர்கள் ''உள்ளே போ உள்ளே போ'' என்று கத்த ஆரம்பித்தார்கள். நாங்கள் படுதாவை விடச் சொன்னோம். படுதா விழுந்த பிறகும் ''கானகத்தே—கானகத்தே—கானகத்தே'' என்று பாடுவதை அவர் நிறுத்தவில்லை. ''அடபாவி படுதாவிட்டாச்சு இன்னும் கானகத்தே என்று கத்துகிறாயே'' என்று கையினால் வாயைப் பொத்தினோம். அதன் பிறகுதான் கத்தல் நின்றது. 'என்னய்யா இப்படி செய்து விட்டாயே? என்று கேட்க ''நான் என்ன செய்யட்டும்? அதற்கு மேல் எனக்குப் போக முடியவில்லை. மக்களைப் பார்த்ததும் பிரமை பிடித்தது போல ஆகிவிட்டது எனக்கு என்றார். இன்னொரு முறை பார்க்கலாம்' என்றார். வேண்டாம் என்று சொல்லி கழட்டய்யா உடையை—என்றோம். உடையை பழைய ராஜ பார்ட்காரருக்குப் போட்டு அனுப்பினோம்.

முறையோடு சங்கீதம் பயின்றவர்கள் பாடும் பாட்டுக்கும்—முறையோடு சங்கீதம் பயிலாதவர்கள் பாடும் பாட்டுக்கும் வித்தியாசமிருக்கும். அது போல் முறையோடு அரசியல் படித்தவருக்கும், வெறித் தன்மையோடு அரசியலில் இல்லாததையும் பொல்லாததையும் செய்து மேலே வந்து நின்று கொண்டு யாருக்கு என்ன தெரியும்'

எல்லாம் எனக்குத்தான் தெரியும் என்று பேசுபவருக்கும் நிரம்ப வித்தியாசமுண்டு.

இந்த அனுபவம் இன்றைய அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருக்கும் காமராசரைப் பார்க்க அந்த நினைவு முன் வருகிறது.

தலைமைப் பதவிக்கு எப்படியோ வந்துவிட்ட காரணத்தால் தகுதி காட்ட முடியாமல் அவர் பேச்சு இருக்கிறது.

உலகம் சுற்றியதனாலோ—உள்ளூரில் சிலர் 'ஜே!' போடுவதனாலா தகுதி வந்துவிடும்?

மாற்றுக் கட்சியை என்ன? ஏன்? எது?—எனத் தட்டிக் கேட்கும் தகுதி பெற்று எதிர் கட்சியாக விளங்கும் தி. மு. கழகத்தைப் பார்த்து தலைவர்களை ஏக வசனத்தில் அது இதுவென தகாத மொழியில் கூறியிருப்பாரா?

இந்த வேகத்தை இன்னும் கிண்டி விட்டு விளையாடிப் பார்ப்பதென்றால் அண்ணாவுக்கு எளிதான காரியம். ஆனால், அந்தச் சினத்தைதணித்து காமராஜர் பேசியது அவர் பாணியாகவே இருக்கட்டும், நீங்களும் அந்த பாணியில் போவதா?—என தடுத்தாட்கொண்டு நமக்கெல்லாம் தக்க வழி காட்டுகிறார் என்றால் அந்தப் பெருமை மிக்க தலைவரைப் பெற்ற நாம் இருமாப்படைய இடமிருக்கிறதல்லவா?

இது ஒருபுறமிருக்க, இது வரை வந்த தலைவர்களும், மேதைகளும் மக்களைப் பார்த்து "பொது மக்களே! கனவான்களே! சகோதர சகோதரிகளே! என அழைத்துப் பேசுவார்கள். ஆனால், நம் தலைவரோ சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் ஒட்டாமல் இருப்பது போலல்லாமல் நம்மில் ஒருவராய் ஒவ்வொரு குடும்பங்களிலும் ஒருவராய்க்குடும்பப்பாச உணர்ச்சி மிகுந்து விளங்குகிறார்.

இதுவரை யாரும் அழைக்க நினைத்திராத தம்பி எனும் உறவு முறை சொல்லி நமக்கு வழி காட்டுகிறார் என்றால் பெயரளவில் அண்ணா என்பது மட்டுமல்ல உண்மையிலேயே நமக்கெல்லாம் உடன் பிறவாத அண்ணனாக விளங்குகிறார் என்பதில் என்ன சந்தேகம்?

பாலைவனங் கடந்து சோலைவன மாக்கப்
பண்புமிகு நம்அண்ணன் பயணந் தொடங்கிக்
காலைபொன் னொளியும் கருத்தொளியும் போட்டியிடக்
கழகக்காளையரை கைகாட்டி அழைத் தேகி
அறுபத்திஏழி னிலே அணிவகுத்துச் சந்திக்க
நாளைபிறந்த தினம்ஐம்பத்தி எட்டென் றால்
நாலிரண்டாய் பெருக; நலனே வாழியவே!

# பூக்காடு

# கவிஞர் ஆனந்தம்

**1-12-43** நினைவில் நீங்காது என் நெஞ்சில் நிறைந்திருக்கும் இன்பத் திருநாள் இந்த நாள். அன்றுதான் அறிஞர் அண்ணா அவர்களை நேரில் சந்தித்து அறிமுகம் செய்து கொண்டேன்.

தென்னகத்திலே முதன் முதலாக எங்களால் கும்பகோணத்தில் அமைக்கப் பெற்ற திராவிட மாணவர் கழகத்தின் துவக்க விழாவுக்காக அறிஞர் அண்ணா அவர்கள் வருகை தந்து, திரு வி. சின்னத் தம்பி அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்தார்கள். அந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் குடந்தை அரசினர் கல்லூரி மாணவர் மன்றத்தில் அண்ணா அவர்களின் ஆங்கிலச் சொற்பொழிவு ஒன்று ஏற்பாடு செய்திருந்தோம்.

The New Life என்ற தலைப்பில் பேசுவதாக அண்ணா அவர்கள் என்னிடம் அன்று காலையில் தெரிவித்தார்கள்.

அப்போது கல்லூரி முதல்வராயிருந்தவர் டாக்டர் கே. சி. சாக்கோ அவர்கள். இவர் தான் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் கல்லூரி முதல்வராகப் பணி யாற்றியவர். அவர் அண்ணா அவர்களைப் பற்றி எவ்வாறு கற்பனை செய்து வைத்திருந்தாரோ தெரியாது. எளிய, அடக்கமான தோற்றத்தோடு நடந்து வந்து கொண்டிருந்த அண்ணா அவர்களைக் கண்டதும் வியப்பு மேலிட You Are Mr. Annadurai M, A,? தாங்கள்தான் திரு அண்ணாதுரை எம். ஏ. வா? என்று கூவியே விட்டார்.

பின்னர், தடைபடா அருவியோட்டம் போல் சலசலத்த அண்ணா அவர்களது அழகான ஆங்கிலச் சொன்மாரி கேட்டு உள நிறைவுக் கொண்டு பலபடப் பாராட்டினார். அன்று பெரியாரின் படை வீரரில் முன்னணியிலிருந்த அண்ணா அவர்கள் எதிர் காலத்தில், வஞ்சிக்கப் கப்பட்ட ஒரு மாபெரும் சமுதாயத்தின் ஒப்பற்ற வழி காட்டியாக விளங்குவார்கள் என்பது அன்றே அனைவர்க்கும் புலப்பட்டது.

* * *

9-9-1948 அன்று எனக்குத் திருமணம். என் திருமண நாள் உறுதி செய்யப்படுமுன் இன்றைய வாணியம்பாடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், அன்று பெரியாருக்கு மிக வேண்டிய தொகரப் பள்ளி மிட்டாதார் திரு. டி. கிருஷ்ணமூர்த்திக் (கவுண்டர்) அவர்களின் மருகரு மான) திரு. முல்லை வடிவேலு அவர்களது மணநாள் அதே தேதியில் உறுதி செய்யப் பட்டிருந்தது. இயக்கத்தின் எல்லாத் தலைவர்களும் அந்த மண விழாவில் கலந்து கொள்ள இருந்தனர். திடுமென நிச்சயிக்கப்பட்ட என் திருமணத்தில் கலந்து கொள்ள யாரும் கிடைக்கவில்லை.

என்னிடத்தில் பேரன்பு பூண்ட அறிஞர் அண்ணா அவர்களைக் கேட்டபோது, "வடிவேலு திருமணத்திற்குச் செல்லாவிட்டால் அவரை விட ஐயாவுக்குத்தான் அதிகக் கோபம் வரும். ஆகையால் ஐயாவிடம் அனுமதி பெற்றால் நான் வருகிறேன்" என்று கூறி விட்டார்கள்.

தூத்துக்குடி மாநாடு முடிவுற்ற பின் அதுநாள் வரை ஐயாவுக்கும் அண்ணாவுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த தொய்வு நீங்கி மீண்டும் நல்லுறவு அரும்பி யிருந்த நேரம் அது, பழைய நிலையிலிருந்தால் கூடப் பரவா யில்லையே என்று நினைத்தவாறு ஐயாவை ஈரோட்டில் சந்தித்து, என் திருமணத்துக்குச் செல்லுமாறு பெரியாரிடத்திலிருந்து அண்ணா அவர்களுக்குக் கடிதம் வாங்கி வந்தேன்.

நான் விரும்பியவாறே அறிஞர் அண்ணா அவர்கள் தமது பழைய நண்பர்கள் சிலருடன் முதல் நாளே வந்திருந்து திருமணத்தை முடித்து வைத்தார்கள்.

# அவருக்கே முதலிடம்!

என் பெருமதிப்புக்குரிய நண்பர் திரு. சி. என். அண்ணாதுரையவர்கள், இற்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன்பே எனக்கு அறிமுகமானவர். அரசியலில் நாங்கள் இரு வேறு முனைகளில் இருந்தாலும், தனிப்பட்ட முறையில் மிகவும் நெருங்கிய நண்பர்களாகவே இருந்து வந்திருக்கிறோம். இனியும் அப்படியே இருந்து வருவோம் என்பதில் ஐயமில்லை.

எனது மணிவிழாக் கூட்டத்தில், அவரே மிகுந்த அன்போடும் பரிவோடும் அறிவித்தது போன்று, நம்பிக்கைக்குரிய நண்பர்களின் பட்டியலிலே அவருக்கு முதலிடம் தந்திருக்கிறேன். அரசியலிலும் கூட நாங்கள் ஒருவரையொருவர் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஒரு தலை முறைக்கு முன்பு தமிழகத்தில் தோன்றிய சமுதாய சீர்திருத்த கிளர்ச்சியிலே அன்பர் அண்ணாத்துரையவர்கள் முன்னணித் தலைவராகத் திகழ்ந்தார். சீர்திருத்தத்திலே அவர் அளவுக்கு நான் தீவிரவாதி அல்லேன். ஆயினும், அத்துறையிலும், நாங்கள் சேர்ந்து பணியாற்றக் கூடிய பொதுவான அம்சங்கள் பல உண்டு.

தமிழ் மொழியின் வாழ்விலே —வளர்ச்சியிலே, நாங்கள் இருவரும் ஒரே மாதிரியான கொள்கைகளையும் கோரிக்கைகளையும் ஆதரிப்பவர்களாவோம். ஆட்சியை எடுத்து நடத்தும் வாய்ப்பு அவருக்கு வருங்கால், தமிழ் மொழியின் வருங்காலம் குறித்து என்னுடைய உள்ளக் கிடக்கைகளெல்லாம் நிறைவேற்றி வைப்பார் என்றே நம்புகின்றேன்.

எளிய குடியில் பிறந்து உயர்தரக் கல்வி கற்று அரசியல் துறையிலே முன்னணியில் இடம் பெறுவதென்பது இந்த நாட்டில் அவ்வளவு எளிதில் நிகழ்ந்துவிடக் கூடியதன்று. எல்லையற்ற பொறுமையும் நீடித்த உழைப்பும், தளராத நம்பிக்கையும் திரு. சி. என். அண்ணாத்துரையவர்களுக்கு தமிழ் நாட்டின் அரசியலில் எதிர்க் கட்சியின் தலைமையைத் தந்துள்ளன.

இராஜ தந்திரத்திலே அவர் வேறு யாருக்கும் இளைத்தவரோ, சளைத்தவரோ அல்ல. தமிழகத்தின் பாரம்பரியமான அறிவுக்கும், செயல் திறமைக்கும் அவர் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். அவரோடு சேர்ந்து செயலாற்ற வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் சிறிதும் தயங்காமல் மிகுந்த நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி வந்திருக்கிறேன். தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்க்கவும் தேவிகுளம்—பீருமேடு பகுதிகளை மீட்கவும் 1956-ல் தமிழரசுக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து செயல்பட்டன: அது ஒரு சரித்திர நிகழ்ச்சியாகும். அந்தக் காலத்தில் அடிக்கடி எங்களிடையே நிகழ்ந்த சந்திப்புகளும், பரஸ்பர உரையாடல்களும், நாங்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ள பெரிதும் பயன்பட்டன.

தமிழ் நாட்டின் அரசியலிலே எல்லாக் கட்சிகளாலும் எதிர்க்கப்பட்டு அத்தனை எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுத்து வளர்ந்த பெருமை ஒருவருக்கு உண்டென்றால் அவர் திரு. சி. என். அண்ணாத்துரையவர்களாகத்தான்

இருக்க முடியும்.

தாம் பொதுவாழ்வில் ஈடுபட்டநாள் தொட்டு இடையிலுள்ள முப்பதாண்டுக்கு மேற்பட்ட காலத்தில்--அவருக்குள்ள பெருமையும் திறமையும் சிறிது கூடக் குன்றியதே இல்லை.



தனி நபர்களின் வளர்ச்சியும் வாழ்வும்தான் ஒரு இனத்தின் அல்லது ஒரு தேசத்தின் வளர்ச்சியும் வாழ்வுமாகும். கட்சிச் சார்பாகவோ, வேறு எதனாலோ தனி நபர்களின் வளர்ச்சியைத் தடுப்பவர்கள், திட்டமிட்டு அழிப்பவர்கள் தேசத்தின் முன்னேற்றத்தையும் தடுப்பவர்கள்—அழிப்பவர்கள் ஆவார்கள். இதிலுள்ள உண்மையை வேறு எவரையும் விட, அதிகார பீடத்தில் ஏறியிருக்கும் தமிழர்கள் அறிந்து கொள்வார்களானால், தமிழினத்தின் எதிர்காலம் சிறந்ததாக இருக்கும்.

எதிர் காலத்தில் தலைவர்களாகவரக் கூடிய எண்ணற்ற இளங் காளையர்களின் பெருந் தலைவராக, அவர்களுக்கெல்லாம் வழி காட்டும் ஒளி விளக்காக விளங்குகின்றார் திரு. சி. என். அண்ணாத்துரை. அவர் இன்னும் பல்லாண்டுகள் ஆரோக்கியத்துடன் தமிழகத்தின் அரசியலில் மேலும் மேலும் முன்னேறி, பாரத நாட்டின் சரித்திரத்தில் நிலையானதொரு இடத்தைப் பெற்று வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்--- பிரார்த்திககின்றேன்.

தமிழ் மொழி பாமரர்களுக்கு எட்டாக் கனியாக இருந்த ஒரு காலத்தில் நண்பர் அண்ணாத்துரை, தமது பேச்சாலும் எழுத்தாலும் பண்டிதத் தமிழுக்கும் பாமரர் தமிழுக்கு மிடையே ஒரு உறவை ஏற்படுத்தினார்.

மக்களுக்கும் இலக்கியத்திற்குமிடையே நிலவிய இடை வெளியைக் குறைத்தார். அதன் விளைவாக புதிய புதிய எழுத்தாளர்களை - பேச்சாளர்களைத் தோற்றுவித்த பெருமைக்கு உரியவரானார். தமிழ் மொழியின் வளர்ச்சியில் நாட்டமுடைய எவரும் இதனை மறுக்க மாட்டார், இது சாதாரண பணியன்று தமிழ் மொழியில் அவர் ஏற்படுத்திய மகத்தான மறுமலர்ச்சியாகும். அதற்காகவும் அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடி அவருக்கு வாழ்த்து கூற தமிழர் அனைவருமே கடமைப் பட்டிருக்கின்றனர்.

அன்பர் அண்ணாத்துரையவர்கள் 57ஆம் ஆண்டை முடித்துக் கொண்டு 58ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றார். பொதுவாழ்க்கையால் மிக நீண்ட காலம் அவர் பெற்று வந்துள்ள அனுபவம் நாட்டின் எதிர் காலத்தை நல்ல விதமாக உருவாக்குவதற்குப் பயன்படுமென்று நம்புகின்றேன்.

சிலம்புச்செல்வர்

**ம.பொ.சிவஞானம்**

# கல்கி கூறுகிறது!

அரசியல் தலைவர்கள் என்பவர்கள் சில சமயங்களில் காலத்தை எதிர்த்தும் சில சமயம் காலத்தோடு ஒட்டியும் போக வேண்டும். இன்னும சில சமயங்களில் எதிர்காலத்தை உய்த்துணர்ந்து, திட்டங்கள், கொள்கைகளில் மாறுதலியற்றி முன்னேறிச் செல்ல வேண்டும். இவற்றுக்கெல்லாம் துருதுருவென்று வளரும் அறிவு பெற்றிருக்க வேண்டும். அத்தகைய அறிவும் ஆற்றலும் பெற்ற தலைவர் திரு. ஸி. என் அண்ணாதுரை அவர்கள் என்பது அவரது அரசியலைச் சென்ற பதினைந்து ஆண்டு காலமாகக் கவனித்து வந்தவர்களுக்குத் தெரியும்.



1957ம் ஆண்டில் தி. மு. க. தன்னை ஒரு சட்டசபைக் கட்சியாகத் தேர்தலில் போட்டியிடும் கட்சியாக—மாற்றிக் கொள்ளத் தீர்மானித்ததே அதன் தலைவரின் சிறந்த ராஜதந்திரத்தை எடுத்துக் காட்டியது.

'தி. மு. க. வும் அண்ணாதுரையும் தமிழகத்தோடு நின்றுவிட வேண்டியவர்கள், இங்கே அவர்கள் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி விட்டால் அப்புறம் கவலையில்லை' என்று காங்கிரஸ்காரர்கள் 1962-ம் தேர்தலில் அண்ணாதுரை வெற்றி பெறாமல் செய்யப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். அவை உண்மையில் அண்ணாதுரைக்கு வெற்றியாகவே முடிந்தது. காஞ்சி சென்னை சட்டசபைத் தொகுதியில் தோற்ற அண்ணாதுரைக்குத் தில்லி ராஜ்ய சபைக்குச் செல்லும் வாய்ப்பையும் வெற்றியையும் தேடித்தந்தது. தமிழகத் தலைவராக மட்டும் இருந்த ஸி.என்.ஏ. அகில இந்தியத் தலைவராகும் வாய்ப்பைக் காங்கிரஸ்காரர்கள் ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்கள். அந்த அளவுக்கு நாம் காங்கிரஸ்காரர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

தில்லி மக்கள் சபையிலும் ராஜ்ய சபையிலும், இச்சபைகளுக்கு வெளியிலும் ஹிந்தி ஆட்சி மொழியாவதைத் தீவிரமாக ஆதரித்து வெறி பிடித்துப் பேசியவர்கள் இப்பொழுது அவ்வளவு வேகமாகப் பேசுவதில்லை. இதற்கு முக்கிய காரணம் திரு. ஸி. என். ஏ. அவர்களின் ராஜ்ய சபைப் பிரசங்கங்கள். காரண காரியங்களை விளக்கி, எதிராளியின் கஷ்டங்களை உணர்ந்து அதற்குத் தக்கபடி தமது வாதங்களை வகுத்து அண்ணாதுரை உண்மையான உணர்ச்சியோடு நிகழ்த்திய உரைகள் மாற்றாரின் மனத்தையும் பெரிதும் கவர்ந்துள்ளன.

அத்தகைய நிலையில் சிந்தையைத் தெளிவுபடுத்திக் கொண்டு மிகவும் தீரமானதொரு செயல் புரிந்தார். நீலகண்டன், விஷத்தைத் தான் வாங்கிக் கழுத்தில் அடக்கிக் கொண்டு, உலகை உய்வித்தாற் போல், 'அண்ணாதுரை கொள்கையைக் கைவிட்டவர்' என்ற கெட்ட பெயர் தமக்கு வந்தாலும் பரவாயில்லை. தி. மு. கட்சியைச் சாகவிடக் கூடாது என்று தீர்மானித்தார். அகில இந்திய ரீதியிலும் தமிழ் நாட்டிலும் வேலை செய்வாராகில் அடுத்த தேர்தலில் தமிழகத்தில் தி.மு க. ஆட்சியையும், தில்லியில் இன்றுள்ள எதிர்க்கட்சியின் ஆட்சியையும் நிலை நிறுத்தலாம். பாரத மக்கள் திரு. அண்ணாதுரை அவர்களுக்கு நன்றியும் வாழ்த்துக்களும் தெரிவிப்பார்கள்,

கல்கி 12—6—65

# ஏழையர் இதயங்களில்

மாநிலங்களவைப் பேச்சு மூலம் உலகத்தின் பார்வையை தன் வசப்படுத்திக்கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் புயல் வேகப் பேச்சில் - தான் ஓர் தெருவோரத்து மனிதர்களின் பிரதிநிதி என்று எடுத்துக் கூறினார்.

அறிவுப் பேரொளியாம் நமது அண்ணன் பிறந்தநாள் செய்தி தந்தபோது சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் உயர இன்றுபோல் என்றும் பாடுபடுவேன் என்று உறுதிமொழி வழங்கினார்.

சந்தர்ப்ப வசத்தால் காங்கிரசாரின் ஆளுகைக்குள் சிக்கிக்கொண்ட நடுத்தர வகுப்பினரும், சாதாரண மக்களும், தெருவோரத்து மனிதர்களும், கட்சிக்கு அப்பாற்பட்ட நண்பர்களும் **அறிஞர் அண்ணா** அவர்களைப்பற்றி என்ன கருதுகிறார்கள் என்று கண்டறியச் சென்றபோது,

அண்ணாவை அவர்கள் இதயங்களில் ஏற்றிவைத்து வணங்குகிறார்கள் - பூவிலே வைத்துப் பூஜிக்கிறார்கள் - தந்தையாய், தலைவனாய், உடன் பிறப்பாய், தெய்வமாய் மதிக்கிறார்கள் என்பது அந்த அன்பு இதயங்களிலிருந்து வந்த சொற்கோவைகளில் சுடர்விட்டன.

சிப்பியின் மேலோடுகளைப் போல் அவர்கள் வாழ்க்கை அமைந்திருந்தாலும் விலையில்லா முத்துக்களைப்போல் உள்ளத்தில் கருத்துக் கருவூலங்கள் குவிந்து கிடந்தன.

அவர்கள் இந்த ஆட்சியின் அலங்கோலம் பற்றிச் சொன்னபோதெல்லாம் தமிழகம் முழுதும் பறந்து தனித்தனியாய் ஒவ்வொருவரையும் சந்திக்க வேண்டுமோ என்ற உணர்வு ஏற்பட்டது.

அந்த உணர்வுகளைத் தொகுப்பாக்கி இங்கே படைக்கிறோம். இந்தப் படைப்பில் தேனுண்டு, தினை உண்டு, தெளிவில்லார்க்கு மருந்துண்டு. படியுங்கள் - படிக்க இயலாதோருக்கு எடுத்துக்கூறுங்கள்.

உணர்ச்சியுள்ள காங்கிரசார் இதைப் படிப்பார்களேயானால் ஆட்சி பீடத்திலிருந்து இறங்க அவர்கள் 67 வரை காத்திருக்க மாட்டார்கள்.



# அண்ணா எனக்குக் கடவுள்!

ஏ. எம் அலி
(டாக்சி டிரைவர்)
32, அப்துல் சலீம் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை - 5.

'அண்ணா பேச்சை முதல் முதலில் எங்கே கேட்டீர்கள்?''

''1953ல்லே குடந்தையிலே மும்முனைப் போராட்டத்தையொட்டி நடந்த கூட்டத்திலே கேட்டேன். அதிலிருந்து நான் கழகத்துக்காரன் தாங்க''

''அண்ணா தலைமையிலே இயங்குகிற கழகத்திலிருந்து என்ன எதிர்பாக்குறீங்க?''

''ஏழை மக்களுக்கு நல்ல வாழ்க்கை கிடைக்கணும். தாய் மொழி எல்லாத் துறையிலும் அந்தஸ்து பெறணும் இதை நான் மட்டும் இல்லீங்க எல்லோரும் எதிர்பார்க்கிறாங்க''

''எல்லோரும் எதிர்பார்க்கிறாங்க-தி. மு. க. ஆட்சிக்கு வரமின்னு விரும்பிருங்கங்கிறது உங்களுக்கு எப்படி தெரியுது?

''நான் டாக்ஸி டிரைவர் ஆச்சுங்களே. ஒருநாளைக்கு எத்தனை விதமான ஆளுங்க என் வண்டியிலே சவாரி செய்யிறாங்க அவுங்க பேசிக்கிறது என் காதிலே விழத்தானே செய்யுது. சிலர் என் கிட்டேயே சொல்ல ஆரம்பிச்சிடுவாங்க. டிபடாப்பா என் வண்டியிலே இங்கிலீஸ்பேப்பர் படிச்சுக்கேட்டே வந்த ஆசாமி ஒருத்தர் சொன்னாரு ''இந்தக் காங்கிரஸ் ஆட்சி காவல்காரன் இல்லாத தோட்டம்மாதிரி ஆயிடுச்சப்பா. அதிகாரத்தை வச்சுக்கிட்டு அவனவன் கெடைச்சவரைக்கும் சுத்துறான். பார்லிமெண்ட்லே பாரு மக்களுக்கு என்ன தேவைன்னு விவாதிக்கிறதுக்குப்பதிலா அவன் லஞ்சம் வாங்கினான். இவன் ஊழல் பண்ணினான், இந்தக் கம்பெனி கோடிக்கான ரூபாயை மோசடி பண்ணிச்சுன்னு இதே விவகாரம். அத்தனைக்கும் அரசாங்கம் ஆதரவு'' அப்படீன்னு கோபமாப் பேசினாரு.

''அதுக்கு காங்கிரஸ் கட்சி என்னங்க செய்யுமின்னு'' நான் ஒரு பேச்சுக்குக்கேட்டேன். அதுக்கு அவரு நல்ல வார்த்தை சொன்னாருபாருங்க - அதாங்க உண்மை. என்ன சொன்னாருன்னா —''காங்கிரஸ்கட்சி புனிதமான இயக்கமா இருந்தது காந்தியார் காலத்தோடு போச்சுப்பா. இப்போ அது பல முதலாளிகள் மூலதனம் போட்டுள்ள பிரைவேட் லிமிடெட். அந்தப் பிரைவேட் லிமிடெட்டிலிருந்து மக்களுக்கு எந்தக் காலத்திலும் நன்மை கிடைக்காதப்பா'' என்றார்.

''சார் சுதந்தராக் கட்சியா'' என்று நான் கேட்டேன்.

''எந்தக் கட்சியுமில்லே நான் கவர்மெண்ட் சர்வண்ட்'' என்றார். இது மாதிரி ஒருத்தர் ரெண்டு பேர் இல்லீங்க எத்தனையோ பேர் எத்தனையோ விதமாப் பேசுறாங்க. இன்னொன்னு கேட்டா நம்பவே மாட்டீங்க! பொம்பளையா இப்படிச் சொன்னாங்கன்னு ஆச்சரியப்படுவீங்க. பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டிட்டு மூனுநாளா அலைஞ்சு அமுல் கிடைக்காத ஆத்திரத்தோடு ஒரு டீச்ச

ரம்மா என் வண்டியிலே ஏறுனுங்க. சி. ஐ. டி. காலனி போப்பான்னு சொல்லிட்டு சொன்னுங்க—

'மூனுநாளா சுத்து சுத்துன்னு சுத்து றெம்பா அமுல் கெடைக்க மாட்டேங்கிது. கார்டு மட்டும் குடுத்திட்டங்கா பெரிசா— பிள்ளைங்க செத்தா என்ன; பொளைச்சா என்ன இவங்களுக்கு என்ன வந்திச்சு? பேப்பர்லே மட்டும் பெரிசா போட்டிடுருங்க அங்கே கிடைக்கும் இங்கே கிடைக்குமின்னு'' என்ருர்கள்.

'கவர்மெண்ட்டுக்கு ஒரு மனு எழுதுங்க ளேம்மா!" என்றேன் நான்.

''எல்லா எழவும் எழுதியாச்சப்பா. ஓட்டு வாங்கிறதுக்கு மட்டும் வருவாங்க ஒருசமயம் இவுங்களே பதுக்கி வச்சிருப்பாங்கப்பா. ஓட்டு கேக்கறப்போ ரூபாய்க் குப்பதிலா ஒவ்வொரு அமுல் டின் குடுத்து ஓட்டுக் கேக்கலாம்னு!'' என்ருர்கள். எனக்கு ஆச்சரியமாப் போச்சு சார்'' என்று இது போன்று பல நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டார் டாக்ஸி டிரைவர்.

''தி. மு. க. ஆட்சி வந்தா மட்டும் நன்மை கிடைக்குமின்னு எப்படி நம்புறீங்க? என்றேன் நான்.

''சென்னைமாநகராட்சியின் செயல்களைப் பார்க்கிருேமே தி. மு. க. வந்த பிறகுதானுங்களே ரொம்ப இடங்களுக்கு மின்சாரம் வந்திச்சு. நல்ல ரோடுவசதி கிடைச்சிச்சு. அதுபோல 67லலே தி. மு. க. வந்திச்சுன்னு தேவையானதெல்லாம் கிடைக்குமின்னு நம்புகிறேன்.

''மற்றகட்சித் தலைவர்களைவிட நீங்கள் அண்ணு மீது அன்பு செலுத்துவதற்குக் காரணம் என்ன?''

''அண்ணு எனக்குக் கடவுள் மாதிரிங்க. அவர் பேச்சு தோற்றம், பாமரனும் புரிந்து கொள்ளுகிற அளவுக்கு அவர் சொல்லும் கருத்து எல்லாமே என்னைக் கவர்ந்திருக்கிதுங்க"

''அண்ணு பிறந்த நாள் விழாவை எப்படிக் கொண்டாடினீங்க?''

''எங்க வட்டத்திலே கொண்டாடியதற்குப் பணம் கொடுத்தது போக — நான் தனிப்பட்ட முறையில் முப்பது ரூபாய் செலவு செய்து பொங்கல்-மிட்டாய் வழங்கியிருக்கிறேன் இதுக்கெல்லாம் அண்ணு மேலுள்ள பக்திதாங்க காரணம்!''

''விலைவாசி குறைய இலலாமை ஒழிய நல்வாழ்வு கிடைக்க என்ன மாற்றத்தை எதிர்பார்க்கிறீர்கள்?''

67ல் தி. மு. கழக ஆட்சி வரவேண்டும், அதுதான் ஏழைகள் சர்க்காராகஇருக்கும்''

''அதன் வெற்றியைத் தடுக்க காங்கிரசார் பலவழியிலும் முனைவார்களே அப்பொழுது உங்கள் பணி எத்தன்மை வாய்ந்ததாய் இருக்கும்?''

''தி. மு. கழகம் வெற்றி பெறுவதற்கு நான் எதைச்செய்யவும் — எதை இழக்கவும் தயாராக இருக்கிறேன். காங்கிரஸ்காரர்களின் திருட்டு வேலைகளை என்னுல் முடிந்த அளவு தடுப்பேன். என் குறிக்கோள் கழகம் வெற்றி பெறுவது ஒன்றே.

# பிறந்தநாளை மறக்க முடியுமா?

கே எஸ். பிரகாசர்
(முடி திருத்தகம்)
அம்மையப்ப முதலி சந்து,
சென்னை.

முடி திருத்தும் தொழிலக உரிமையாளரான பிரகாசத்திடம் ''அண்ணு அவர்களின் பேச்சை முதன் முதலில் எங்கே கேட்டீர்கள்? எந்த உணர்வில்

தி. மு. கழகத்தில் சேர்ந்தீர்கள்? அண்ணா அவர்களின் தலைமையின்கீழ் இயங்கும் கழகத்திடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில்கள் கீழே தரப்படுகின்றன.

"அண்ணா அவர்களின் பேச்சை வழித்துணைக் குப்பம் என்ற என் சொந்த ஊரில் 1949ம் ஆண்டு கேட்டேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் அனுபவிக்கும் கொடுமைகள் பற்றியும் அவர்கள் வாழ்க்கை உயர வேண்டும் என்பதற்கு அவர் சொன்ன கருத்துக்களும் என்னை அவர்பால் ஈர்த்தது, அன்றே அவர் அனுதாபியாக மாறினேன். இன்று அவர் தம்பிகளில் ஒருவனாக இருக்கிறேன். அண்ணாவின் தலைமையின்கீழ் இயங்கும் கழகத்திடமிருந்து சமத்துவ சமதர்ம சமுதாய வாழ்வை எதிர்பார்க்கிறேன்."

'ஏன் காங்கிரஸ்காரர்களிடம் இருந்து அந்த வாழ்வு கிடைக்காதா?"

"18 ஆண்டுகளாக அவர்கள் ஏழைகள் வாழ்க்கை உயர எதையும் செய்யவில்லை. தேர்தல் காலத்தில் ஜாதிப் பிரச்சினைகளைக் கிளப்பி—செத்துக்கொண்டு வரும் ஜாதி உணர்வுக்கு அவர்களே உயிர் கொடுக்கிறார்கள். ஜாதி இன்னும் சரியா ஒழியலேன்னா அதுக்கு காங்கிரஸ்காரங்கதான் காரணம். சுதந்தரம் கிடைச்ச உடனேயே பதவிக்கு வந்தவுங்க பணக்காரங்கதான். காங்கிரஸ் கட்சியை அவங்க அப்பவே விலை கொடுத்து வாங்கிட்டாங்க-காங்கிரஸ் தலைவர்களும் அவுங்களுக்கு அடிமையாயிட்டாங்க அதனாலேதான் ஏழைகளுக்கு அவுங்களாலே ஒண்ணுமே செய்ய முடியல்லே."

"அண்ணா தலைமையிலே நல்வாழ்வு கிடைக்குமின்னு எப்படி நம்புறீங்க?"

"அண்ணா ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தபொழுதே பணக்காரர்களை அவர் எதிர்த்து வந்திருக்கிறார். பெரியார் பணக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தபோதுகூட பெரியாரின் கருத்துக்கு அண்ணா பணியவில்லை. பணக்காரர்களை அவர் ஆதரித்திருந்தால் 'இந்நேரம் பெரும் பதவியில் இருந்திருப்பார். அவருக்குபதவிமட்டும்முக்கியமில்லை. அண்ணாவே ஒருமுறை சொல்லியிருக்கிறார் பணக்காரர்களிடமிருந்து கிடைக்கும் உதவி எனக்கு குஷ்டரோகியிடமிருநது கிடைக்கும வெண்ணைக்குச் சமம் என்று. அதனாலதான் அண்ணாவின் தலைமையில் ஏழைகளுக்கு நல்ல வாழ்வு கிடைக்குமென்று நம்புகிறேன்."

"மற்ற தலைவர்களைவிட அண்ணா உங்களைக் கவர்ந்ததற்குக் காரணம் என்ன?''

"அவருடைய பேச்சு, எழுத்து அவர் காட்டும் அன்பு இதையெல்லாம்விட ஜாதி மத வேறுபாடு இல்லாமல் எல்லோரையும் தம்பீ! என்று உரிமையோடு அழைக்கிறார் இதை வேறு எந்தக் கட்சித் தலைவரிடமும் காண முடியாது. தாழ்ந்த வகுப்பினர் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பவர்களுக்குக்கூட அவர் அண்ணன் ஆகிவிடுகிறார். தம்பீ! என்று அழைத்த குரல் மூலம் எல்லோரையும் ஒன்றாக அணைத்துக் கொண்டார் என்பதுமட்டுமல்ல—அந்த உரிமைமூலம் ஜாதி வெறியை அடியோடு அழித்துவிட்டார்"

"அண்ணாவின் பிறந்தநாளை எப்படிக் கொண்டாடினீர்கள்?''

"என் கடையில் இனிப்பு வழங்கினேன். வீட்டில் தோரணங்கள் கட்டி அலங்கரித்து விசேடம்போல் கொண்டாடினேன்!'

"உங்கள் பிறந்தநாளையோ—உங்கள் குடும்பத்தார் பிறந்தநாளையோ இப்படிக் கொண்டாடுவது உண்டா? அண்ணா பிறந்தநாளை மட்டும் சிறப்பாகக் கொண்டாடக் காரணம் என்ன?

"எங்கள் குடும்பத்தார் பிறந்தநாளை பெரும்பாலும் கொண்டாடுவதில்லை. அண்ணா பிறந்தநாளைக் கொண்டாடுவதற்குக் காரணம்—பக்தர்களுக்கு ஆண்டவன் மீது நம்பிக்கையிருப்பதால சில விழாக்களை மறக்காமல் கொண்டாடுகிறார்கள். அது போல எனக்கு அண்ணாமீது நம்பிக்கை இருக்கிறது—பக்தி இருக்கிறது. அவர் பிறந்ததினம் எப்படி மறந்து போகும்.

"அண்ணா அவர்களை நீங்கள் அரசியல் தலைவராக மட்டும்தான் மதிக்கிறீர்களா?''

"இல்லை! குடும்பத் தலைவராகவும் மதிக்கிறேன். நான் என் குடும்பத்தில் மூத்தவன். எனக்குத் தம்பிகள் உண்டு. எனக்கு அண்ணன் இல்லாத குறையை அண்ணா அவர்கள் அரசியலில் குடும்ப உறவை ஏற்படுத்தியதின்மூலம் போக்கியிருப்பதாகவே கருதுகிறேன்."

"67 தேர்தலில் உங்கள் பங்கு எப்படிப் பட்டதாய் இருக்கும்?"

"காங்கிரஸ் ஆட்சி தொலைந்து தி. மு. கழகம் ஆட்சிக்கு வர நான் உயிரைக் கொடுத்து பாடுபடுவேன்.

# குடும்பத் தலைவர் அண்ணா!

**மு. புருடோத்தமன்**
**(ராயல் டெய்லர்)**
**325, திருவல்லிக்கேணி ஹைரோடு,**
**சென்னை-**

"அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சை முதலில் எங்கே கேட்டீர்கள்?"

"தி. மு. கழகம் தோன்றியதற்குப்பின் எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டில் தான் அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்டேன்!"

"எத்தனையோ கட்சிகள் இருக்க உங்களுக்கு கழகத்தின்மீது மட்டும் எப்படிப் பற்றுதல் ஏற்பட்டது?"

"நாவலர் தாடி வச்சிருந்த காலத்திலேயே அவர் பேச்சைத் தவறாது கேட்பேன். அவரு பேச்சுத்தான் கழகப் பற்றுதலுக்குக் காரணமாய் இருந்தது.

'இப்போ நடக்கிற ஆட்சியிலே உங்களுக்கு என்ன குறையின்னு நினைக்கிறீங்க?"

"என்ன சுகம்மின்னு கேட்டீங்கன்னா ஒண்ணு ரெண்டுக்குமேலே சொல்லமுடியாது. குறையைக் கேட்டுட்டீங்களே எவ்வளவோ சொல்லலாமே! அன்றாட வாழ்க்கையையே அரைகுறையாத தானுங்களே ஓப்பேத்திக்கிட்டிருக்கோம. என்ன வருமானம் வந்தாலும் இவுங்க ஆட்சியிலே தலைதூக்க முடியல்லீங்க. வருமானத்தை விட செலவு அதிகமா இருக்கு. இவுங்க ஆட்சியிலே சௌக்கியமா இருக்கிறவங்க பணக்காரங்க மட்டுந்தான்.

எனக்குத் தெரிய தினசரி ரூபாய் 2, 3 சம்பாதிச்சிக்கிட்டு இருந்தவனெல்லாம் இன்னக்கி லட்சலட்சமா சம்பாதிச்சிக்கிட்டு இருக்காங்க. காந்தியார் புனிதமகாக் கருதிவந்த கதர்த்துணி இன்னக்கி கள்ள மார்க்கட் செய்யிறவங்களுக்கு லைசென்ஸ் மாதிரிப் பயன்படுது கதர்ச் சட்டையை மாட்டிக்கிட்டு அக்கிரமத்தை துணிச்சலாச் செய்யலாம் அவுங்களையாரும கேட்க முடியாது."

"தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தா நன்மைகள் கிடைக்குமின்னு எப்படி நம்புறீங்க?"

"அண்ணா பணக்காரர்களை ஆதரிக்க மாட்டாரு. கோட்டா பர்மிட் பேர்வழிகளுக்கு வளைஞ்சு கொடுக்கமாட்டாரு. ஆட்சிக்கு வந்தா சில தொழில்களை தேசியபயமாக்குவாரு. உண்மையான சோஷலிசத்தை அவரால்தான் கொண்டு வரமுடியுமின்னு நமபுறேன்.

"அண்ணா பிறந்தநாள் விழா கொண்டாடுனீங்களா? கொண்டாடுவதற்குக் காரணம் என்ன?"

"அரசியல் தலைவர்கள்லே யாரும் தன்னுடைய தொண்டர்களை 'தமபி!'ன்னு அழைக்கிறதில்லே. அண்ணாதான் அந்தப பாச உணர்ச்சியோடு அழைக்கிறார். அதனாலே நாங்கள் அவரை அரசியல தலைவரா மட்டும் மதிக்கல்லே, குடுமபத் தலைவராகவும் மதிக்கிறோம்"

"67ல் தி.மு, கழகம் வெற்றிபெற நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?"

"என்னாலே இயன்ற அளவுக்குப் பாடுபடுவேன். 67ல் காங்கிரசின் தோல்வி பணக்காரர்களின தோல்வி. தி. மு. கழகத்தின் வெற்றி ஜனநாயகத்தின் வெற்றி."

# தென்னாட்டுக் காந்தி!

பாலகுரு
(குடிசை வாழ்வோர் அம்பேத்கார் நகர்)
இங்கின் ஸ்ட்ரீட்,
சென்னை-3.

"அண்ணா பிறந்தநாள் விழாவை எப்படிக் கொண்டாடினீர்கள்?"

"பொங்கல் திருநா மாதிரி கொண்டாடினோம். வீடெல்லாம் கொடிக்கட்டி அண்ணா படத்துக்கு மாலைபோட்டு அலங்கரிச்சு எட்டணாவுக்கு மிட்டாய் வாங்கி பசங்களுக்கெல்லாம் கொடுத்தோம்."

"உங்களுக்கு ஒரு நாளைக்கு என்ன வருமானம் வரும்?"

"ஒரு ரூபா ஒன்னார் ரூபா வரும்-சில நாளைக்கு இலலாமலும் போயிடும், கரைக்டா சொல்ல முடியாதுங்க!"

'ஆமா! இவ்வளவு குறைஞ்ச வருமானத்திலேயும் பணம் செலவு செய்து அண்ணா பிறந்த நாள் விழாவை கொணடாடனும்கிற உணர்வு உங்களுக்கு எப்படி வருது?

"அதெல்லாம் ஒரு பாசம்தானுங்களே. என்' பொறந்தநாளே எனக்கு மறந்து போச்சுங்க. ஆனா அண்ணா பொறந்தநாளை மறக்க முடியல்லீங்களே",

"அண்ணா தலைமையிலே இயங்குகிற இந்தக் கழகத்திடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீங்க?"

"அவுங்க ஆட்சிக்கு வந்தா சௌக்கியமா இருக்கலாம். அரிசி வெலை மத்த சாமான் வெலையெல்லாம் குறையும். அதுதானுங்களே எங்க மாதிரி ஏழப்பட்டவுங்களுக்கு வேணும்.

"ஏன்? இதெல்லாம் காங்கிரஸ் ஆட்சியிலே கெடைக்காதா?"

"கெடக்கல்லீங்களே! தோ பாருங்க கீசலெ(கிழிசல்)கட்டிக்கினுகிறேன். சோறு அப்புறம்-முதல்லே கட்டிக்கத் துணியில்லே குந்தக் குடிசையில்லே அதனாலேதானுங்களே காங்கிரசு மாறனுமின்னு நெனைக்கிறோம்."

"தி.மு.க. ஆட்சிக்கு வந்தா இதெல்லாம் கிடைக்குமின்னு எப்படி நம்புறீங்க?"

'அண்ணா ஏழைங்க கஷ்டமெல்லாம் தெரிஞ்சவருங்க. காங்கிரஸ்காரங்க மாதிரி எலக்சன் சமயத்திலே மட்டும் ஜனங்களை பார்க்க வர்றவரு இல்லீங்க! காங்கிரசுக்காரங்க சொல்லுவாங்க செய்யமாட்டாங்க! எம்மாதிரி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு-புறம்போக்கு நெலம் கெடைச்சா அதை வச்சுப் பொழச்சுக்குவோமிங்களே. அண்ணா ஆட்சிக்கு வந்தா எங்களுக்கெல்லாம் அது கெடைக்குமின்னு நம்புறோம்."

"ஆமா மத்த கட்சித் தலைவர்களைவிட அண்ணாவை மட்டும் ஏன் ஒங்களுக்குப் புடிச்சிருக்கு?"

"எனக்கு இஷ்டமான தலைவரு அவருதாங்க அதான் மொதல்லேலே சொன்னனே. ஏழைங்க கஷ்டத்தை தெரிஞ்சவருன்னு. அவரு கட்சியிலேயே இருக்கனும்னு அதிலேயே சாகனுமின்னுதாங்க எனக்கு எண்ணம்! அண்ணாவுக்கு நான் சின்னவன் தான அவரை தந்தை மாதிரி நெனைக்கிறேன். அவரை யாராவது திட்டினா

எனக்குப் பொறுக்காதுங்க-ஆனா எதையும் தாங்கிக்கனுமின்னு அண்ணா சொல்லியிருக்காரே அதனாலே கம்மினு இருந்திடுவேன்.

ஒருசமயம் காங்கிரசுக்காரருன்னுநெனைக்கிறேன். அவரு ஏங்கிட்டெ சிகரெட்டுப் பத்தவைக்க தீக்குச்சி கேட்டாரு நான் டப்பாவைத் தெறந்து உள்ளேயிருந்து தீக்குச்சி எடுத்துக்கொடுத்தேன். டப்பாவிலே நம்ம அண்ணா படம், நெடுஞ்செழியன் படம், கருணாநிதி படம் ஒட்டியிருந்தேன். அதெப் பாத்துப்புட்டு அவரு 'இவனுங்க படமெல்லாம் ஏன்யா இதிலே ஒட்டிவச்சிருக்கே'' அப்டீன்னு கேட்டாரு. எனக்கு கோபம் வந்திச்சு ஆனா பொறுத்துக்கிட்டேன். "இந்தாய்யா நீ இதெல்லாம் கண்டுக்காதே! நீ குச்சி கேட்டியா வாங்கிக்கினு போ! இத்தெல்லாம் ஏன் இஷ்டம்ன்னு சொல்லி அனுப்பிச்சேன்.''

"நீங்க எவ்வளவு நாளா அரசியல்லே ஈடுபட்டுவர்றீங்க?''

"நான் 1938லேயே தியாலாஜிகல்ஹைஸ்கூலுக்கு முன்னாலே இந்தியை எதிர்த்து மறியல் செய்து ஏழு மாதம் ஜெயிலுக்குப் போயிருக்கேனுங்க. நான் காலு மொடமானவன்கிறதினாலே அப்போ நீதிபதியாயிருந்த மாதவராவ் கோர்ட்டிலேயே சொன்னாருங்க - "உனக்கு எதுக்கு இந்தி எதிர்ப்பு அது இதெல்லாம்-உன்னை மன்னிச்சு விட்டிடுறேன் இனிமே அதிலேயெல்லால் ஈடுபடாதே என்றார். "நீங்க மன்னிச்சுவிட்டாலும் மறுபடியும் மறியல் செய்துவிட்டு வருவேன்" அப்படீன்னு சொல்லிட்டு தண்டனையை ஏத்துக்கிட்டேன்.

ஜெயில் அதிகாரிகூட என் நெலைமையைப் பார்த்திட்டு 'நீ மன்னிப்பு எழுதிக் கொடுத்தியின்னு உன்னை விடுதலை செஞ்சிடுறேன்னாரு. மன்னிப்பு எழுதிக் கொடுத்திட்டு உயிரோடெ வெளியே போகமாட்டேன்னு சொல்லி ஏழு மாசத்துக்குப்பிறகுதாங்க வெளியே வந்தேன். அப்ப இருந்தே எனக்கு அரசியல்லே ஈடுபாடு உண்டுங்க.

"நீங்க தினசரி என்ன பத்திரிகை படிக்கிறீங்க?''

'முரசொலி' காசு கொடுத்து வாங்குவேனுங்க. எனக்குப்படிக்கத் தெரியாது. பக்கத்து வீட்லே ஒரு பையன் இருக்காருங்க அவர்கிட்டேக் கொடுத்துப் படிக்கச் சொல்லிக் கேப்பேனுங்க.''

"தி.மு.க. ஆட்சிக்கு வரனுமின்னிகளே அதுக்கு 67ல்லே நீங்க எனன செய்யப் போறீக?''

"பிச்சைஎடுத்தாகிலும் அதுக்கு ஆதரவு தருவேன். யார் எங்க தொகுதியிலே நிக்கிறுங்களோ அவுங்களுக்கு- உதய சூரியனுக்கே ஓட்டுப்போடும்படி கூறி தெருத் தெருவாப் போவேனுங்க. தி.மு.க. ஆட்சி வந்தாத்தாங்க ஏழைப்பட்டவங்க சந்தோஷமா இருக்கலாம்.

# இதயத்தில் இடம் பெற்றவர் !

சி. பெருமாள்
மீனாம்பாள் நகரம்
ரயில்வே காலனி,
சேத்துப்பட்டு
சென்னை.

"அண்ணாவைத் தெரியுமா? அவர் பேச்சைக் கேட்டிருக்கிறீர்களா ?''

"அவரைத் தெரியாதவுக தமிழ்நாட்லெ ஏது தம்பி. அவரு பேச்சை எத்தனையோ முறை கேட்டிருக்கேன். ஒவ்வொரு கூட்

டத்திலேயும் ஏழைகளைப்பத்தித்தான் பேசுவாரு. நான் அவரு கட்சி மெம்பரு (உறுப்பினர்) இல்லையே தவிர ஆதரவாளர் தம்பி. தேர்தல் நிதிக்கு, கேஸ் நிதிக்கு பணம் குடுத்திருக்கேன். இப்பக்கூட அண்ணா பிறந்தநாள் விழாவுக்குபணம் குடுத்தேன்,"

"உங்களுக்கு ஒரு நாளைக்கு என்ன வருமானம் வருது?"

"ரெண்டு ரூபா கெடைக்கும் மூணு ரூபா கெடைக்கும் சில நாள்லெ எட்டணாக்கூடக் கெடைக்காது. இந்தப் பொளைப்பு வருமானத்தை சரியாச் சொல்லமுடியாது.''

"இந்த வருமானம் உங்களுக்குக் கட்டி வருதா?''

"நாலு குழந்தை-பொண்சாதி எப்படிக் கட்டும். ஒரு வேளை இருந்தும் ஒருவேளை இல்லாமலுந்தான் காலத்தை தள்ளிக்கிட்டு வர்றோம். எனக்கும் 48 வயசாகிப் போச்சு. வெள்ளைக்காரன் காலத்திலெகூட இவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்கல்லே. சுதந்தரம் வந்தா சொகம் கெடைக்குமின்னு அப்ப எல்லோரும் பேசினாங்க, எம்டன் குண்டு போடுறப்போ நான்கூட காங்கிரஸ் கொடியை புடிச்சுக்கிட்டு வந்தேமாதரம்னு' தெருத் தெருவா சுத்தி வந்தேன். சுதந்தரம் கெடைச்சிச்சு—ஆனா நமக்கு சொகமும் கெடைக்கல்லே சோறும் கெடைக்கல்லே.'

"இதுக்கெல்லாம் யாரு காரணமின்னு நினைக்கிறீங்க?"

"பச்சப்புள்ளெகூட சொல்லுமே காங்கிரஸ்தான் காரணமின்னு. தங்க வீடுகிடையாது, நல்ல சாப்பாடு கிடையாதுசொந்தக்காரங்க வந்தா ஒரு வேளை சோறு போடமுடியல்லே நாம இபபடிக் கஷ்டப்பட்டுக்கிட்டுருக்கோம். மந்திரிமாருக நாடு முன்னேறியிருக்கு முன்னேறியிருக்குன்னு ஊரெல்லாம் தம்பட்டம் அடிச்சிக்கிட்டு வர்றாங்க!"

"காங்கிரஸ் கட்சிதான் ஏழைகளுக்கு நன்மை செய்யக்கூடிய கட்சின்னு காமராஜர் பேசியிருக்காரே!''

"அவுங்க சரக்கை பின்னே அழுகல் சரக்குன்னு சொல்லுவாங்க. நமக்கில்லல தெரியுது நாத்தம். பன்றி தங்குகிற இடத்திலே நாங்க தங்கியிருக்கோம். எங்க வாழ்க்கை எப்படியிருக்குமின்னு பாருங்க. 19 வருஷமா இவுங்க பணக்காரங்களுக்குத்தான நன்மை செஞ்சிருக்காங்க.

ரோடு போட்டோம், பள்ளிக்கூடம் கட்டினோம்னு மந்திரியெல்லாம் பேசுவாங்க. ஏன் வெள்ளைக்காரன் ரோடு போடலியா? வெள்ளைக்காரன் காலத்திலே பள்ளிக்கூடம் இல்லியா? இந்த மந்திரிகள்லாம் எங்கே படிச்சாகலாம்? எல்லாத்தையும் நாங்கதான் செஞ்சோமின்னு சொல்லி ஓட்டு வாங்கிறதுககாகப் பேசுறாங்க. இன்னொரு அஞ்சு வருஷத்துக்கு நாமலே பங்காப போட்டுக்கினு இருக்க மாட்டோமாங்கிற பதவி ஆசை அவுங்களுக்கு!''

"தி. மு. க. ஆட்சிக்கு வந்தா எல்லா நன்மையும் கெடைக்குமின்னு நெனைக்கிறீங்களா?''

"எம்மாதிரி ஏழைப்பட்டவங்க பூரா இந்தக் கட்சியைத்தாங்க நம்பிக்கிட்டிருக்காங்க. நாங்கதான் கைவண்டியை இழுத்துப் பொழச்சு காலத்தெ கழிச்சிட்டோம். எங்க புள்ளெ குட்டிகளாவது அதுக் காலத்திலே நல்லா இருக்கணுமே அதுக்காகத்தாங்க எங்கமேலெ இரக்கம் காட்ற புண்ணியவாங்க வரணுமின்னு பாடுபடுறோம்,''

"67-ல்லே தி. மு. க. வெற்றிபெற நீங்க என்ன செய்யப் போறீங்க?''

"என்னாலெ முடிஞ்சதெல்லாம் செய்வேன். ஏன்னா நாமெல்லாம் சேர்ந்து உதயசூரியனுக்கு ஓட்டுப்போட்டு தி. மு. க.வை செலிக்க வைக்கலேன்னா, எலக்ஷனுக்குப் பிறகு நம்மையெல்லாம் ஒழிச்சுப்புடுவாங்க. ஓட்டு வாங்குகிறவரையிலும் இனிக்க இனிக்கப் பேசுவாங்க—அவுங்க பேசிலெ மயங்கி ஓட்டுப் போட்டோம் படி அரிசி அஞ்சு ரூபாய்க்கு வித்தாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லெ!''

"அண்ணா பிறந்தநாள் விழாக் கொண்டாடுனீங்களா?"

"கை வண்டிக்காரங்கள்லாம் சேர்ந்து பணம் வசூலிச்சு தேக்சாவிலெ பொங்கல் செய்து அண்ணாவுக்கு 58 வயசு ஆகிறதினாலே 58 பொட்டலம் போட்டு 58 வீடுகளுக்குக் கொடுத்தோம்.

முகப்பு

வண்ணப் படம் :

டி. ஐ. சாந்தாமியான்

# 'அண்ணு'

# என்பது ஏன் ?

## புஷ்பாம்மாள்

காய்கறி வியாபாரம்

நியூ ஜெண்டா மார்க்கெட்

சென்னை—5

"தி. மு. க. கட்சியை பத்தி உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்?"

"எப்படித் தெரியும்?"

"எங்க வீட்டுப் பக்கம் அந்தக் கட்சிக் காரங்க அடிக்கடி கூட்டம் போடுவாங்க, கொடி கட்டுவாங்க. எங்க வீட்டுக்குப் பக்கத்திலே மன்றத்துக் காரங்க ராப்பள்ளிக்கூடம் நடத்திருங்க. என்பையன் கூட அங்கதான் ராவுலே படிக்கிறதுக்கு போய் வருவான்."

"எல்லாக் கட்சிக் கூட்டத்துக்கும் போவீங்களா?"

"எங்க வீட்டுப் பக்கம் நடந்தாக் கேப்பேன்-அண்ணு கூட்டம் மட்டும் பக்கத்திலே எங்கேயாவது நடந்தா போய் வருவேன்."

"அண்ணு பேச்சை மூதல் முதல்லே எங்கே கேட்டீங்க ஞாபகம் இருக்கா?"

"தேர்தல் சமயத்திலே பார்த்தசாரதி கோயிலுக்குப் பக்கம் ராத்திரி பன்னிரெண்டு மணிவரையிலும் காத்திருந்து அண்ணு கூட்டம் கேட்டேன். அதான் நான் முதல்லே கேட்ட கூட்டம்."

"காமராஜர் கூட்டம் கேட்டிருக்கிங்களா?"

"இல்லே!"

"ஏன்? பிடிக்காதா?"

"அவரும் அவுங்க ஆளுகளும் ஓட்டு வாங்கிற சமயத்திலெதான் வர்ருங்க. மத்த சமயத்தலே நமக்கெல்லாம் உதவி செய்யிறது இந்த தி. மு. க. பிள்ளைக தாங்க. தீப்புடிச்சுக்கிட்டா சரி, ஒரு நல்லது கெட்டதுன்னு சரி அந்தக் கட்சிக்காரங்கதான் பறந்து பறந்து வேலை செய்யுவாங்க!"

"உங்களுக்கு எத்தனை குழந்தைக, வீட்டுக் காரர் என்ன வேலை செய்யிருரு, இந்தக் காய்கறி வியாபாரத்திலே ஒரு நாளைக்கு என்ன கெடைக்கிது?"

"மொத்தம் மூணு பிள்ளைக. ரெண்டு ஆணு ஒரு பொண்ணு. எங்க வீட்டுக்காரரைச் சேத்து மொத்தம் ஆறுபேர் இருக்கமுங்க. எங்க வீட்டுக் காரருக்கும் இந்த வியாபாரந்தான். இந்த வியாபாரத்திலே ஒரு நாளைக்கு ரெண்டு கெடைக்கும்; மூணு கெடைக்கும்; சொல்லமுடியாதுங்க."

"இந்த வருமானம் ஒங்க குடும்பத்துக்கு போதுமானதா இருக்கா?"

"எப்படிங்க போதும்! அந்தக் காலம் மாதிரியா வெலைவாசி விக்கிது! மூந்தி எல்லாப் பஜார்லேயும் அரிசி கெடைக்கும். இருக்கிற பணத்துக்கு வாங்கிக்குவோம். இப்போ கெவுருமெண்டு கொடுத்திருக்கிற கார்டுக்கே அரிசி இல்லேங்கிருனே. இன்னக்கி காலையிலே ரெண்டார் ரூபா குடுத்து படி அரிசி வாங்கினேன். இப்படி வாங்கி எத்தனை நாளைக்கு எத்தனை பேர் சாப்பிடுறது? 12, 13. வயசிலே

சாப்பிட்ட சாப்பாடு இப்போக் கெடைக் கல்லீங்களே?''

''ஆமா இந்தக் கஷ்டத்துக் கெல்லாம் யார் காரணமின்னு நினைககிறீங்க?''

''கெவுரு மெண்டுதான்; வேறெயாரு!'' அவுங்கதான் பொலீக்கவிடாமே வரியை மட்டும் போட்டு வாங்கிக்கிறாங்க ஜனங் களுக்கு சொகத்தத்தான் காணோம்.

''விலைவாசியெல்லாம் குறையணு மின்னு—ஏழைங்க கஷ்டம் திரணுமின்னு 67ல்லே காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங் கன்னு காமராஜர் பேசியிருக்காரே— போடுவிங்களா?''

''இப்போ காமராஜர் ஆட்சிதானே நடக்குது. இப்போ சொகம் கெடைக் கல்லியே. நேத்து ரேஷன் கார்டைக் கொண்டு போனேன். அரிசி இல்லே னுட்டான்—எம் பிள்ளை குட்டிகள்லாம் பட்டினிங்க. அப்புறம் அண்ணா பிறந்த நாளை ஒட்டி அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத்துக்காரங்க சோறு போட்டாங்க. அந்தப் புண்ணியவாங்க போடலேன்னு எம்புள்ளெ குட்டியெல்லாம் துடிச்சுப் போயிருக்குமுங்க. இந்தக் கஷ்டம் எனக்கு மட்டும் இல்லீங்க. வீட்டுக்கு வீடு இருக்கு. நான் பார்க்கிறேன்லல. ஒரு ஆபீஸிலே உத்தியோகம் பாக்கிறாங்க— 300 ரூபா சம்பாதிக்கிறகனுகதான் பேரு. உள்ளக்குள்ளே பாத்தா ஊரெச் சுத்தி கடன் இருக்கும். இன்னக்கி விக்கிறவிலை வாசியிலே நாலு புள்ளேகுட்டிகளை வச் சுக்கிட்டுக் குடித்தனம் பண்ண-முன் னூறு இல்லே நானூறு வந்தாலும் பத் தாதுங்க.''

''இதுக்கெல்லாம் காரணம் என் னன்னு நினைக்கிறீங்க?''

''எல்லாப் பொருளுக்கும் வரி வரின்னு போட்டா வெலைவாசி ஏறத்தானே செய் யும்; முந்தியெல்லாம் நான் ஏழுரூபா எட் டுரூபா எத்துக்கினு கொத்தவால் சாவடி போனேன்னு ஒரு கை வண்டி நிறைய காய்கறி வாங்கிக்கினு வருவேன். இப் போ நூறுரூபா கொண்டு போனாலும் பத்தமாட்டேங்கிதே!

''ஏழுரூபா முதல்போட்டு காய்கறிவாங்கி வித்த காலத்திலே எங்கம்மா நான் எல் லாம் தங்க நகை போட்டுக்கிட்டிருந் தோம். பட்டுக் கண்டாங்கி கட்டிக் கிட் டிருந்தோம். இந்தக்காங்கிரஸ் ஆட்சி வந் ததுக்குப் பிறகு துண்ணச் சோறு கெடக் கல்லிங்க! நகைகெடக்குது-பிள்ளேகளுக்கு நல்ல சொக்கா வாங்கிப் போட முடி யல்லே—ஒரு திருநா கொண்டாட முடி யல்லே...போங்க!''

''ஆமா இந்தக் கஷ்டமெல்லாம் தீர்ற துக்கு என்ன வழி இருக்குன்னு நினைக் கிறீங்க?''

''இந்தக் காங்கிரஸ் ஆட்சி தொலைஞ்சு தி. மு. க. வரணுங்க. அண்ணா மந்திரியா வந்தா விலைவாசி குறையும் எல்லாம் கெடைக்கும்,''

''அவரு பேரு அண்ணாத்துரையில்ல— ஏன் அண்ணான்னு சொல்றீங்க!''

''எங்க வீட்லே அண்ணா படம் இருக் கிங்க. சாமி படத்தை மதிக்கிறதுமாதிரி அவரையும் மதிக்கிறோம். என் பையன் சின்னவன்கிட்டெக்கூட அவருபடத்தைக் காட்டி யாருன்னு கேட்டா அண்ணான்னு தாங்க சொல்லுவான்!''

''அண்ணா ஆட்சிக்கு வந்தா விலைவாசி யெல்லாம் குறையுமின்னு எப்படி நம்பு றீங்க?''

''ஏழைங்க கஷ்டத்தை தெரிஞ்சவரு, அவரு வந்தா நெலமை மாறுமின்னு எல்லாரும் சொல்றாங்களே, அவரைப் பத்தி ஊர்லே புகழ்ச்சியாப் பேசுறாங் களே!''

''ஏன் காமராசரைப் பத்திப் பேச லியா?''

''பேசுறாங்க. அவுங்கவுங்களுக்குப் பலன் கெடைக்கிது--பேசுறாங்க. நாங்க ளும் காங்கிரசுக்கு ஓட்டுப் போடத்தான் செஞ்சோம், கஷ்டம் திரல்லியே. அதான் நம்ம அண்ணா நல்லா வரமாட்டாரா அதை முன்னிட்டு நல்ல சொகம்கெடைக் காதான்னு எதிர்பார்க்கிறோம்.''

''அண்ணா பிறந்தநாள் விழா கொண் டாடுனீங்களா?''

''கொண்டாடினோம் நாலு பேருக்கு சாப்பாடு போட்டோம். சக்கரைப் பொங்கல் செய்து பிள்ளேங்களுக்கெல் லாம் கொடுத்தோம், இன்னக்கி மட்டும் இல்லீங்க. ஏதோ கையில் கெடக்கிறதை வச்சு வருஷா வருஷம் கொண்டாடு வோம்!''

''காங்கிரஸ்காரங்க நெறைய பணம் சேர்த்து வச்சிருக்காங்க. 67ல்லே எப் படியாவது ஜெயிக்கிறதுக்கு பணம் கொடுத்து ஓட்டுக் கேப்பாங்களே; நீங்க என்ன செய்வீங்க?''

''எங்க கழுத்து துண்டாப் போனக் கூட அந்தக் காசை நாங்க வாங்க மாட் டோம். 67ல்லே இந்தக் கட்சி ஜெயிக் கணும் — அண்ணா மந்திரியாகணும் அதான் எங்க ஆசை, அந்த மகாராசன் வரணுங்க—அப்பத்தான் கஷ்டம் திரும்.

# ...அண்ணாவுக்குத் தெரியும் !



## எம். மாசி

சைக்கிள் ரிக்ஷா

7வது தெரு, பச்சையப்பன் தோட்டம்

சென்னை.

"அண்ணா பேச்சைக் கேட்டிருக்கிறீர்களா ? அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?"

"அண்ணா பேச்சை நெறையக் கேட்டிருக்கேங்க. முதல் முதல்லே கேட்டது லட்சுமிபுரம் யுவர் சங்கத்திலே ராஜாஜியும், அண்ணாவும் பேசுனாங்க — அதைக் கேட்ட பிறகுதான் அண்ணாமேலே ஒரு அன்பு ஏற்பட்டுச்சுங்க. அண்ணா பேசுறது எல்லாருக்கும் புரியுமிங்க. ஆனா காங்கிரஸ்காரங்களுக்குத்தான் புடிக்காது, காரணம் அவுங்க ஊழலைத் தானே எடுத்து அண்ணா பேசுறாரு."

"அண்ணா தலைமையிலே இயங்குகிற இந்தக் கழகத்திலே இருந்து என்ன எதிர்பார்க்கிறீங்க?"

"முதல்லே தி. மு. க. ஆட்சிக்கு வரணுங்க. வந்திட்டா ஏழைங்களுக்கு என்ன செய்யணுமின்னு அண்ணாவுக்குத் தெரியுமே ?"

"ஏன் காங்கிரஸ்காரங்களுக்கு ஏழைகளைப் பத்தித் தெரியாதா ?"

"அவுங்களுக்கு பணக்காரங்களைத் தாங்க பிடிக்கும், ஏழைகளைப் பத்திப் பேசுவாங்க. ஓட்டு வாங்கிற சமயத்திலே மட்டும்."

"67ல்லே காங்கிரசுக்கு ஓட்டுப் போட்டா ஏழைகள் வாழ்க்கை உயருமின்னு காமராஜர் பேசியிருக்காரே?"

"கேக்கிறதுக்கு சக்கரையாட்டமாத் தான் இருக்கு. சொல்றாங்களே தவிர செய்யக் காணோமே. சக்கரை வரும் வரும்ன்னு சொல்லிக்கிட்டிருந்தா—தந்தாத்தானுங்களே இனிக்கும். இத்தனை வருஷமா காங்கிரஸ் தானுங்களே ஆட்சி செய்யிது. இப்பச் செய்யாதவங்களா இனிமேச் செய்யப் போறாங்க ? வெள்ளைக்காரன்கிட்டே சுயராஜ்யத்தை வாங்கினதிலிருந்து செய்யக்காணோம். 67ல்லே ஜெயிச்சுமட்டும் செஞ்சிடப் போறாங்களாக்கும், அதெல்லாம் மறுபடியும் பதவிக்கு வரணும்னு பேசுற பேச்சுங்க."

"தி. மு. க. ஆட்சிக்கு வந்தா மட்டும் தீருமின்னு எப்படி நம்புறீங்க ?"

"அவுங்க செய்வாங்கன்னு எப்படி நம்புறோம்ன்னா ? இப்போ தி. மு. க. கார்ப்பரேஷன் வந்திச்சு நல்லது செய்யலியா ? ரிக்ஷா, ஆப்பக்கடை இதுமாதிரி சின்னத் தொழில் செய்யிறவங்களுக்குப் போட்டிருந்த வரியைக் குறைச்சாங்க, குடிசைப் பகுதிக்கெல்லாம் ரோடு போட்டாங்க, விளக்குப் போட்டாங்க, தண்ணி வந்திச்சு கார்ப்பரேஷன்லே காங்கிரஸ்காரங்க இருந்த காலத்திலே இதெல்லாம் கெடைக்கல்லியே. கவுன்சிலர்களைப் பாக்கறதே கடவுளைப் பாக்கறது மாதிரி இருக்குமே."

அண்ணா ஆளு உயரம் இல்லேன்னாலும் அவரு பேச்சு உயர்ந்ததுங்க. சொல்றதைச் செய்வாரு, அண்ணா வந்தா விலைவாசி குறையுமின்னு நம்புறோம். காங்கிரஸ்காரங்க வந்தா விலைவாசி குறையுமின்னு எப்புடீங்க நம்புறது? குறையுங்கன்னு சொல்லி ஊர்வலம் போனதுக்குத்தான் அடி அடியின்னு அடிச்சு ஜெயில்லே அடைச்சு கோ. சு. மணியைக்கூட கொன்னுபோட்டாங்களே இவுங்களை நம்பினா ஓநாயை நம்புனது மாதிரிதாங்க !"

"அண்ணாவைச் சிலர் அவன் இவன்'னு பேசுறாங்களே அதைப்பத்தி என்ன நினைக்கிறீங்க?"

"திட்டட்டும் — திட்ற ஆளப் பத்தி ஜனங்க புரிஞ்சுக்குவாங்க. அதே சமயம் நம்ம அண்ணாவுக்கும் கட்சிக்குந்தாங்க மதிப்பு வளரும்."

"67ல்லே தி. மு. கழகம் வெற்றி பெறுவதற்கு நீங்க என்ன செய்யப் போறீங்க?"

"எங்க பகுதி ஓட்டுப் பூரா சிதறாமே இருக்கிறதுக்கு நான் வேலே செய்வேங்க. அந்தச் சமயத்திலே காங்கிரஸ்காரங்க ஆள்காட்டிக் கொடுப்பாங்க. போலீசும் ரொம்பத் தொல்லே தரும். கழகத்துக்கு ஆதரவா வேலே செய்யிறவங்களையெல்லாம் தேர்தலுக்கு பத்து நாளைக்கு முந்தியே புடிச்சு உள்ளே போட்ருவாங்க. நான் அதுக்காகப் பயப்படப் போறதில்லீங்க! வெளியே இருந்தா மட்டும் இவுங்க ஆட்சியிலே சொகமாவா இருக்கப் போறோம். உள்ளே போனாலும் சரி அடி உதை பட்டாலும் சரி; 67ல்லே தி. மு. க. ஜெயிக்கிறதுக்கு பாடுபடுவேங்க."

ஃ

# எங்கள் குல தெய்வம்

**எ ல் ல ம் மா**

'சோற்றுக் கடை'

6, ஆறுமுக முதலி தெரு,

சென்னை-5

"ஏம்மா, உங்களுக்கு அண்ணாவைத் தெரியுமா? அவரு பேசுற கூட்டத்துக்கெல்லாம் போயிருக்கிறீங்களா?"

"எங்க வீட்லெயே அண்ணாபடம் மாட்டியிருக்கோம். அவருபேச்சை எத்தனையோ முறை கேட்டிருக்கேன்."

"அவரு என்ன பேசுவாரு? உங்களுக்குப் புரியுமா?"

"ஏன் புரியாமே? நாட்டு நடப்பைத் தானே பேசுறாரு, இம்மாத்தூண்டு குழந்தைக்குக் கூடப் புரியுங்க!"

"உங்க வியாபாரமெல்லாம் எப்புடி நடக்குது? இதிலே ஒரு நாளைக்கு என்ன கெடைக்கும்!"

"என்ன கெடைக்கிது வவுத்து சாப்பாட்டுக்கு சரியா இருக்குது. எனக்கும் ஆயிப் போச்சுங்க 47 வயசுக்கு மேலெ. கை நெறைய சம்பாதிச்சதல்லாம் அந்தக்காலம் உடம்பை சவட்டிக்கினு ஒழைச்சாலும் நயாப் பைசா மிஞ்சல்லே. விக்கிற வெலேவாசியிலே என்னத்தெங்க மிஞ்சும்!"

"ஆமா இதுக்கெல்லாம் யார் காரணம்?"

"இந்த அக்கிரமத்துக்கெல்லாம் காங்கிரஸ் கட்சிதான் காரணம்.

"வரப் போற எலக்ஷன்லே யாருக்கு ஓட்டுப் போடப் போறீங்க?"

"நம்ம அண்ணா கட்சிக்குத்தான்!"

"அண்ணா கட்சிக்கு ஓட்டுப் போட்டா சொகம் கெடைக்குமின்னு எப்படி நினைக்கிறீங்க?"

"அவருதாங்க எங்களுக்கு கொல தெய்வம். அவரை நம்பாமே வேறெ யாரை நம்புறது? சொகம் கெடைக்குதோ இல்லியோ அவரு கட்சிக்கித்தான் ஓட்டு. நான் மட்டும் இல்லே எங்க ஜனங்க பூரா—ஆனா வெளியே காட்டிக்க மாட்டோம்.

ஃஃ

# அண்ணா பிறந்தநாள்—ஏழையர் திருநாள்!

**ஆர். கே. கோவிந்தன்**
கோல்டன் ஸ்டுடியோ லைட்பாய்
ரெட்டித் தெரு,
விருகம்பாக்கம
சென்னை-26.

"அண்ணா பேச்சை முதல் முதல்லே எங்கே கேட்டீங்க?"

"1957ல்லே மாயவரத்தில் ஒரு பொதுக் கூட்டத்திலே கேட்டேங்க. விவசாயிகள் பிரச்சினையைப்பத்தி ரொம்ப அருமையா பேசினாருங்க."

"அண்ணா தலைமையில் இயங்குகிற தி. மு. கழகத்திடமிருந்து நீங்க என்ன எதிர்பார்க்கிறீங்க?"

"ஏழைக் குடியில் பிறந்த தலைவர்களால் ஏழைகளுக்காகத் துவக்கப்பட்ட கட்சி தி. மு. க. ங்கிறது என்னுடைய அபிப்பிராயம். பொருளாதார திட்டங்களிலும் சரி, மொழி விஷயத்திலும் சரி தமிழ் நாட்டு மக்களின் நன்மையைக் கருதி சர்க்காரோடெ போராடுகிற கட்சி—தியாகம் செய்கிற கட்சி தி. மு. க. தாங்க. இன்னக்கி காங்கிரஸ்காரங்க பேசிக்கிட்டு வர்ற சோஷலிசத்தை அமுல்படுத்த தகுதி உள்ள கட்சி தி.மு.க. தான். அந்தக் கட்சி 67ல்லே ஜெயிக்கணும்கிறதுதான் என்னுடைய ஆசை."

"ஏன் காங்கிரஸ் கட்சியாலெ சோஷலிசத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாதின்னு நினைக்கிறீங்க?"

"18 வருஷமா சோஷலிசத்தைக் கொண்டுவர முடியல்லேன்னா இனிமே எப்படிக் கொண்டுவரப் போறாங்க. காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற முக்கால் வாசிப் பேரு லட்சாதிபதிங்க — கோடீஸ்வரருங்க. இவுங்க சோஷலிசத்தைக் கொண்டுவர ஒத்துக்கிருவாங்களா? சும்மா ஜனங்களை ஏமாத்தி ஓட்டு வாங்கிறதுக்காக இப்படிப் பேசுறாங்க. காங்கிரஸ்காரங்க சோஷலிசம் பேசுறது சினிமாவிலே வில்லன் வேதாந்தம் பேசுறதுக்கு சமமுங்க."

"தமிழ்நாட்டில் எத்தனையோ தலைவர்கள் இருக்க அண்ணா மட்டும் உங்களைக் கவர்ந்ததுக்குக் காரணம் என்ன?"

"எத்தனையோ லட்சக் கணக்கான பேரு அவர் பேச்சிலெ மயங்கிக் கிடக்கிறபோது நான் என்னங்க சாதாரண ஆளு—அவர் பேச்சை முதல்லெ கேட்ட உடனே அண்ணாதான் ஏழைகளுக்கு நன்மை செய்ய முடியுமின்னு என் மனசிலே பட்டிச்சு. அதுமட்டுமில்லெ எதிரியைக்கூட புண்படுத்தாமெப் பேசுற பண்பு அவருகிட்ட தான் இருக்கு. 'காந்தி'ன்னு ரெண்டாவது முறையா ஒருத்தரைச் சொல்றோமின்னா அது அண்ணாவுக்குத்தாங்க பொருந்தும்."

"அண்ணா பிறந்தநாள் விழா கொண்டாடுனீங்களா?"

"சிறப்பாக் கொண்டாடினேன்!"

"நம்ம பிறந்தநாளைக்கூட நாம் உற்சாகமாகக் கொண்டாடுறதில்லே. ஆனா அண்ணா பிறந்தநாளை மட்டும் எல்லோரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதற்குக் காரணம் என்ன?"

"எப்படி தீபாவளி, பொங்கல் மக்கள் மனசிலே பதிஞ்சு போச்சோ அதுமாதிரி அண்ணா பிறந்தநாள் விழாவும் தோழர்கள் மனதிலே பதிஞ்சு போச்சு. என்னைப் பொறுத்தவரை அண்ணா பிறந்தநாள் ஏழைகளுக்கு பண்டிகை மாதிரி. அண்ணா நாட்டுக்கு மட்டும் தலைவர் இல்லீங்க—ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலைவர்."

# எங்கள் அண்ணா

## ஏழைகளின் வக்கீல்!

**எம். நாராயணன்**

பால் வியாபாரம்
5, பச்சையப்ப நாயக்கன் தெரு
சென்னை.

"அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சை முதலில் எங்கே கேட்டீர்கள்?"

"1951ல் சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் கேட்டேன். அப்போல்லாம் எனக்கு அரசியலைப்பத்தி ஒண்ணும் தெரியாது. அண்ணா பேச்சைக் கேட்டவுடனே அவர்பேர்ல ஒரு பிரியம் ஏற்பட்டிச்சு அன்னையிலிருந்து இன்னக்கிவரையிலும் அவர் கூட்டம் எங்கே நடந்தாலும் போவேன். ஆனா நான் எதிலேயும் ஈடுபாடு கொள்ளமாட்டேன். கட்சி உறுப்பினரும் அலெ."

"அண்ணா பிறந்தநாள் கொண்டாடினீர்களா எப்படி?"

"வீட்டிலேயெல்லாம் இல்லீங்க! என்னைப் பொறுத்தவரை நண்பர்களுக்கு ஸ்வீட், காபி வாங்கிக்கொடுத்தேன். பசங்களுக்கும் மிட்டாய் வாங்கிக் கொடுத்தேன் அவ்வளவுதாங்க."

"நீங்கதான் கட்சி உறுப்பினர் இல்லியே அப்படியிருக்க அண்ணா பிறந்தநாளைக் கொண்டாடணும்கிற உணர்வு எப்படி ஏற்படுதுங்க?"

"எனக்கு அரசியல்லே அவ்வளவு ஈடுபாடு இல்லாட்டாலும் எப்படியோ அண்ணா பேர்ல ஒரு பிரியம் ஏற்பட்டுப் போச்சுங்க. அதுக்குக் காரணம்-பெரியாரும் சரி மற்ற கட்சித் தலைவர்களும் சரி அண்ணாவை மோசமான வார்த்தைகளைச் சொல்லி தாக்குறபோதுகூட அவரு திருப்பித் தாக்குறது இல்லை. சமயங்கள்லே மந்திரிககூட மட்டரகமாப் பேசுறாங்க. அவுங்களுக்குப் பதில் சொல்றபோதுகூட அண்ணா உயர்ந்த முறையிலே பேசுறாரு அந்தக் குணம் எனக்கு ரொம்பப்பிடிச்சிருக்குங்க.

அதுமட்டும் இல்லெ ஏழைங்களுக்கு வக்கீல் மாதிரி இருந்து வாதாடுறதுக்கு இன்னக்கி அவரவிட்டா தமிழ்நாட்டில் வேறெ தலைவர் இல்லீங்க. அதனால்தான் எங்க குடும்ப ஓட்டுப்பூரா எப்பவும் தி.மு.க. வுக்குத்தான்."

"67-ல் தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தா மட்டும் இந்த நிலைமையெல்லாம் மாறும்ன்னு எப்படி நம்புறீங்க?" என்று கேட்டதற்கு—

காங்கிரஸ்காரங்க ஆட்சிக்கு வந்து 18 வருஷம் ஆச்சு ஏழைங்க வாழ்க்கைத்தரம் உயரல்லெ. அதனால்தான் ஜனங்க ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறாங்க-தி. மு. க. செய்யுமின்னு நம்புறாங்க. அவுங்களும் செய்யல்லேன்னா இன்னொருத்தரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதுதான். இது தானுங்களே ஜனநாயகம்."

"67-ல்லே தி. மு. க. வெற்றி பெற நீங்க என்ன செய்யப் போறீங்க?"

"வழக்கம்போல எங்க குடும்பத்து ஓட்டெல்லாம் போடுவோம். எனக்குத் தெரிஞ்சவங்க ஓட்டெல்லாம் தி. மு. க. வுக்குக் கெடைக்க என்னால் ஆனதெல்லாம் செய்வேன். அவ்வளவுதான்."

—பேட்டி : **தினகரன்**

# அன்றே போராடினர்!

எஸ்.எஸ்.மாரிசாமி எம்.பி

"பீகாரில் குண்டு போட்டு விட்டான் தெரியுமா?"

"அப்படியா? ஆள் சேதம் உண்டா?"

"ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்..."

"அப்புறம்...?"

"கல்கத்தாவில் பயங்கரமான பஞ்சம். அதோடு துப்பாக்கிச் சூடு நடக்காத நாளே இல்லை..."

"பிறகு?"

"பம்பாய் பற்றி எரிந்தது. நாகபுரியில் சர்க்கார் ஆபீஸ்களெல்லாம் தகர்க்கப்பட்டு விட்டன..."

"டில்லியில்..."

"சொல்லி முடியாது ரகளையை. போலீசாரும் பொது மக்களும் கைகலந்ததில் இரு தரப்பிலும் மெத்த சேதம்..."

செய்தி சொன்னவன், எதிரே போலீஸ்காரர் ஒருவர் வருவதைப் பார்த்து வாயை மூடிக்கொண்டான். அருகே இருந்தவர்களும் மவுனமானார்கள். ஆனால் கேட்ட செய்திகள் அவர்களை வெலவெலக்கச் செய்தன.

இந்தச் செய்திகள் எப்போது அடிபட்டன என்று கேட்கிறீர்களா?

1942-ல் ஆகஸ்ட் மாதத்தில்; "வெள்ளையனே வெளியேறு" என்று சங்கநாதம் ஒலித்த காலத்தில் அடிபட்ட செய்திகள்.

புயலுக்குமுன் அமைதி என்பார்களே அத்தகைய அமைதி சூழ்ந்திருந்த காலம், எனினும் செய்திகள் வதந்திரூபத்திலோ வேறு சாயலிலோ வந்துகொண்டிருந்தன. நாடெங்கும் என்ன நடக்கும் என்ற பீதி பரவியிருந்தது. தேசப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோரெல்லாம் சிறைக்குச் செல்ல மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அரசாங்கத்தின் ஒற்றர் படையும் இதற்கு ஏற்பாடுகள் செய்யும் முகத்தான் நாட்டை வலம் வந்துகொண்டிருந்தது.

தமிழகத்தில் அவ்வளவு பரபரப்பு இல்லை. காரணம் இங்குள்ள தேசிய முகாம் இரண்டாகப் பிரிந்திருந்தது. மகாத்மா சொல்லிய போராட்டததை ராஜாஜியின் தலைமையின் கீழுள்ள பிரிவினர் "கூடாது" என்றார்கள். பலாத்காரத்தை நாடு தாங்காது என்பது இவர்கள் வாதம். அதோடு ஐரோப்பாவை கதிகலங்க வைத்திருக்கும் யுத்தத்தின் கோர தாண்டவம் 'நல்ல சூழ்நிலையை' நமக்குத் தரவில்லை என்பது அவர்களது நம்பிக்கை.

ராஜாஜி தலைமையை எதிர்க்ககூடிய பெரிய காங்கிரஸ் தலைவர்கள் அப்போது தமிழகத்தில் இல்லை. எல்லோரும் தொண்டர்கள் என்ற நிலையில் இருந்தனர். வசதியற்ற இந்த முகாம் எதிர் நீச்சல் போட்டு தமிழகத்தில் சதிகளைத் தூண்டிவிட முடியவில்லை.

ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் சிறு அளவுக்கு "வேலைகள்" நடந்தன.

சீர்காழியில் ஒரு பாலம் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது.

கோவை மாவட்டத்தில் ஒரு விமான நிலயம் லேசான விபத்துக்கு உள்ளாகியது. வேறு பல இடங்களில் தண்டவாளங்களும் தந்திக் கம்பிகளும் அறுபட்டன. சில பல இடங்களில் போலீஸ் அதிகாரிகள் தாக்கப்பட்டனர்.

சென்னையிலிருந்த ஆங்கிலோ இந்திய அதிகாரிகள் இருவர்—சின்ன அதிகாரிகள் தான்—மண்டை பிளக்கப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்தனர்.

ஆறு பெரிய ஊர்களில் தபால்பெட்டிகள் திராவகத்தைக் குடித்துக்கொண்டன.

இம்மாதிரியான காரியங்கள் நடைபெற்று வந்த நேரத்தில்: விழுப்புரம் ரயில் நிலையத்தில்......

ரயில் ஒன்று ஓடி வந்து நின்றது. அதிலிருந்து நீளச் சொக்காயும் நெடுங்கம்புமாக ஒரு பெரியவர் இருக்கிறார். அவருடன் ஒரு இளைஞரும இறங்குகிறார். பெரியவரும் இளைஞரும் நெடுந்தூரத்திலிருந்து வருகிறார்கள் என்பது அவர்கள் ஆடைகளிலிருந்து தெரிகிறது. இறங்கியவர்கள் மற்ற பிரயாணிகளைப்போல் விடுவிடுவென நடக்கவில்லை. வெளியே போகவும் இல்லை. இன்னொரு பிளாட்பாரத்துக்குப போய் இன்னொரு ரயிலுக்காகக் காத்திருந்தார்கள். இவர்களை அந்த பிளாட்பாரத்திலுள்ள அத்தனை பேருடைய கண்களும் கவனிக்கின்றன. பலர் 'வணக்கம்' என்று கையெடுக்கிறார்கள். பதில் வணக்கம் கூறிக்கொண்டே இருவரும் நடந்து ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் அமருகின்றனர்.

முரட்டுக் கதர்ச் சட்டை போட்ட சில இளைஞர்களும் இவர்களைப் பார்க்கிறார்கள். அவர்கள் பார்வையை இளைஞரும் பார்க்கிறார். முறைத்துப் பார்க்கும் கதர்ச் சட்டைக்காரர்கள் முணுமுணுக்கிறார்கள். பிறகு விருட்டென்று நடந்துசென்று விடுகின்றனர். இதையெல்லாம் கவனிக்கும் அந்த இளைஞர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை.

நெடுங்கம்போடு இருந்த பெரியவரைப் பார்த்து அவர் கேட்கிறார்: "ஐயா, ஒரு சிறு சந்தேகம்."

"என்ன?—இது பெரியவரின் கேள்வி.

"ஐயா, நமக்கு வெள்ளையனும் விரோதிதானே?"—இது வாலிபரின் பதில் கேள்வி.

"ஆமாம். அதற்கென்ன இப்போது?"

"இல்லை, கேட்டேன். எனக்கொரு சந்தேகம்..."

"என்ன சந்தேகம் இந்த நேரத்தில்?"

"ஐயா, நாமும் நமது எதிர்ப்பை வெள்ளையனுக்குக் காட்டவேண்டாமா?"

"எப்படிக் காட்டச் சொல்கிறாய்?"

"இந்தப் போராட்டத்தில்"

"வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கத்தில் நாமும் சேரவேண்டும் என்கிறாயா?"—பெரியவரின்குரல் வலுக்கிறது.

"அவன் நம் விரோதி என்றால், நாமும் எதிர்ப்பைக் காட்ட வேண்டியதுதானே!"

"என்ன பேசுகிறாய்? காங்கிரஸ்காரனோடு நாமும் போவதா?"

"அவனுடன் போக வேண்டுமென்பதில்லை. தனியாகவே நாமும் நம் விரோதியோடு போராடலாமே".

"என்ன பேச்சு இது? நீ புத்தகங்களைப் படித்துக் கெட்டுபோய் விட்டாய்"

"நம் ஊரில் நம்மை தேசத்துக்கு விரோதமானவர்கள் என்று..."

"எவனாவது இரண்டு பார்ப்பான் உளருவான். அதெல்லாம் கூடாது. உனக்கு இன்னும்..." பெரியவரின் வாதங்கள் அடுக்கடுக்காய் வருகின்றன. அதோடு அந்த இளைஞரின்மீது கோபம் பீறிடுகிறது.

இளைஞர். கூப்பாட்டுக்குப் பயப்படவில்லை. ஏகாதிபத்தியம் இந்தியாவை விட்டு ஒருநாள் வெளியேறத்தான் போகிறது என்று வாதம் புரிகிறார். அந்தக் காலத்தில் 'ஏமன்ராய்' என்று பேர் பெற்ற திரு எம். என். ராயின் அறிவுசெறிந்த கட்டுரைகளை எடுத்துச் சொல்லுகிறார். ஆனால் பெரியவரோ "எம். என். ராய் ஒரு பைத்தியம். வெள்ளையனாவது வெளியேறுவதாவது. வெங்காயம்" என்கிறார்.

இளைஞரோ தன் வாதம் எடுபடவில்லை என்றதும் மவுனமாகிறார். ஆனால் அவர் கருத்து மாறவில்லை. பெரியவரால் மாற்றப்படவுமில்லை. தேச பக்தியைக் காட்ட வேண்டும் என்ற துடிப்பு இளைஞரை ஒன்றும் செய்ய விடவில்லை.

இப்படிப்பட்ட அந்த வீர இளைஞர், தேச பக்தக் காளை யாரென்று நினைக்கிறீர்கள்?

சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். அவர்தான் இன்று தமிழர் தம் நெஞ்சங்களில் அரியாசனமேறியிருக்கும் அண்ணா. அன்று பெரியார் முன்னிலையில் விழுப்புரம ரயிலடியில் வாதாடும் பொழுது அவர் தளபதி அண்ணாதுரை.

அவரது தேச பக்த உள்ளம் அன்று வாடியது. ஆனால் வெடித்து வெளிப்பட்டது 1947 ஆகஸ்டில். பெரியார் குமுறக் குமுற "திராவிட நாட்டில்" அண்ணா கட்டுரை எழுதினாரே அது 1944 ஆகஸ்ட் திங்களில் போடப்பட்ட வித்தின் முளை.

இந்தச் சம்பவம் வெகு பேருக்கு வெளியே தெரியாது. எனக்கு மட்டும் எப்படித் தெரிநதது எனகிறீர்களா? பிறிதொரு சந்தர்ப்பத்தில் கூறுகிறேன்.

பேராசிரியர்

# க. அன்பழகனின்

# மறக்க முடியுமா!

இருபத்து ஆறு ஆண்டுகட்கு முன்னர் மாயூரம் நகரப் பூங்காவில் நடைபெற்றதொரு இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில், இளைஞர் ஏறுவாகத் திகழ்ந்த அண்ணா அவர்கள், காஞ்சி சி. என். அண்ணாதுரை, எம். ஏ. பேசுவார் என்று அறிவித்தவுடன் மேடை ஏறிப் பேசத் தொடங்கினார்கள். மற்றவர்கள் பேசும்போது, மக்கள் கவனக் குறைவுடன்—வேறு உரையாடலில் ஈடுபட்டிருந் தார்கள். ஆனால் அவர் மேடை ஏறி, தலைவரவர்களே, தோழர்களே, தாய்மார்களே என்று விளித்து—பக்க வாட்டத்தில் திரும்பித் திரும்பிச் சுழலும் மின்விசிறி போல் இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாகத் திரும்பியவாறு, அடுக்கு அடுக்காக, தொடர் தொடராக, காரண காரிய விளக்கத்தோடு பேசத் தலைப்பட்டவுடன், கூட்டமே வாய் பிளந்து—வேறு எதிலும் கருத்தைச் செலுத்தாமல் அவர் உரையைக் கேட்க முற்பட்டது. அவர் பேசிய அந்த முறை, மாற்றுக் கட்சினரையும் வியப்பில் ஆழ்த்தியது. ஒலிபெருக்கி இல்லாத அக் காலத்தில்—நாலா பக்கமும் குழுமி இருந்த மக்கள் தெளிவாகக் கேட்டு மகிழ்ந்தனர். கூட்டம் கலைந்து செல்லும்போது, அனைவரும் அவர் பேச்சைப் பற்றி—வியந்து உரையாடியவாறே சென்றனர். அந்தக் கூட்

டத்திற்கு எனது தந்தையார் என்னையும் அழைத்துச் சென்றிருந்தார். இளமையில் நான் கண்ட அந்தக் காட்சியை இன்னும் மறக்க முடியவில்லை.

1942-ல் தில்லை நகரில் ஒரு பொதுக் கூட்டம். அக்காலத்தில் முசுலீம்களை இழிவு படுத்திப் பேச விரும்பிய காங்கிரசார் அவர்களைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்று சாடுதற்கு—மீர்சாபர் பரம்பரை என்று பேசி வந்தனர். அதிலுள்ள தவறைப் புலப்படுத்த விரும்பிய அரசியல் அறிஞர் அண்ணா அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அன்று வரலாற்றில் பேராசிரியராக விளங்கிய தம்முடைய முன்னாள் ஆசிரியர் சிக்கா என்னும் சீனிவாசாச்சாரியார் அவர்களது கூற்றையே துணையாக்கி—வரலாற்று ஏடுகளைச் சான்று காட்டி—வங்காள வரலாற்றில் சுராஜ் உட்டௌலா ஆட்சிக் காலத்தில், வெள்ளையர்கட்கு அந்த ஆட்சியைக் காட்டிக் கொடுத்த கெடு மதியாளன் ஓமிர்ச்சந்து என்னும் இந்துவேயன்றி, மீர்சாபர் அல்ல என்று விவரித்துப் பேசினார். அன்று அங்கு கூடியிருந்த மாணவர்கள் யாவருமே தேசிய மாணவர்கள் உட்பட வியப்புற்று நின்றனர். அந்தப் பேச்சின் ஆற்றலையும் என்னால் மறக்க முடியவில்லை.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அறிஞர் அண்ணா சொற்பொழிவாற்ற வேண்டும் என விரும்பி—நான் இலக்கிய மன்றச் செயலாளனாக இருந்த நிலையில் அவர்களை அழைப்பதற்குத் தீர்மானித்தோம். தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய கா. சு. பிள்ளை அவர்கள் உடன் பட்டார். ஆயினும் எதிர்ப்புகள் பல கிளம்பின. துணைவேந்தர் வரையில் சென்று தடுக்க முயற்சித்தனர். அப்பொழுது அங்குத் துணைவேந்தராக அமர்ந்திருந்த பேராசிரியர். ரத்தினசாமி (தற்பொழுது மாநிலங்கள் அவை உறுப்பினராக உள்ளவர்) அவர்கள், தடைகள் பல எழுந்தாலும் என்னுடைய உறுதிமொழிகளை ஏற்றுக் கொண்டு இசைந்தார்.

அண்ணா அவர்களைக் கண்டு இசைவு பெற முற்பட்டேன். நான் வேண்டுகோளைத் தெரிவித்து—நிலைமையையும் கூறினேன். தனக்குப் பெருமை தர வேண்டும் என்பதற்காகத் தான், நானும், எனது தோழர்களும் எதிர்ப்புக் கிடையில், அவரை அழைத்திருப்பதாக எண்ணி—எளிதில் இசையவில்லை. ''மாணவர்கள் தங்கள் பேச்சைக் கேட்கப் பேரவாக் கொண்டுள்ளனர்''—என்றேன். அப்படியிருப்பின் தில்லையிலோ—வேறு இடத்திலோ பேசும் போது வந்து கேட்டுக் கொள்ளலாமே என்றார். நமது கருத்தைப் பரப்புவதற்கு அது வாயிலாகும் என்றேன். அதற்குப் பல்கலைக் கழக மேடையைப் பயன்படுத்தித் தானா ஆகவேண்டும்? என்றார். கடைசியாக, தங்களைப் பல்கலைக் கழக மேடையில் பேசச் செய்து, கேட்டும், கண்டும் மகிழ்வதற்குப் பலரும் விரும்புகின்றனர், அதற்காவது இசைய வேண்டும் என்றேன். ஒருவாறு உடன் பட்டார்கள்.

பல்கலைக் கழகத்திலோ—பண்டிதர்களிலே சிலரது எதிர்ப்பு; மாணவர்களிடையே மாறுபாடு: துணைவேந்தருக்கோ கவலை; எனக்கும் என் நண்பர்களாக இருந்த சிலருக்குமோ, எப்படியும் நடத்திக் காட்டவேண்டும் என்னும் பேரவா. அண்ணா அவர்கட்கோ—தம்மைச் சார்ந்து நிற்கும் மாணவருக்கு ஏதேனும் தொல்லை விளையுமோ என்னும் எண்ணத்தால் பிறந்த தயக்கம்.

கடைசியாக அண்ணா அவர்களும் இசைந்து வந்தார். பல்கலைப் புலவர். கா. சு. பிள்ளை தலைமை ஏற்று அண்ணாவை வரவேற்றுப் பாராட்டினார். பட்டமளிப்பு விழாவன்று மட்டுமே பொங்கி வழியும் சீனிவாச சாத்திரி மண்டபம் அன்று நிறைந்து விளங்கிற்று. அண்ணா பேசத் தொடங்கினார். உலகிலே நாகரிகம் பிறந்து வளர்ந்த நதிக்கரைகளிலே எல்லாம் உலவினார். அருவியின் வீழ்ச்சியோ, ஆற்றொழுக்குத்தானோ, தேன்மழையோ, தென்றல் தான் சுழன்று வீசுகிறதோ என்னுமாறு, முழங்கினார். நைல் நதியும், யூப்ரடீஸ் டைக்ரீஸ் ஆறுகளும், தேம்சும் வால்காவும் வடிவு கொண்டு ஓடின. சிந்துநதியின் கரையில் வளர்ந்த வரலாறும்—கங்கைக்கரை நாகரிகமும் விளக்கியுரைக்கப் பட்டன. அதனை அடுத்து, வளங்கொழிக்கும் காவிரியும், வைகையும், அதன் மருங்கிலே வளர்ந்த பண்பாடும் நாகரிகமும், அதன் தொன்மையும் தனித் தன்மையும், அவை தமிழர்க்கே உரிய தனிப் பெருமைகளாக இலங்குவதையும், அந்த நாகரிகத்தில்—அதன் உயர்ச்சியில் பிறந்த முத்தமிழ்க் காவியமாம் சிலப்பதிகாரம் காட்டும் தமிழகத்தையும், அந்தத் தமிழகத்தின் மாவீரன் சேரன் செங்குட்டுவன் பெற்ற வட திசை வெற்றியையும், விவரித்துக் கொண்டே சென்றார். உரையின் போக்கிலே—உள்ளத்தைப் பறிகொடுத்து

தின்றது மண்டபம். உரையை முடித்தார். நன்றி கூறும் வாய்ப்பு எனக்கு. எவ்வளவு இனிய கடமை! அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவரிடையே ஏற்பட்ட—எழுச்சி, அண்ணாவின் பேச்சு விளைவித்த பேரார்வம் இன்றும் என்னால் மறக்க முடியாததாகவே உள்ளது.

மறுநாள்—அதே மண்டபத்தில், உலகம் பழையதும் புதியதும் என்னும் தலைப்பில் அவர் நிகழ்த்திய ஆங்கில உரை—தமிழர் அல்லாத பிற ஆசிரியர்களையும், மாணவர்களையும் ஈர்த்தது. அண்ணா அவர்களுடைய உரையால் அவரிடம் பிறந்த மதிப்பு—பின்னர் பெரியார் அவர்களை, அழைக்கவும் ஏது வாயிற்று. அண்ணா அவர்கள்—'கேட்டார்ப் பிணிக் குந்தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்' என்னும் குறளுக்கே—உரையாக நின்றார்கள் என்றால் மிகையாகாது.

சிதம்பரத்தில் அண்ணா அவர்களும் அவரது அருமை நண்பர்கள் பலருமாக 'சந்திரோதயம்' என்னும் சமூகச் சீர்திருத்த நாடகத்தை நடத்தினர். அந்நாடகத்தில் அவர்—ஒரு வஞ்சக மடாதிபதியைத் தந்திரமாக விரட்டி, அவருடைய பொன்னையும் பொருளையும்—பொது நலத்துக்குப் பயன்படுத்துவதற்கு விரும்பி—அதைச் செயல்படுத்துதற்குத் துணையாக ஒரு சமீந்தாராக வேடமிட்டு வருவார். அவ்வாறு சமீந்தாராக அவர் வேடமிட்டுள்ள நிலையில், தான் செய்த குற்றத்துக்காக—தன்னைக் காவலர் கைது செய்யும் நிலை ஏற்படு முன்னரே—தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்து நஞ்சருந்திட முனைகிறார். அந்தக் காட்சியைக் கண்டு கொண்டிருந்தார்—திருவொற்றியூர், டி. சண்முகம் அவர்கள். அதைப் பார்த்துக் கொண்டிருக்கவே முடியவில்லை அவரால். அண்ணாதுரை எம். ஏ. பட்டம் பெற்றவர். சமீந்தாராக இருப்பது பொருத்தமாகவே இருக்கிறது. அவர் செய்ததில் என்ன தவறு மடாதிபதியைக் கொள்ளையடித்தது குற்றமா? எனவே அவர் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது வேண்டாம் தற்கொலை! நிறுத்துங்கள்' என்று உரத்துச் சொல்லி விட்டுக் கண்ணீருடன் அமர்ந்தார்.

அண்ணா அவர்கள் நடித்த போது அது 'நாடகம்' என்பதையே மறந்திட வைக்குமாறு இயற்கையாக அமைந்து விட்டது, அவரது நடிப்பு—அனைவரையும் கண்ணீர் சிந்த வைத்தது என்றால், உண்மை என்றே நம்பிக் கலங்க வைத்தது என்றால், அந்த நிகழ்ச்சியைக் கண்ட யாரால்தான் அதை மறக்க முடியும்?

நூறுநூறாண்டு நோற்ற தவத்தின்
பேருய்நாட்டிற் பிறந்த தலைவனே! வாழ்க!



# வேப்பிலை

வேப்பிலையை மந்திரிக்கப் பயன்படுத்துவார்கள்— வைசூரி வந்தால் அந்த இலைகளின் மேல் படுக்கவைப்பார்கள். வீட்டின் முகப்பிலே வைப்பார்கள். வேப்பம் பூவில் பச்சடி செய்வதுமுண்டு. பொதுக் கூட்டங்களில் விளக்கைசுற்றி வட்டமிட்டு பேச்சாளியின் வாயிலே புகலாமா என்று குறி பார்த்துக் கொண்டிருக்கும் விட்டில் பூச்சிகளை விரட்டுவதற்காக பந்தல் தூண்களில் கட்டுவதுண்டு (வேப்பிலை வாசனைக்குபூச்சிகள் சேராது) அதன் சாரெடுத்து உடலில் தடவிக் கொள்வதுமுண்டு.

ஆனால் அந்த வேப்பிலையை விருந்தாக வைத்த புண்ணியவான் யார்? அது எந்த ஊரில், எப்போது நடந்தது என்று கேட்கத் தோன்றும்.

படியுங்கள் :

வட ஆற்காடு மாவட்டத்தில் போளூருக்கும் செங்கத்திற்கும் இடையிலே உள்ள ஊர், அதன் பெயர் சந்தைப் புதுப்பாளையம். நேரம்: திராவிடர் கழகம் நாம் பிரிவதற்கு ஐந்தாண்டுகளுக்கு முன்பு. அந்த பகுதியில் பஸ்கள் ஓடாத நேரம். திருவண்ணாமலையிலிருந்து காஞ்சி (கடலாடி காஞ்சி)க்குப் போய் அங்கிருந்து மாட்டு வண்டியில் தான் போக வேண்டும். அப்போது அந்த ஊர் திராவிடர்க் கழகத் தலைவர் குப்புசாமி தீவிர சுயமரியாதைப் பற்றுடையவர். அவர் இளவல் தீவிர காங்கிரஸ்காரர். பாகம் பிரியாத ஏககுடும்பம். வீட்டு முகப்பில் இரண்டு அறைகள். ஒன்றில் பனகால் அரசர், பொப்லி ராஜா, பன்னீர் செல்வம். இலஞ்சி ஐ. சி. ஈஸ்வரம் பிள்ளை. நாகை காயா ரோகணம், அழகிரி, பெரியார் படங்களிருக்கும். மற்றொரு அறையில் காந்தியார், நேரு, படேல், சரோசினி போன்றவர்கள் படங்கள் இருக்கும், அந்த ஊரில் ஆடம்பரமான வரவேற்பு பெரியாருக்கு! நானும், விபத்தில் நம்மை விட்டுப் பிரிந்து விட்டாரே மைத்துனர் சுப்ரமணியம் அவரும் பெரியார் காரை ஈரோட்டிலிருந்து மாறி மாறி ஓட்டிக் கொண்டு காஞ்சிக் கடலாடி வந்து சேர்ந்தோம். அங்கே இரட்டை மாட்டு வண்டி. திண்டும் மெத்தையும் போட்டு தயாராக இருந்தது. இரண்டு மூன்று நாட்களாக மழைபெய்து வழி சேறும்சகதியுமாகஇருந்தது. இதில் தான் ஏமுமைமல் போய்ச் சேர்ந்தோம் ஊர் முகப்பிலேயே மேளதாளங்கள், அதிர் வேட்டுகள், ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. ஐந்து ஆடுகளை அடித்து சுமார் பத்து பேர் சமையல் செய்து கொண்டி

# விருந்து

சிந்தனைச்சிற்பி சி.பி.சிற்றரசு

ருக்கிருர்கள். மேடையில், பெரியாரோடு போகும் போது, எந்த பேச்சாளியும் நீண்ட நேரம் பேச வேண்டிய தொல்லையில்லை யல்லவா? அந்த வழக்கப்படி நான் ஐந்து நிமிடம், போளூர் ஐந்து நிமிடம், எஸ், வி லிங் கண்ணன் ஐந்து நிமிடம், மற்றப்படி பல்லாண்டு பாடி முடிகின்ற வரையில் பெரியார் தான். 180 நிமிடங்கள் ரயில்வே அறிவிப்புப்படி.

தோழர் குப்புசாமி அவர்களின் வீட்டு விருந்தில் உட்கார்ந்தோம் நாங்கள் ஒரு ஆறு பேர் தனியாக உட்கார வைக்கப்பட்டோம், மற்றெல்லாரும் பின் பக்கம், ஏனென்ருல் இவ்வளவு பேருக்கு சாப்பாடா என்று ஐயா (பெரியார்) விடம் திட்டு வாங்குவதுயார்? அதனுல் அவர்கள் எல்லாம் எங்கள் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டு விட்டார்கள், பாவம், அவர்களும் திராவிடர் கழகம்தான்.

கிச்சிடி சம்பா—கண்ணைப்பறிக்கும் அளவில். குழம்பை ஊற்றினுர் குப்புசாமி, வாயில் எடுத்துவைத்தோம், ஒரே கசப்பு! தள்ளி வைத்து விட்டு, ரசம் ஊற்றினுர்கள். கசப்பு, காய் கறி எல்லாம் கசப்பு, காரணம் தெரியவில்லை, ஒரே திகைப்பு. கிலி-சந்தேகம் எல்லாம் ஒன்ருக ஆட்டிக் குலுக்குகிறது, குழம்பு அண்டாவில் கிளறிப் பார்த்தால் ஒன்றும் புலப்படவில்லை, ரசம் வைத்த அண்டாவைக் கொண்டுவந்து வைத்துக் கிளறிபார்த்தால்-கருவேப்பிலைக்குப்பதில் வேப்பிலையைப் போட்டிருக்கிருர்கள். இந்த சமையல் சாமான்களை எல்லாம் யார் வாங்கியது? என்று விசாரணை தொடங்கியது. எல்லாவற்றையும் வாங்கியவர்கள் கருவேப்பிலையை வாங்கமறந்து விட்டார்கள் என்றும், பிறகு கவனம் வந்து எதிர் வீட்டில் போய் கருவேப்பிலைக் கேட்டதாகவும், அந்த வீட்டுக்காரர் ஒரு காங்கிரஸ்காரர் என்றும் கருவேப்பிலைக்குப் பதில், குழந்தைக்கு மந்திரித்து விட்டு வைத்திருந்தவேப்பிலையை எடுத்துக் கொடுத்து விட்டதாகவும், அந்த இலைகள் சுருங்கியிருந்தாலும் நேரம் இரவாகவும் இருந்ததாலும் இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டு பிடிக்க முடியாமல் எல்லாவற்றிலும்,





தயிர் உள்பட தாளிக்க இதையே உருவி உருவி போட்டு விட்டதாகவும் விசராரணையின் முடிவில் தெரிந்தது என்ன பயன். பெரியாருக்கு வந்த கோபம், குப்பு சாமி எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டார். சமையல்காரன் வீடு, நாடகம் விட்ட கொட்டகைமாதிரி யாய்விட்டது. வேறு வழியில்லை, பசி, எங்களை விட பெரியாருக்கு! ஏன், அவர்

தானே மூன்று மணிநேரம் பேசினார். மீசையும் தாடியும் துடிக்கிறது அவருக்கு. வெறும் சோற்றைப் போட்டுக் கொண்டு தண்ணீர் உப்புப் போட்டு கலந்து பழைய மாங்காய் உப்பு ஊறுகாய். அதை வைத்துக் கொண்டு சாப்பிட்டு விட்டு வண்டி கட்டிப்புறப்படப் போகிறோம், தோழர் குப்பு சாமி வந்து ஒரு ஓரமாய், தஞ்சையில் மிராசுதாரர் முன்னால் பண்ணையாள் நிற்பதைப் போல் நடுக்கத்தோடு நின்றார். பெரியார் பார்த்து விட்டார். யாரது குப்பு சாமியா? என்றார், ஆமாய்யா. என்றார் அடக்கத்தோடு! உம் மூஞ்சி, நீபோட்டவேப்பிலே சோத்துக்கு வழியனுப்பவந்துட்டியா! என்று வண்டியில் அமர்ந்தார், நானும், போனாரும் வண்டியில்! முன்னால் தலையில் ஒரு பெட்ரோமேஸ் விளக்கைவைத்துக் கொண்டு நடக்கிறார், வண்டி ஒருமைல் போயிருக்கும். ஏனுங்கோ. இப்போ சோறு போட்டானே எதைகெடுக்கலே? என்று கேட்டார். நான் உடனே சோறும் நீரும். என்றேன், ஏன்? என்றார். இரண்டும் தாளிக்கவேண்டிய வேலையில்லே. அதனாலே என்றேன். அப்போது தான் அவருக்கு சிரிப்பு வந்தது.

### செவியுணவு

''செவியிற் சுவையுணரா
வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்''

குறள் தந்த வள்ளுவர் வாக்கிது.

செவிக்கு உணவு வேண்டும் என்று விரும்புகிற எம்மதத்தினராயினும், எச்சமயத்தினராயினும், எக்கட்சியினராயினும், எப்பொருள் பற்றியேனும் செவி மடுக்க வேண்டுமெனில் அறிஞர் அண்ணா அவர்கள் பேச்சைக் கேட்பர்-பேச்சை அவர் வளர்த்தாரா—அல்லது அவரை பேச்சு வளர்த்ததா என்றால் இரண்டுமில்லை. அவரும் வளர்ந்தார்;பேச்சும் வளர்ந்தது.

நம்மோடு வரும் நிழல் நாம் அழைத்தா வருகிறது? இல்லை. கரடு முரடான கற்களை, நீரருவி உருட்டி உருட்டி கூழாங்கல் ஆக்கி விடுவதைப் போல் பேசிப் பேசி எல்லாரையும் தன்பால் இழுக்கும் ஆற்றல் அவருடைய தமிழ்ப்பேச்சுக்கும் ஆங்கிலப் பேச்சுக்கும் உண்டு.

ஒரு பேச்சாளிக்கு எவ்வளவு நினைவாற்றல், சொற்களின் கம்பீரம், நளினம், முடுக்குக் கேள்வி, மேற்கோள், தட்டுத் தடுமாறாத சொல்லோட்டம், இவ்வளவு ஒன்று சேர்ந்த உருவமாய் நிற்கிறார் அவர். பலபேர் அவருக்குப் பின்னால் பேசப் பயப்படுவார்கள்; ஆனால் அவர் யாருக்கு முன்னாலும் பேசப் பயப்பட மாட்டார்.

ஆனால் அவர் அரசியலில் இருப்பதால் தான் தூற்றப் படுகிறாரா என்று பார்ப்போம்.

''பேசாமலிருப்பவனையும் தூற்றுகிறார்கள், அதிகமாக பேசுகிறவனையும் தூற்றுகிறார்கள். மிதமாக பேசுகிறவனையும் தூற்றுகிறார்கள் மக்கள் தூற்றாத எவனுமே உலகில் இல்லை''என்றார் புத்தர் அந்த காலம் தந்தி தொலைபேசி, டேப்ரிக்கார்ட், ஒலிபெருக்கி போன்ற சாதனங்கள் இல்லாத காலம். சொன்னது புத்தன். அரசமாளிகையிலே இருந்து அரசமரத்தடிக்கு வந்தவன். அவனையே தூற்றினார்கள் என்றால், இன்று மக்களாகப் பார்த்து கொடுத்த அரச போகத்தை அட்டையிலும் கேடாய்ப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் தூற்றுவதில் வியப்பென்ன. அதுவும் திரு காமராசர், அண்ணாதுரைக்கு என்ன அரசியல் தெரியும் என்று தூற்றும் அளவுக்கு காலம் கெட்டுப் போயிருக்கிறது. பாருங்கள். இதைப் படித்த அனைவருமே சிரித்தார்கள். ஏனெனில், சிரிக்கத் தெரிந்தவனே மனிதன் தான், பத்து பேர் சிரிக்கிற மாதிரி நடந்து கொள்பவனும் மனிதன் தான். நாம் முதல் ரகத்தை சேர்ந்தவர்கள். அவர் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர். ஏனெனில் புகழுக்கு மயங்காதவன் எவனாவது இருக்கிறானா என்பதை சோதிக்க ஜூலியஸ் சீசரைப் பார்த்து, சீசரே நீர் புகழை விரும்புவதில்லையல்லவா? என்று காஷியஸ் கேட்ட போது, இப்படி சொன்னதையே புகழ்ந்ததாகக் கருதி சீசர் உதட்டின் ஓரத்திலே சிரித்துக் கொண்டான், என்கிறது வரலாறு. அவன் செகமஞ்சப் போரிட்டான். புகழுக்கு முற்றிலும் தகுதியுடையவனே. இவர் (காமராசர்) எந்த புகழை, மத்தியதரைக் கடலுக் கப்பாலிருந்து, செங்கடல், கருங்கடல், இந்துமா கடல், சீனக்கடல், அரேபியக்கடல், அட்லாண்டிக் கடலுக் கப்பாலிருந்து வர மறுத்த புகழை வாளால் கொண்டு வந்து சேர்த்தார்?

சொர்க்கலோகம் போயும் சொறி பிடித்தவன் காலில் வீழ்ந்த மாதிரி, ரஷ்யாவுக்குப் போய் வந்தும் பொறுப்பும் நிதானமும் இல்லாமல் ஆண்டி மடத்து சண்டியர் ஆணைக்கால் சோணங்கியின் தரம்தான் வருகிறது! என்ன

(தொடர்ச்சி 64-ம் பார்க்க)

சங்கராந்தி என்று கொண்டாடப்பட்டு வந்த பொங்கல் பண்டிகையை திராவிடர் திருநாள் என்று மாற்றி யமைத்த பெருமை நம் அருமை அறிஞர் அண்ணா அவர்களையே சாரும். ஏறத்தாழ இருபது ஆண்டுகட்கு முன்னுள் முதன் முதல் விழாவில் கலந்து கொள்ளும்படி அழைப்பு அனுப்பியிருந்த அறிஞர் அண்ணா அவர்கள் தங்கள் வீட்டிலேயே தங்கவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். இந்த அழைப்பினை ஏற்று பூரிப்பு தாங்காமல் நானும் எனது துணைவரும் காஞ்சி சென்ருேம்.



# மறக்க முடியாது

## டாக்டர் சத்தியவாணிமுத்து

காஞ்சியில் அறிஞர் அண்ணா அவர்கள் திராவிடத் திருநாள் எனற பெயரில் ஒரு வாரத் திருவிழா ஏற்பாடு செய்து அதில் பல இலக்கிய, அரசியல் தலைவர்களும் கலந்து கொள்ளும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த சிறப்பான நிகழ்ச்சியில் எனக்கும் ஒரு நாள் பங்களித்திருந்தார். மூதாட்டிகள் இராமாமிர்தத்தம்மையார் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார். இவர்களுக்குப் பிறகு இளைஞர் சமுதாயத்தில் அதிலும் பெண்கள் அணிவகுப்பில் நான் ஒருத்தியே சென்றிருந்தேன்.

நேராக திராவிட நாடு அலுவலகத்திற்கு சென்று அறிஞர் அண்ணா அவர்களை வணங்கி நின்ருேம். அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் பச்சை நிறத்தில் நீல கட்டம் போட்ட லுங்கியும் வெள்ளை நிற பனியனும் அணிந்து கொண்டிருந்தார்கள். எனக்கு அவரை பார்க்கும்போது வியப்பாக இருந்தது. எங்களைப் பார்த்ததும் மறு வணக்கம் செய்துவிட்டு எதிரில் இருந்த நாற்காலியில் உட்காருமாறு சொல்லி இருவருக்கும் காபி வரவழைத்து தந்தார்கள். பிறகு சிறிது நேரம் பேசிவிட்டு வீட்டிற்கு போவோம் வாருங்கள் என்று வெளியே கிளம்பினர். நானும் எனது துணைவரும் வெளியில் வந்தோம்.

வெளியில் ஒற்றைமாட்டு வண்டி ஒன்று நின்று கொண்டிருந்தது. வண்டி சிறிய அளவில் மிக அழகாக பளப்பளப்பான வெள்ளி நிற பூண்கள் போடப்பட்டிருந்தது. அதற்கேற்ற துடிப்பான காளைமாடு பூட்டப்பட்டிருந்தது. அண்ணா அவர்கள் ஆணையிட நானும் என் துணைவரும் அவ்வண்டியில் ஏறி அமர்ந்தோம். வேறுயாராவது ஓட்டிச் செல்வார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த எங்களுக்கு மேலும் வியப்புத் தரும் வகையில் அறிஞர் அண்ணா அவர்களே அதில் ஏறி அமர்ந்து வண்டியை ஓட்ட ஆரம்பித்

தார்கள். எங்கள் மூவரைத் தவிர வண்டியில் யாரும் உட்காரவில்லை. உட்கார இடமும் கிடையாது. அவ்வளவு சிறிய வண்டி. அண்ணா அவர்கள் வாலை முறுக்கி மாட்டைத் தட்டி விட்டதும் அந்த சின்னஞ்சிறு காளை துள்ளி குதித்து ஓடியது எனக்கு சிரிப்பும் மகிழ்ச்சியும் தாங்க முடியவில்லை. அண்ணா எல்லாக் கலைகளிலும்வல்லவராக இருக்கிறாரே என்று வியந்தேன். அவர்கள் வண்டியோட்ட நாங்கள் அமர்ந்து சென்ற காட்சி என் வாழ் நாளிலேயே மறக்க முடியுமா? என்னை சமுதாயத்திலுள்ள பள்ள மேடான பாதைகளிலிருந்து பத்திரமாக அழைத்துச் சென்று இன்று ஒரு அரசியல் வாதியாக ஏற்றம் பெறச் செய்தவர் அறிஞர் அண்ணா அவர்கள். மிக எளிய முறையில் ஆரம்பித்தஎன் பயணம் இன்று மக்கள் போற்றும் தி. மு. கழகத்தின் மிக முக்கியமான பதவியான கொள்கை பரப்புச் செயலாளர்பதவியில் அமர்த்தியிருப்பது ஒரு பெரிய வெற்றியல்லவா? இந்த வெற்றி அறிஞர் அவர்களையே சாரும். அந்தப் பயணத்தை நாள் என்றும் மறவேன். ○

---

(62-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யலாம். சட்டியில் எதுவோ அதுதான் அகப்பையில்!

அறிஞருக்கு அரசியல் தெரியாதாம். இப்படி சொன்னாலாகிலும் அரசியல் பேச மாட்டாரா? கொஞ்சம் அதிலிருந்து எடுத்துக்கொள்ளலாமே—என்ற எண்ணந்தான். மரமேறி பழம் பறிக்கத் தெரியாதவன் என்ன செய்வான்? மரத்தை உலுக்குவான், ஒன்று இரண்டு விழாதா என்று. அங்கே அரசியல் என்ற ஐந்தெழுத்துக்களே. இங்கே அதன் மணிமாடம். திரு காமராசரை ஒன்று கேட்க வேண்டுமென்று எனக்கு நெடு நாட்களாக ஆசை. அதாவது:— Congress இது ஆங்கிலச் சொல், ஆங்கிலம் வேண்டாமென்கிற அவர், இந்த Congress என்ற ஆங்கில வார்த்தைக்கு தமிழ் என்ன?

அறிஞர் அண்ணா அவர்கள் கூட சொல்ல வேண்டாம், அவரிடம் அரசியல் பால பாடம் படித்த தொண்டனைச் சொல்ல வைக்கிறோம்.

இருபதாம் நூற்றாண்டின் சொல்வேந்தர் அவர். அவருக்கு முன்னும் இத்துணைக் கண்டத்தில் அப்படி ஒருவர் பிறந்ததில்லை. அவருக்குப் பின்னும் அப்படி ஒருவர் தோன்றுவது எந்நாளோ! காலமே, ஞாலமே நீதான் பதில் சொல்லவேண்டும்.

''சிறுபான்மை கட்சியினரின் சிந்தனையையும், அவர்கள் கருத்துச் செல்வதையும் அடக்கினால், அது சமூகம் முன்னேற்ற மடைய முடியாமல் தடுத்து இறுகிப் போகும்படி செய்துவிடும். சிறுபான்மை கட்சியின் அனுபவத்தினால் பெரும்பான்மையோரும் ஊக்கம் அடைகின்றனர். மனித உள்ளம் தன்னைப் பரிசோதனை செய்து கொள்வதற்காக நேர் எதிரான அபிப்பிராயங்களைப் பெற வேண்டியது அவசியம்,'' என்று வெண்டல்வில்கி கூறியிருப்பதைப் போல் நீங்கள் ஊக்கம் அடைய, அரசியல் அறிவு பெற, சமூகம் இறுகிப் போகாமல் முன்னேற்றமடைய இன்று படையை நடத்திச் செல்கிற அறிஞர் அண்ணா அவர்களிடம் அரசியல் பாடத்தைப் பெறுங்கள் பாரத புத்திரர்களே! அவசரத்தால் அறிவு மங்கிப் போகும். நிதானமாய்ப் பேசுங்கள்!

வாழ்க அண்ணா!

## மறுமலர்ச்சித் தந்தை!

அறிஞர் கா. ந. அண்ணா (எம்.ஏ.,எம்.பி.) அவர்களின் நாவன்மையை நாடு நன்கறியும்.

காசு கொடுத்துச் சொற்பொழிவு கேட்கும் நிலையை உண்டுபண்ணிய பெருமை அவரையே சாரும்.

சொற்பொழிவுக் கூட்டங்களை இசையரங்கு போல் கேட்டின்புறும் நிலையை உண்டாக்கியவரும் அவரே.

'சொற்பொழிவு மறுமலர்ச்சித் தந்தை' என்று அழைக்கும் பெருமைக்குரியவராவார்.

—பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார்
('குறள் நெறி', 1–12–65)

உதவி: அரங்கநாதன்
சென்னை-2